Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

பெப்.22-28,1998

ரூபா 11/00

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 245



## சுற்றி வளைப்பு 3 கட்டங்கள்



## விரட்டப்பட்ட நீதி

## மூடப்படும் கதவுகள்

## அவசியமான ஆங்கில உரை

## பகை என்னும் உறவு

## சிம்ரான் விடு தூது

# முரசம்

## அவசியமான ஆங்கில உரை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

சுதந்திரப் பொன்விழாவில்
ஜனாதிபதியின் உரை
ஆங்கிலத்தில் அமைந்ததால்
ஏகப்பட்ட அதிருப்தி!

சிங்கள மொழிப் பற்றாளர்கள்
சீறிச் சினந்துள்ளனர்!

அவர்களின் உணர்வில்
ஓரளவு நியாயம் உண்டு!

எந்தவொரு இனத்திற்கும்
தாய் மொழியும்
தாய் நிலமும்
இரு விழிகளுக்கு நிகராகும்!

ஆவல் கொண்டோ,
அவசியம் கருதியோ,
ஆயிரம் மொழிகளைக்கூட
அறிந்து வைத்திருக்கலாம்!
அது திறமைதான்!

ஆனால், அந்நிய மொழியை
ஆராதித்தபடி
தாய்மொழிக்கு
தக்க இடம் தர மறுப்பது
பகட்டே தவிர பற்றாகாது!

ஆயினும், ஜனாதிபதி
ஆங்கிலத்தை நாடியது
பகட்டு விருப்பத்தால் அல்ல!

பொன்விழா உரையை
உற்றுநோக்கினால்
ஜனாதிபதியின் சாமர்த்தியம்
நன்கு புலப்படும்!

சர்வதேச அரங்கில்
ஆட்சியாளரின்
சமாதான 'இமேஜ்'
சரியத் தொடங்கியுள்ளது!

மனித உரிமை அமைப்புக்களின்
கண்டனங்கள்,
அரசியல் தீர்வு இழுத்தடிப்பு,
இராணுவப் பின்னடைவுகள்
போன்றன
முன்பிருந்த செல்வாக்கை
முனை மழுங்கச் செய்கின்றன!

தமது 'இமேஜை'
தூக்கி நிறுத்த
அரசாங்கம் செய்யும்
முயற்சிகள் பலவிதம்!

கண்துடைப்புக்கான
விசாரணைக் கமிஷன்கள்,
தேர்தல் வேடிக்கைகள்,
எதிர்க்கட்சிமீது பழிபோடல்
என்று பற்பல விதம்!

பொன்விழா நிகழ்ச்சிகள்
பி.பி.சி.தொலைக் காட்சி
மூலமாக உலகெங்கும்
ஒளிபரப்புச் செய்யப்பட்டன!

உலகைக் கவரும்
முயற்சிகளுக்கு
முன்னுரிமை தரும் அரசாங்கம்
சந்தர்ப்பத்தை தவறவிடுமா?

தாம் எத்தனை தூரம்
தர்ம நியாயம் உள்ளவர்கள்
என்று காண்பிக்க,
ஆங்கிலப் புலமையை
காலமறிந்து- களமறிந்து
பயன்படுத்தினார் ஜனாதிபதி!

தெளிவான சுத்தமான
ஆங்கிலத்தில்
சமாதானச் சூளுரை
செய்திருந்தார்!

இராணுவத் தீர்வை நாடியும்,
இராணுவ வெற்றிகளை நம்பியுமே
இன்றைய அரசின்
நாட்கள் நகர்ந்து வருகின்றன!

பல்லாயிரம் படைகள்
களத்தில் நிற்கின்றன!
போரின் அவலங்கள்,
அகதிப் பெருக்கங்கள்
பற்றி அக்கறையில்லை!

நாளும் பொழுதும்
இனரீதியான
பாதுகாப்புக் கெடுபிடிகள்
என்றுமில்லாத அளவுக்கு
பெருத்துக் கொண்டிருக்கின்றன!

இனப்பிரச்சனைக்கு மட்டுமல்ல,
அன்றாடப்பிரச்சனைகளுக்கும்
தீர்வு காணக்கூடிய
காத்திரமான பதவியில்
அமர்ந்திருக்கிறார் அம்மையார்!

ஆனால், தீர்வோ
தொலை தூரம் போய்விட்டது!
தமிழ்பேசும் மக்கள் முகம்கொடுக்கும்
இனப் பிரச்சனைகள்
தீராத அளவுக்கு வளருகின்றன!

நம்பிக்கையான அறிகுறிகள்
எதனையும் நாம் கண்டிலோம்!
இந்நிலையில்
சமாதானச் சூளுரை
யாருக்காக?

உலகுக்காக!
உலக உதவிக்காக!
தொடர்ந்து போர் நடத்த
தேவையானவற்றைப்
பெறுவதற்காக!

எனவே-அத்தகைய
உரையை
ஆங்கிலத்தில் நிகழ்த்தியதுதான்
மெத்த மெத்தச் சரி!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## கீழ்ப்படிவு!

சமூகத்தில் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும், குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றிவிடும், கடமை புரியும் காரியாலயத்தில் நன்மதிப்பு மறைந்துவிடும், என் றெண்ணி பாவக்காரியங்களுக்கு தன்னை விலக்கி வாழ நினைக்கின்றவர்களைக் காணுகின்றோம்.

பாவச்சேற்றில் மூழ்கிப் போன நம்மை தூக்கியெடுத்து, தகுதிப் படுத்தி, பாதுகாத்து, பராமரித்து, அன்பு செலுத்தி, அர வணைத்து வரும் கடவுளுக்காக நம்மை கீழ்ப்படுத்தாமல், உலக ஆசைகள் உள்ளத்தில் தேங்கிக் கிடக்க, பாவ சுபாவத்தின் தன்மைகள் மடியப் படாமல், மனிதர்களின் மதிப்பு மரியாதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து; பரிசுத்தமானவர்களாக நம்மை இனங்காட்டிக் கொள்கிறோம்.

"நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்." (சங் 99:5)

எனவே, நாம் எங்கும் எவ்விடத்திலும், எக்காரியத்திலும், எச்சூழ்நிலையிலும் கடவுளுக்கு முற்றிலும் எம்மை ஒப்புக் கொடுத்து; முக்கியத்துவம் கொடுத்து பரிசுத்தமாக வாழ்வதே கீழ்ப்படிவின் இலட்சணமாகும். நம்முடைய சிந்தையிலும் செயற்பாட்டிலும் ஆண்டவர் இயேசுவுக்கே முக்கியத்துவம் கொடுத்து முற்றுமான கீழ்ப்படிவின் பிள்ளைகளாக மாறுவோமாக.

சகோ.எஸ்.யேசுநாதன், தளவாய் செங்கலடி.

## நான்கு காரியங்கள்!

நான்கு காரியங்கள் அழகானவை. ஆனால் பிறிதொரு நான்கு காரியங்கள் அதி அழகானவை.

நாணம் ஆண்களுக்கும் அழகு; ஆயினும் பெண்களுக்கு அதியழகு. ஒவ்வொரு மனிதனுக்கும் நீதம் அழகு. ஆயினும் அது தலைவர்களுக்குப் பேரழகு. பாவமன்னிப்பு (தௌபாச் செய்தல்) வயோதிபர்களுக்கு அழகு. ஆயினும் அது வாலிபர்களுக்கு மிக அழகு. கொடை செல்வந்தர்க்கழகு. ஆயினும் அது ஏழைகளுக்கு வெகு அழகு.

நான்கு காரியங்கள் கெட்டவை. ஆயினும் பிறிதொரு நான்கு காரியங்கள் மிகவும் கெட்டவை. வாலிபர்கள் பாவம் செய்வது கெட்டது- அது வயோதிபருக்கு அதிகம் கெட்டது. பாமரன் உலக மாயையில் உழன்று கிடப்பது கெட்டது. ஆயினும் அது அறிஞருக்கு மகாகெடுதி. தெய்வ வழிபாட்டில் சோம்பிக் கிடப்பது யாவருக்கும் கேடு. ஆயினும் அது கற்றவருக்கும், கற்பவருக்கும் ரொம்பக்கேடு. பெருமை பணக்காரர்களுக்கு கெட்டது. ஆயினும் அது ஏழைகளுக்கு மிகக் கெட்டது.

(நபிகள் நாயகம் ஸல்)

ஆதாரம்: அறிவுச் சுரங்கம்

தொகுப்பு: இப்திமா, மடவள.

## கவிதைப் போட்டி இல.242

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்.

### பரிசுக்குரிய கவிதை

### இடுகுறிகள்!

குண்டுச் சத்தம்
காதைப் பொத்தும்;
கோரக் கொலைகள்
கண்ணைப் பொத்தும்;
இரும்புச் சட்டம்
வாயைப் பொத்தும்;
இன்றைய நிலையின்
இடுகுறிகள்!

என்.தியாகராஜா- கொழும்பு-02.

### உயிர் காக்க....

கண்ணிருந்தும் குருடராய்,
வாயிருந்தும் ஊமையாய்,
காதிருந்தும் செவிடராய்
உயிர் வாழ மட்டும்,
இலவசப் பயிற்சியோ?

திருமதி ராஜேஸ்வரி
கிருஷ்ணன்-பூவரசன்குளம்.

### வென்றவர்கள்....

அவர்கள் இனியுன்னைப்
பார்க்க மாட்டார்கள்!
உன்னோடு பேசமாட்டார்கள்!
உன் குறை கேட்க மாட்டார்கள்!
ஏனெனில்,
அவர்கள் தேர்தலில் வென்றவர்கள்!

அ.சந்தியாகோ, கண்டி.



### இலட்சியம்

நம்மினம்
நாசமாய்ப் போனாலும்
நம்மிலட்சியம்
இதுவன்றி வேறில்லை!

ஏ.எச்.எம் மௌஜூத்-
ஹிஜ்ராபுரம்.

### ஏன்?

காணக் கண் கூசுதே;
காது கேட்க மறுக்குதே
'மாணொக்க வாய்திறக்க
மாட்டுதே!-வீணுக்கேன்,
வீசுகின்ற குண்டு மழை?

மு.பெ.ஜெயராஜ்- ஹொப்டன்.

### சத்திய சோதனை

இந்தச் சத்திய சோதனை
இன்று சாத்தியமாகுமா?

கமலரம்யா-கல்லடி, மட்டுநகர்.

### நீதிமொழி?

நடக்கின்ற நாடகத்தை
கண்ணாலே காணாதீர்!
காதாலே கேளாதீர்!
வாழ விரும்பினால்
வாய்திறந்து பேசாதீர்!
நிலைத்து வாழ்வதற்கு
நீதி மொழிவேறில்லை!

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### மிஞ்சினால்...

நன்மையைப் பார்க்காதே!
உண்மையைப் பேசாதே!
நல்லதைக் கேட்காதே!
மிஞ்சினால், நீ விழுவாய்!
புலியெனச் சொல்வார்.

இ.லலீந்திரன்- செங்கலடி.

### காரணம்

மகாத்மாவின்
குரங்கு பொம்மைகள்
மனித
பொம்மைகளாகிவிட்டன...
இங்கு எல்லோரும்
குரங்குகளாகிவிட்டதால்!!


எஸ்.பிரபா-பதுளை

### யதார்த்தம்

எதிர்காலச் சந்ததியின்
ஏற்ற மிகு நடிப்பில்
நிகழ்கால எம் தலைவர்களின்
நிஜ முகங்கள்.

சி.மு.சுந்தரேசன்- மஸ்கெலியா.

## கவிதைப் போட்டி இல.245



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 28.02.1998

முகவரி:
கவிதைப் போட்டி இல.245,
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## தொங்கு மனிதர்கள்

இனிய முரசே,

முரசு வாசகர்களில் நானும் ஒரு இரசிகன், முரசு 239ல் 'தொங்கும் மனிதர்கள்' என்ற படத்துக்குரிய செயலைக் குறித்து 'யாழ்ப்பாண எலக்சனில் சாகசம் காட்டும் நம் கட்சிகளும் உலக சாதனைக்கு விண்ணப்பித்துப் பார்த்து இருக்கலாம்' என்று சொல்லப்பட்டது. 'தொங்கு மனிதர்கள்' தங்கள் தங்கள் உயிரைத்தான் பணயம் வைத்து சாதனை படைக்கின்றார்கள், இவர்களோ இலங்கைத் தமிழ் மக்களின் மானத்துடனும், உயிர்களுடனும் விளையாடுகின்றார்களே தவிர, சாதனை படைக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை.

ஆ.செ.செல்வநாதன், செட்டிகுளம்.

அன்பின் முரசுக்கு!

நீ தாங்கி வரும் அத்தனையும் சூப்பர். அதிலும் ரசிகன் தரும் 'பூலான்தேவி', 'மேக்கப் புன்னகை' 'காதிலை பூ கந்தசாமியார்' போன்றவை எம்மை அசத்துகின்றன. இதனைத் தாங்கிவரும் முரசுக்கு பாராட்டுக்கள்.

கோ.சுதா, கொம்மாதுறை.

பல கொலைகளைப் புரிந்து கொள்ளை ராணியாகத் திகழ்ந்தபின், அரசியலிலும் காலூன்றிய பூலான் தேவியின் பூர்வீக சரிதையை மிகச் சிறப்பாகத் தந்தது, ஒரு திகிலூட்டக்கூடிய ஒரு திரைப்படத்தை இரசிப்பது போன்ற மன உணர்வையும், சிறந்த நாவலொன்றைப்படிப்பது போன்ற ஒரு இன்பத்தையும் தந்திடும் என் இனிய முரசே! நீ தந்திடும் ஒவ்வொரு அம்சமும் பிரமாதம்.. பிரமாதம்.

வை.தாஹிர் கரீம், கல்முனை-06.

அன்பின் முரசுக்கு!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் கலக்கலாக உள்ளன. காதிலை பூ கந்தசாமியாரே கலக்குகிறார். 'இனி என் முறை'யும் சூப்பர். முரசே வாரத்தில் ஒரு நாள் உன் வருகைக்காக ஏங்கித் தவிக்கும் உன் வாசகன்-

க.ஜெயப்பிரபு, புத்தளம் வீதி, முந்தல்.

சுதந்திரவிழா வன்று ஆதி முதல் அந்தம் வரை நன்றாக இரசிக்கத் தக்க சிங்களக் கலாசார நிகழ்ச்சிகளைக் காட்டிக் காட்டி தொலைக்காட்சிகள் புண்ணியம்தேடிக்கொண் டன. விழாக் குழுவினரையும் நன்றாகப் பாராட்டலாம். ஏனென்றால் வடக்கு-கிழக்குக்கு பொன் விழாவன்று ஒதுக்கப்பட்ட இடத்தை உற்று நோக்கினால் வெறும் பூஜ்ஜியமாய்த் தெரிகிறதே!

கே.எஸ்.புவன், அக்கரைப்பற்று.



மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:– 1772, கொழும்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படமுடிந்தவர்கள்:

- ★ எம்.ருத்ரா, சின்ன செல்வகந்த.
- ★ அ.பிரமிளா, யூலி, பசறை.
- ★ தமிழினியன், மண்டூர்.
- ★ அ.சுதர்சனன், நாவற்குழி-யாழ்.
- ★ இ.ராமேஷ், முந்தல்.
- ★ பி.கஜன், வவுனியா.
- ★ வெ.கண்ணதாசன், தெடிவனை.
- ★ மகேஸ்வரி ராமதாஸ், வத்தேகம.
- ★ எம்.ஏ.எம்.றமீம், குவைட்.
- ★ செல்வி.ஏ.விஜிதா, கொழும்பு-13.
- ★ செ.சீலன், குவைட்.
- ★ ஜெயக்குமார், சாவகச்சேரி.
- ★ எஸ்.எம்.எம்.வஸீர், இலண்டன்.
- ★ நிலாவெளி கைலைநாதன், பாரிஸ்-ஃபிரான்ஸ்.
- ★ உ.தயாளினி, கொழும்பு-04.
- ★ எஸ்.டி.செல்வம், வெலிமட.
- ★ பி.குருபரன், கொழும்பு-13.
- ★ என்.சாரங்கன், கனடா.
- ★ எம்.எம்.காஜா, துபாய்.
- ★ கே.ரமணன், இலண்டன்.
- ★ எஸ்.இந்திரகுமார், அவுஸ்திரேலியா.
- ★ ச.விஜயலட்சுமி, ஜெர்மன்.
- ★ மா.தயாசேகர், நோர்வே.
- ★ உ.பிரதாபன், டென்மார்க்.
- ★ கி.ஜெயராஜ், ஃபிரான்ஸ்.
- ★ எஸ்.சிவநாதன், சிங்கப்பூர்.
- ★ ஆர்.ரட்ணராஜா, கண்டி.
- ★ ஜெ.அசோகன், கனடா.
- ★ கே.சத்தியேந்திரன், அமெரிக்கா.
- ★ எஸ்.ஸ்ரீகாந்தா, கனடா.

## நிராகரிப்பு அல்ல!

அன்புள்ள முரசுக்கு!

யாழ் தேர்தலின் பின்னர் இராஜதந்திரியார் அலசித் தந்த கருத்துக்கள் பிரமாதம். கூட்டணியின் வெற்றி போராளிகளை மக்கள் நிராகரித்தமைக்கான சான்று அல்ல. அது தவிர, போட்டியிட முன்னாள் போராளிகள்மீது மக்களுக்குள்ள வெறுப்பு போராட்டம்மீதான வெறுப்பு ஆகாது. குறிப்பிட்ட இயக்கங்களின் சுயரூபம் தெரிந்தமையால் ஏற்பட்ட வெறுப்பேயாகும். அவ்வாறு இருந்தும்கூட கூட்டணியைவிட முன்னாள் போராளி இயக்கங்கள் பெற்ற வாக்குகள்தான் அதிகம். தவறு செய்தவர்கள் என்று தெரிந்தும்கூட முன்னாள் போராளிகள் என்ற ஒரே காரணத்திற்காக மன்னித்தனர் மக்கள்.

இ.நமச்சிவாயம், யாழ்ப்பாணம்.

## புள்ளிவிபரம்

இராஜதந்திரியார், அரசியல் ஆய்வில் புள்ளிவிபரங்களை வெளியிட்டு யாழ் தேர்தலில் விழுந்த வாக்குகள், பங்கு கொண்ட வாக்காளர் மனோநிலைகள் என்பவற்றை நன்கு உணர்த்தியிருந்தார். நுனிப்புல் மேய்வது போன்று, 50 வீத வாக்களிப்பு என்றும், முன்னுதாரணம் என்றும் கூறுகின்றவர்களுக்கு சாட்டையடி.

எம்.பவானந்தன், வவுனியா.

## பத்திரிகைப் பாய்ச்சல்

முரசே!

கொழும்பு சிங்கள மொழிப் பத்திரிகை ஒன்று 'முரசு' உட்பட சில தமிழ்ப் பத்திரிகைகளுக்கு சேறு பூசியிருக்கிறது. பிரபல தமிழ்ப் பத்திரிகைகள் எதுவும் சக பத்திரிகைகளை பெயர் குறிப்பிட்டு விமர்சிப்பதே இல்லை. அது பத்திரிகையுலக நாகரிகமும் இல்லை. ஆனாலும் குறிப்பிட்ட பத்திரிகைக்கு தமிழ் பேசும் மக்களின் சார்பான நியாயங்கள் எல்லாம், புலிகள் பக்க நியாயங்களாகவே தெரிகிறது. காமாலைக் கண்களுக்கு அப்படித்தானே தெரியும். தலதா மாளிகை குண்டுத்தாக்குதலை முரசு கண்டித்திருந்தது. குறிப்பிட்ட பத்திரிகை கண்டியில் இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டதைப் பற்றி கவலையேபடவில்லை. தமிழ்பேசும் மக்களின் உரிமை வேட்கையை நசுக்குவதில் இப்படியான பத்திரிகைகள் நீண்டகாலமாக முன்னணியில் நின்று வருகின்றன.

எஸ்.இளங்கோவன், புதுளை.

## முத்திரை குத்தல்

அன்பு முரசுக்கு, உன் கவனத்தில் வந்ததோ தெரியவில்லை, சிங்கள மொழிப் பத்திரிகை ஒன்று முரசுக்கு புலிமுத்திரை குத்தியுள்ளது. எந்த முத்திரை குத்தினாலும் முரசு முரசுதானே! முத்திரை முககியமா, முரசின் உள்ளடக்கம் முக்கியமா? குறிப்பிட்ட பத்திரிகையில் முரசின் ஆக்கங்கள், செய்திகள் பலமுறை மறுபிரசுரமானதை நான் பார்த்திருக்கிறேன். முரசு சொன்னால் சரியாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தானே எடுத்து வெளியிட்டனர்? ஒருவேளை சரியானவை அனைத்தும் புலிகளுக்குரியவை என்றுதான் இனவாதிகள் நினைக்கின்றனரோ?

எம்.முஷ்தாக், பேருவளை.

# வன்னியில் தரைநகர்வும் — கடும் மோதலும்!

# புலிகளின் பலமறியும் உத்திகள்

(நமது நிருபர்)

கிளிநொச்சி நகரில் இருந்து புலிகளை முற்றாக வெளியேற்றுவதற்காகவும், புலிகளின் அணிகளை திசை திருப்பவும் ஜயசிக்குறுய் படையினர் நகர்வுகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை மாங்குளம் முற்றுகைக்கு உள்ளாகியுள்ளது என்றும், கனகராயன் குளத்தில் இருந்து மாங்குளம் நோக்கி படையினர் முன்னேறுவதாகவும் செய்திகள் சொல்லப்படுகின்றன. முரசுக்குக் கிடைத்த தகவலும், வன்னியின் பூகோள அமைப்புப் பற்றிய விபரமும் மேற்கண்ட செய்திகள் தவறு என்று காட்டுகின்றன.

வவுனியா-யாழ் சாலையில் புளியங்குளம் பகுதிவரை சென்ற 55 வது படையணியினர், தொடர்ந்து முன்னேற முடியாமல், கிட்டத்தட்ட ஆறுமாதகாலமாக அங்கு நிலைகொண்டுள்ளனர்.

இதேவேளை கனகராயன்குளத்துக்கு கிழக்காக பெரியமடு, கரப்புக்குத்தி பகுதிகளிலும், மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் உள்ள கரிப்பட்ட முறிப்பிலும் 53வது படையணியினர் நிலைகொண்டுள்ளனர்.

வவுனியா-யாழ்சாலையின் மேற்காக இருப்பது புதூர். அங்கிருந்து மன்னகுளம் ஊடாக கனகராயன்குளத்தைச் சென்றடைய 55வது படையணி திட்டமிட்டது. 04.12.97ல் விசேஷ அதிரடிப்படைமீது புலிகள் நடத்திய தாக்குதலால் அத்திட்டம் நிறைவேறவில்லை.



படையினரின் புதிய நகர்வும் புலிகளின் தாக்குதலும்

### புதிய நகர்வு

முன்னைய வியூகங்கள் வெற்றியளிக்காமையாலும், புலிகளின் அணிகளை பல்வேறு முனைகளுக்கு இழுக்கும் தேவைக்காகவும் 15.02.98 அன்று படையினர் புதிய தரை நகர்வு ஒன்றை ஆரம்பித்தனர்.

வவுனியா-யாழ் சாலையில் நிலைகொண்டுள்ள 55வது படையணியும், புதிதாக கொண்டுசென்று இறக்கப்பட்ட அணிகளும் சேர்ந்து வவுனியா-யாழ் சாலைக்கு மேற்காக உள்ள மூன்று முறிப்பை நோக்கிய திசையில் முன்னேறத் தொடங்கின.

மூன்று முறிப்புக்கு சென்றால், மன்னாரில் உள்ள படைகளுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். பின்னர் மன்னார் படையணிகளுடன் இணைந்து மாங்குளம் நோக்கி முன்னேறலாம், என்பதுதான் படையினரின் திட்டமோ தெரியவில்லை.

வவுனியா-யாழ் சாலைக்கு மேற்காக சுமார் 20 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது மூன்றுமுறிப்பு.

மூன்றுமுறிப்புக்கு சென்றால்கூட பின்னர் அங்கிருந்து வடகிழக்காக 20 கிலோமீட்டர் தூரம் சென்றுதான் மாங்குளத்தை அடையலாம். ஆக, மொத்தம் 40 கிலோமீட்டர் தூரம் கடக்கவேண்டும். ஆனால் முதலில், மூன்றுமுறிப்பை சென்றடைவதுகூட கடினமாகும். அடர்ந்த காட்டுப் பகுதிகள் நிறைந்ததும், மன்னார் மாவட்ட எல்லையில் உள்ளதுமே மூன்று முறிப்பாகும். யானைக் காடுகளும் இங்கு உள்ளன.

### பலத்த மோதல்

மூன்றுமுறிப்பை நோக்கி படையினர் முன்னேறத் தொடங்கியபோது, பொக்காவன்னி, விளாத்திக்குளம் பகுதிகளில் இருந்து வந்த மன்னார் புலிகள் பலத்த தாக்குதல் தொடுத்தனர்.

பாலமோட்டைக்கு அருகே உள்ள பகுதிகளில் படைகளும், புலிகளும் கடுமையாக மோதினர்.

அடர்ந்த காட்டுப்பகுதி என்பதாலும், புலிகளுக்கு பரிச்சயமான இடங்கள் என்பதாலும் முன்னேறிய படையினரை நோக்கி வியூகம் அமைத்து புலிகளால் தாக்க முடிந்தது. மோட்டார் ஷெல் தாக்குதலும் சரமாரியாகத் தொடுக்கப்பட்டது.

முன்னணியில் சென்ற படையணி பலத்த சேதத்துக்கு உள்ளாகியது. 50ற்கு மேற்பட்ட படையினர் பலியானதாகவும், 150க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாக என்றும் புலிகள் கூறுகின்றனர். புலிகள் தரப்பில் 15.02.98ல் நடந்த மோதலில் இருவர் பலியாகினர்.

முன்னணியில் சென்ற படையினரின் மூன்று சடலங்களையும், ஆயுதங்கள் சிலவற்றையும் புலிகள் கைப்பற்றினர்.

இந்த மோதல் நடைபெற்ற பகுதி மாங்குளத்தில் இருந்து கிட்டத்தட்ட 25கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. எனினும் மாங்குளத்துக்கு அருகே சண்டை நடந்தது என்று இதனை விபரித்தன- அரச செய்தி ஊடகங்கள்.

தற்போதுள்ள நிலவரப்படி தற்போதைக்கு மாங்குளம் நகரோ, கனகராயன்குளமோ படையினரின் கையில் செல்வது சாத்தியமில்லை.

பலமுனைகளில் முன்னேறி புலிகளின் பலத்தை நாடிபிடித்துப் பார்த்துவிட்டு, அதற்கேற்ற திட்டம் ஒன்றை வகுக்க படையினர் நினைக்கக் கூடும். அதற்கான முயற்சிகளில் 'ஜயசிக்குறுய்' படையினர் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது. ■

# "தலதா குண்டு வெடிப்பு பேரிடி!"

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

தலதா மாளிகை குண்டு வெடிப்புத் தொடர்பாக புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' கருத்து வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தலதா மாளிகை தாக்குதலுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆயினும் குண்டுத் தாக்குதலுக்கு அநுருத்த ரத்வத்தை புலிகளையே குற்றம் சாட்டியுள்ளார். "இது ஒரு கோழைத்தனமான செயல்," என்று ரத்வத்தை கோபாவேசமாகக் குற்றம் சாட்டியுள்ளார். அவரின் வர்ணிப்பு விநோதமாக உள்ளது.

ஈ, எறும்புகூட அனுமதியின்றி உட்புக முடியாத பாதுகாப்பு அரணுக்குள், ஒரு குண்டு வாகனத்துடன், சில ஆயுததாரிகள் உள் நுழைந்து தாக்குவது எந்த வகையில் கோழைத்தனமானது?

தமிழ் மக்களது வீடுகள், கோவில்கள் மீது விமானத் தாக்குதல் நடத்துவதை விடவும், ஆட்டிலெறித் தாக்குதல் நடத்துவதையும் போல் அல்லாமல், சிங்கள மக்களின் உயிரிழப்பைத் தவிர்க்கும் வகையில் நாள், நேரம் குறித்து, அதன் காரணமாக எழுந்த மேலதிக ஆபத்தையும் பொருட்படுத்தாமல் சென்ற தற்கொலை குண்டுதாரிகளின் செயலில் கோழைத்தனம் தெரியவில்லை.

சுதந்திரப் பொன்விழாவை பேரினவாதிகள் கொண்டாட முற்பட்ட வேளையில் குண்டுகள் வெடித்து அரசை உலுக்கியுள்ளன. யால வன சரணாலயப் பகுதி, கதிர்காமப் பகுதி, காலி மற்றும் நுவரெலியா மாவட்டம்... என்று தாக்குதல் பரப்பு விரிவடைந்து சிறீலங்காவை தொந்தரவு செய்கிறது," என்று அப்பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

# மேலும் ஒரு ஹெலி சேதம்

## போதுமான விமானங்கள் தேவையாம்

ஜயசிக்குறுய் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்புக்களுக்கு விமானப் படையின் ஒத்தாசை போதுமானதாக இல்லையாம். இதற்குக் காரணம் எதிரிகளின் நிலைகளைக் குறிவைத்து ஆகாயத்திலிருந்த வண்ணம் தாக்குவதற்கு போதுமான விமானங்கள் இல்லாமையே என்று விமானப்படை அதிகாரிகள் கூறுகின்றனர். இதனால் மேலதிகமாக குறுகிய நிலைகளிலுள்ள இலக்குகளைத் தாக்குவதற்கு வசதியான ஹெலிக்கொப்டர்களையாவது உடன் பெற்றாக வேண்டும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ரஷ்யத் தயாரிப்பான எம்.ஐ. 24 ரக ஹெலிக் கொப்டர்கள் குறுகிய நிலையிலுள்ள இலக்குகளைத் தாக்குவதற்கு மட்டுமல்லாமல், துருப்புக்களையும் தளபாடங்களையும் எடுத்துச் செல்லும் வசதி உடையன.

ஏற்கனவே, இவ்வகை ஹெலிக்கொப்டர்கள் 5 பாவனையிலிருந்தது. இவற்றில் இரண்டு எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதல்களால் சேதப்படுத்தப்பட்டுவிட்டன.

கடந்த பெப்ரவரி 10ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று மற்றுமொரு ஹெலிக்கொப்டர், வன்னியின் நிலைகளில் பறந்து கொண்டிருந்தபோது, புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி செயலிழந்து போய்விட்டது.

கைவசமிருக்கும் இரண்டே இரண்டு எம்.ஐ.24ரக ஹெலிக் கொப்டர்களையும், ஒரு புக்காரா விமானத்தையும் வைத்துக் கொண்டு, தரைவழிப்போரிலீடுபட்டு வரும் துருப்புக்களுக்கு ஆகாயப் பாதுகாப்பினை வழங்க முடியாதிருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். ■

# தோட்டத் தொழிலாளர் அதிருப்தி

## அரசியல் போட்டியால் வயிற்றில் அடி!

"தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டம் அரசியல் இலாப நோக்கங்களுக்காக பலியிடப்பட்டுள்ளது. மலையகத்தில் ஏகபோக அரசியல் நடத்த விரும்பும் இ.தொ.கா.வும் அதன் தலைவர் தொண்டமானும் போராட்டத்தை காட்டிக் கொடுத்துவிட்டனர்" என்று தொழிலாளர்கள் பலர் வெளிப்படையாகவே பேசத் தொடங்கியுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு சம்பள உயர்வு கொடுத்தாலும் கட்டுபடியாகாது. அவர்கள் மதுவை அருந்தி வருவதால் சம்பளம் போதாமல்தான் இருக்கும் என்ற கருத்துப்பட தொண்டமான் தெரிவித்த கருத்து பலத்த கண்டனத்தையும், வியப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

"செய்யும் தொழிலுக்கு உரிய ஊதியம் கேட்கிறோமே தவிர, தான தருமம் செய்யுமாறு முதலாளிகளிடம் நாம் கேட்கவில்லை. எமது ஊதியத்தை எப்படிச் செலவிடுகிறோம் என்பது எம்மைப் பொறுத்தது. முதலாளிகளும் குடிக்கிறார்கள்தானே. அதற்காக முதலாளிகள் குடித்து செலவிடும் பணத்தை எங்களுக்கு தருமாறு தொண்டா கூறுவாரா?

தொழிற்சங்கத் தலைவரான தொண்டமான் முதலாளிகள் பேசும் தொனியில் பேசியிருப்பது கவலை தருகிறது. தொழிலாளி மது குடிக்கிறான் என்பதற்காக, குறைந்த சம்பளம் கொடுப்பது எப்படி நியாயமாகும்? என்று மூத்த தொழிற்சங்கவாதி ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மலையக மக்கள் முன்னணி போன்ற தனது போட்டி அமைப்புக்களுக்கும் நல்ல பெயர் கிடைத்துவிடும் என்ற காரணத்தாலேயே போராட்டத்தை முடிக்க அவசரப்பட்டார் தொண்டமான் என்று தொழிலாளர்கள் பலர் பேசிக்கொள்வதை கேட்க முடிகிறது. ●

# கரும்புலியின் இலக்கு எது?

## ஊகம் கூறாத காரணம் என்ன?

கொழும்பு கொம்பனித் தெருவில் காத்திருந்த கரும்புலியின் இலக்கு எதுவாக இருக்கும், என்ற ஊகத்தை இதுவரை பாதுகாப்புத் தரப்பினர் வெளியிடவில்லை.

வழக்கமாக இவ்வாறான சம்பவங்களின் பின்னர் உடனடியாக படையினர் ஊகம் தெரிவிப்பது வழக்கம். இம்முறை ஊகம் தெரிவிக்காமல் விட்டமைக்கு சில காரணங்கள் உள்ளன என்று சந்தேகிக்கப்படுகிறது.

சுதந்திரப் பொன்விழாவுக்காக வந்திருந்த இளவரசர் சாள்ஸ் போன்ற முக்கியஸ்தர்களை தாக்கத்தான் கரும்புலிகள் நடமாடினரோ, என்ற சந்தேகத்தை வெளியுலகில் ஏற்படுத்துவதற்காகவே ஊகங்கள் வெளியிடுவது தவிர்க்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

பிரிட்டனில் புலிகள் இயக்கத்தை தடை செய்ய வைக்க இலங்கை அரசு பலத்த முயற்சி செய்துவருவது தெரிந்ததே.

இதற்கிடையே கொம்பனித் தெருவில் பலியான கரும்புலியின் இலக்குப் பற்றிய சந்தேகங்களை கிளப்புவதற்காக மிகத் தவறான தகவல்களும் தரப்பட்டு வருகின்றன.

விமானப்படைத் தளபதி போன்றோர் 'குண்டு துளைக்காத' காரில் செல்வர். எனவே கரும்புலியால் அவர்களை தாக்க முடிந்திருக்குமா என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

'தாக்க முடியும்!' என்பதே பதிலாகும். குண்டுவெடிப்பைத் தடுக்கக்கூடிய வாகனமோ, ஆடைகளோ, கவசங்களோ இந்த நிமிஷம்வரை உலகில் எந்த மூலையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. துப்பாக்கி ரவைகளால் சுடப்படுவதில் இருந்து பாதுகாப்பு தரக்கூடிய ஆடைகள், வாகனங்கள், தடுப்புக் கண்ணாடிகள் என்பவைதான் உள்ளன.

'புல்லட் புரூஃப் கார், புல்லட் புரூஃப் ஜாக்கெட்,' என்பதே அவற்றின் பெயர்களாகும். அவற்றையே தமிழில் குண்டுதுளைக்காத கார், குண்டுதுளைக்காத ஆடை என்றெல்லாம் தப்பாக குறிப்பிடப்படுகின்றன. ரவைத் தடுப்பு கார், ரவைத் தடுப்பு ஆடை என்று அழைப்பதே சரியான பொருள் தரும் பெயர்களாகும்.

புல்லட் புரூஃப் காரை மனிதக் குண்டு மூலமோ, கண்ணிவெடி மூலமோ தகர்க்கலாம். ஆர்.பி.ஜி.லோஞ்சர், 'லோ' போன்ற ஆயுதங்களால் தாக்கினாலும் புல்லட் புரூஃப் வாகனங்கள் தாக்குப் பிடிக்காது.

கொம்பனித் தெருவில் பலியான கரும்புலி அணிந்திருந்த குண்டு, கார் ஒன்றை தாக்கியழிக்க தாராளமாகப் போதுமானதாகும்.

குண்டு வெடிப்புக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய வாகனங்கள் கண்டு பிடிக்கப்பட்டால் உலகெங்கும் பல முக்கிய அரசியல் தலைவர்கள் குதூகலமடைவர் என்பது மட்டும் உண்மை. ■

# அடையாளம் காட்டத் தயார்

## இக்பால் அத்தாஸ் தெரிவிப்பு

பாதுகாப்பு நிலவரம் பற்றி தனது காரசார விமர்சனங்களை 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் எழுதிவரும் இக்பால் அத்தாஸ் அவர்களின் வசிப்பிடத்தில் வைத்து அடையாளம் தெரியாத ஆயுதபாணிகள் அவரைத் தாக்க முயற்சித்தனர் அல்லவா? கடந்த 12ம் திகதி வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் தன்னைத் தாக்குவதற்கு முற்பட்டோரை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று திரு அத்தாஸ் கூறியிருக்கிறார். தாக்குதலின் பின்னணியில் முக்கிய பிரமுகர் ஒருவர் இருப்பதையும் தான் நன்கு தெரிந்து வைத்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

சம்பவத்தின்போது, தனது இல்லத்துள் பலாத்காரமாக ஐந்து ஆயுதபாணிகள் புகுந்து தன்னைக் கொல்லப்போவதாக எச்சரித்தனர் என்று கூறிய அவர், இல்லத்துக்கு வெளியே 20 பேர்வரை நின்றதையும் தான் காண முடிந்ததாகவும் கூறியுள்ளார்.

திரு அத்தாஸின் இல்லத்துக்கு இருபொலிசார் தற்போது காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். ஆனால் தான் பொலிஸ் பாதுகாப்பை நம்பப்போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். தனது உயிருக்கு ஆபத்து விளைவிக்கச் சிலர் காத்திருப்பதை ஒட்டி பலதடவைகள் பொலிசில் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறும் திரு அத்தாஸ், "அன்று இரவு வந்தவர்கள் என்னைக் கொன்றிருந்தால்.அதன் பின்னர் காவல் போடுவார்களாக்கும்!" என்று கூறியுள்ளார். ■

# யாழுக்கு பழைய பஸ்வண்டிகள்

## வாக்காளர்களுக்கு முதல் பரிசு

யாழ் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நூறு பஸ் வண்டிகள் அனுப்பிவைக்கப்பட்டன. தென்னிலங்கையில் ஓடி ஓடி களைத்துப்போன பஸ் வண்டிகளை யாழ்ப்பாணம் அனுப்பிவைத்தனர்.

யாழ்ப்பாணம் அனுப்பியதாக [illegible] காட்டிவிட்டு புதிய பஸ்களை தென்னிலங்கையில் பாவனைக்கு விடப்போகிறார்கள் என்று அப்போதே சந்தேகம் எழுப்பட்டது.

அவ்வாறு செய்யமாட்டோம். தேர்தல் முடிந்ததும் திருப்பி எடுத்துவிடுவோம். யாழ் மாவட்ட பாவனைக்கு புதிய பஸ்கள் தரப்படும் என்று வாக்குறுதியளிக்கப்பட்டது.

தற்போது அந்த வாக்குறுதி [illegible] பறந்துவிட்டது. யாழ்ப்பாணத்திற்கு புதிய பஸ்கள் தற்போதைக்கு வழங்கப்படமாட்டாது. ஏற்கனவே அனுப்பிய நூறு பஸ்வண்டிகளை பாவிக்க வேண்டியதுதான் என்று போக்குவரத்து அமைச்சு கூறிவிட்டது.

யாழ் உள்ளூராட்சித் தேர்தலை சாட்டாக வைத்து பழைய பஸ் வண்டிகளை யாழ் மக்களின் தலையில் கட்டிவிட்டனர். தமிழ்க் கட்சிகள் மௌனமாக உள்ளன. நம்பி வாக்களித்த மக்கள் பழைய பஸ்சுகளில் பயணம் செய்கிறார்கள்.

# 8 ஆண்டுகள் கழிந்தபோதும் இழப்பீடு இல்லை!

## அதிகாரிகளின் அசமந்தப்போக்கு என்று குற்றச்சாட்டு

பொது நிருவாகச் சுற்றறிக்கை 49/89 இற்கு அமைய 1990ஆம் ஆண்டு வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களின்போது உடமைகளை இழந்த அரச ஊழியர்களுக்கான நஷ்ட ஈட்டுக்கொடுப்பனவுகளுக்காக விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலானோர் கடந்த எட்டு வருடங்களாக எதிர்பார்த்து ஏங்கிய வண்ணமுள்ளனர்.

வன்செயலினால் உண்மையிலேயே முற்றாகப் பாதிக்கப்பட்டவர்கள் எதுவித உதவிகளுமில்லாது நிர்க்கதியாகி நிற்க, பாதிக்கப்பட்டாத ஒரு சிலர் தமது செல்வாக்குகளையும், சுழியோட்டங்களையும் பாவித்து நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, கொழும்பில் நஷ்ட ஈட்டு நிவாரண அலுவல்களை மேற்கொண்டிருந்த 'றேபியா' அதிகாரசபை கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் அதனது பணிமனையிலிருந்த நஷ்ட ஈட்டுக்கோரிக்கைகள் அடங்கிய கோவைகளை அந்தத்தப்பகுதி மாவட்டப் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தது.

ஆனால் இது நடந்து ஒரு வருடத்திற்குப் பின்னர்தான் மாவட்டப் பணிப்பாளர் காரியாலயத்திலிருந்து விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு மேலதிக விவரங்கள் போதாது என்று கடிதங்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இக்காரியங்கள் நத்தை வேகத்தில் முடிவடைந்து நஷ்ட ஈடுவழங்க இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்லுமோ என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டப் பணிமனையிலுள்ள அதிகாரிகளின் அசமந்தப்போக்கே தமது நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் இழுத்தடிக்கப்படுவதற்குக் காரணமென்று குறை கூறப்படுகிறது. ■

# கராத்தே பிரசுரம் கையிலிருந்ததால் தாக்குதல்!

## பிரதேச செயலாளர் பிரிகேடியரிடம் புகார்

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பிரதேசத்தில் அவ்வப்போது படையினருக்கும் புலி இயக்கத்தினருக்கும் இடையில் மோதல் உக்கிரமடைகிறது. அதனால் அப்பகுதிகள் அடிக்கடி படையினரின் சுற்றி வளைப்புக்கு உள்ளாகிறது.

கடந்த 16.02.98 அன்றும் அப்பிரதேசம் சுற்றிவளைக்கப்பட்டு சகலரும் விசாரிக்கப்பட்டனர். அவ்வேளையில் குடிமக்கள்மீது கடும் போக்குக் காண்பிக்கப்பட்டதாகவும், பலர் தாக்குதலுக்குள்ளானதாகவும் அறியப்படுகிறது. தம்மீது மேலும் தாக்குதல்கள் இடம் பெறக்கூடும் என்பதால் தாக்கப்பட்டவர்கள் புகாரிட அஞ்சும் நிலையுள்ளதென்று அதிகாரியொருவர் தெரிவித்தார். தாக்குதலுக்குள்ளான சிலர் வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்விதம் தாக்கப்பட்டவர்களில் வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் பிரிவின் சுபீட்சத் (சமூர்த்தி) திட்ட ஊக்குவிப்பாளரான மா.பரசுராமன் என்பவரும் அடங்குகிறார். சோதனையிடும்போது இவரது சேர்ட் பைக்குள் கராத்தே பயிலும் துண்டுப் பிரசுரம் ஒன்றிருந்ததாம். அதனால் அவர் கைது செய்யப்பட்டார். அவரது கைது பற்றி பிரதேச செயலாளர் பிரிகேடியருக்கு அறிவித்ததின் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார். அன்றைய சுற்றி வளைப் பின்போது விசாரணையின் பின்னர் புலி இயக்கத்தின் தீவிர ஆதரவாளர் எனக்கூறி அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே கடந்த 12.02.98 அன்று காலை 10 மணியளவில் வாழைச்சேனைப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் நின்றிருந்த புலி இயக்கத்தினர் இருவர் தூரத்தில் சிவில் உடையில் நின்ற ஒரு ஊர்காவல் படைவீரரை அடையாளம் கண்டு, வருமாறு அழைத்தனர். எனினும் அவர் விசயம் அறிந்து தப்பியோடினார். இவ்வேளையில் புலி இயக்கத்தினர் கைக்குண்டு ஒன்றை வீசியபோது தெருவில் வந்து கொண்டிருந்த மூன்று பொதுமக்கள் கைக்குண்டு வெடிப்பால் பலத்த காயத்திற்குள்ளானார்கள். ■

# தாயைப் பராமரிக்க முடியவில்லை

## தமிழ் வாலிபர் தற்கொலை!

கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து தனது தயாருடன் வவுனியாவிலுள்ள முகாமில் தங்கியிருந்த இராஜேந்திரன் ஜெயசந்திரன் என்ற 19வயது இளைஞன், பெப்ரவரி 13ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

புலிகள் வசமுள்ள பிரதேசங்களில் வாழ்பவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் வந்து வாழலாம், என்று அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஜெயச்சந்திரன் தனது தாயாருடன் ஒரு வருடத்திற்கு முன்னர் வவுனியாவிலுள்ள முகாமுக்கு வந்து தங்கியிருந்தார்.

தையல் வேலை தெரிந்த இவர், இராணுவம் வழங்கிய அனுமதிச் சீட்டுடன் வவுனியா நகர் வந்து ஒரு தையல் நிலையத்தில் பணிபுரிந்துவிட்டு மாலையில் முகாம் திரும்புவது வழக்கம்.

முகாமைவிட்டு வெளியே செல்வதற்கு, முன்பு 4 மணிநேர அவகாசம் தரும் அனுமதி பெற்றிருந்தார். இதே அனுமதிச் சீட்டுடன் காலையில் முகாமை விட்டு வெளியேறி, மாலையில் முகாம் திரும்புவது வழக்கம்.

அண்மையில் 4 மணிநேர அனுமதியை ஒரு மணிநேரமாக்கிவிட்டனர். அந்த ஒரு மணி நேரத்துள் திரும்பாவிட்டால் முகாமில் பல சிக்கல்கள் ஏற்படும். இதனால் ஜெயச்சந்திரனால் தனது தொழிலை மேற்கொள்ள முடியாதிருந்தது

இதற்கிடையில் அவருடைய தாயார் நோய்வாய்ப்பட்டார். அவரை மருத்துவமனையில் சேர்த்தார். தாயாருக்கு வேண்டிய அத்தியாவசியத் தேவைகளைப் பெற்றுக் கொடுக்கவும் முடியாத நிலை ஏற்பட்டது.

தொழில் செய்து சிறிய தொகைப்பணம் சம்பாதிக்க முடியாமலும் வேறு உதவியில்லாமலும் ஜெயச்சந்திரன் மனமுடைந்து போனார்.

விரக்தியின் உச்சக்கட்டத்தில் கடந்த 13ம் திகதி நஞ்சு அருந்தி மரணமானார்.

டாக்டர் ஜெகதீஸ்வரன் பிரேத பரிசோதனை செய்து நஞ்சுண்டமையால் மரணம் சம்பவித்ததெனத் தெரிவித்ததன் பேரில், வவுனியா மரணவிசாரணை அதிகாரி திரு. சிவநாதன் கிஷோர் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# லொறிகள் தடுத்து வைப்பு!
## பொருட்களுக்கு தட்டுப்பாடு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு-மற்றும் நாட்டின் இதர பகுதிகளுக்குப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் மாதுறு ஓயாச் சந்தியிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் இனிமேல் 48 மணிநேரங்கள் தரித்து நிற்கவேண்டும்! அதன் பின்னர் மூன்றாவது நாள் சோதனை யிடப்பட்டுப் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றன.

இதனால் லொறியைக்கொண்டு செல்லும் சாரதிகளும், உதவியாளர்களும் இரவு பகலாக-மழை வெய்யிலில்- அந்த இடத்திலேயே தமது நேரத்தைக் கழிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு வாகனங்கள் தரித்து நின்று, மீண்டும் மட்டக்களப்புக்கு அவை திரும்பி வர சுமார் ஒருவார மெடுப்பதால் கொழும்பு மற்றும் நாட்டின் இதர பகுதிகளிலிருந்து ஏற்றிவரப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மட்டக்களப்பில் கணிசமான அளவு உயர்ந்துள்ளன. குறிப்பாக மரக்கறிப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கடந்த பல வருடங்களாக மட்டக்களப்புக்கான புகையிரதச் சேவை நிறுத்தப்பட்டிருப்பதால் லொறிப்போக்குவரத்துச் சேவையையே மட்டக்களப்பு மாவட்ட மக்கள் முற்று முழுதாக நம்பியிருக்க வேண்டியுள்ளது.

'கொழும்பு, கண்டி, மற்றும் காலி நகரங்களில் சமீப காலங்களில் நடந்த தாக்குதலுக்கான குண்டு லொறிகள் மட்டக்களப்பிலிருந்தே கொண்டு வரப்பட்டிருக்கின்றன' என்று சந்தேகிக்கப்படுவதால்தான் லொறிகள் மீது இந்தவித தீவிர கவனம் செலுத்துவதாக பொலிஸ் தரப்பு தெரிவிக்கிறது.

மாதுறு ஓயாச் சந்தியில் நாளாந்தம் நூற்றுக்கணக்கான லொறிகள் வீதியோரங்களில் தரித்து நிற்கின்றன.

# மருந்தில்லாத வைத்தியசாலை

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேசத்திற்கென உள்ள ஒரேயொரு வைத்தியசாலையான மாவட்ட வைத்தியசாலையில், தாதிமார்கள், மருந்துக் கலவையாளர், மருந்துகட்டுபவர், மற்றும் விடுதிப்பரிபாலகர்களும், மருந்து வகைகளும் போதியளவு இல்லை.

நாளொன்றுக்கு சுமார் 300வெளி நோயாளர்கள் சிகிச்சைபெறவரும் இம்மாவட்ட வைத்தியாலையில் மருந்துக்கலவையாளரும், மருந்துகட்டுபவரும் இல்லாததால் இவ்வேலையினை இது தொடர்பான பயிற்சி பெறாத விடுதிப்பரிபாலகர்களே செய்து வருகின்றனர்.

இதனிடையே பற்றாக்குறையாகவுள்ள விடுதிப்பரிபாலகர்கள் இவ்வாறான வேலைகளையும்,தமக்குரிய வேலைகளையும் செய்ய வேண்டியுள்ளதால் 'தமக்கு மேலதிக வேலைகள் அதிகம்' என விசனம் தெரிவிக்கின்றனர். வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளர்கள் அனைவரையும் குறிப்பிட்டளவான தாதிமார்களே கவனிக்க வேண்டியுள்ளதால், இவர்களுக்கும் வேலைப்பளு அதிகம். இங்கு போதிய மருந்துவகைகளும் இல்லாமையால் நோயாளர்களுக்கு குறிப்பிட்ட மருந்துகள் சிலவற்றை கடைகளில் வாங்கிக் கொள்ளும்படி துண்டு எழுதிக் கொடுக்கப்படுகின்றது. இந்நிலைமையால் ஏழை நோயாளர்களுக்கு வைத்தியசாலைக்குச் சென்றும் பலனில்லாமல் போகிறது.

எனவே, "பெயரளவில் மட்டும் மாவட்ட வைத்தியசாலையாக இருக்கும் இவ்வைத்தியசாலையினை கவனத்தில் கொண்டு இப்பகுதி மக்களின் சுகாதார நலனில் கரிசனை காட்டவேண்டும் என சுகாதார சம்பந்தமான அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றோம்."

ரெட்ணம் சாந்தசீலன், பொத்துவில்.

# சமுர்த்தி கொடுப்பனவுகள் எங்கே?

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இந்நாட்டு மக்களின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்காக நாடளாவிய ரீதியில் சமுர்த்தி திட்டத்தை அறிமுகம் செய்தது.

ஆனால் இதுவரைக்கும் அம்பாறை மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்றவர்களுக்கு இதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

மாறாக இம்மாவட்டத்தில் இத் திட்டத்திற்கென ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவிற்கும் நியமிக்கப்பட்டுள்ள சமுர்த்தி ஊக்குவிப்பாள உத்தியோகத்தர்களுக்கே மாதா மாதம் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

இதனால் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்றவர்கள், சமுர்த்தி ஊக்குவிப்பாள உத்தியோகத்தர்களா? அல்லது இங்கு வாழும் வறிய மக்களா? என்ற கேள்வி பலர் உள்ளங்களிலும் எழுகிறது.

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனங்களிலும் பல பழிவாங்கல்களும் கண்துடைப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

திகாமடுள்ள மாவட்ட அரச பங்காள அமைச்சரின் ஆதரவாளர்களின் ஆக்கிரமிப்பே இத் திட்டத்தில் மேலோங்கி நிற்கிறது.

'சமுர்த்தி திட்டத்தில் நீதி, நியாயம் பேணப்பட வேண்டும்!' என்ற ஜனாதிபதியின் கூற்றுக்கு இவை எல்லாம் மாறான நிகழ்வுகளாகவே உள்ளன.

எனவே இவ்விடயத்தில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க அதி சிரத்தை எடுத்து, சும்மா இருந்துகொண்டு சுளையாக பணம் எண்ணும் இம் மாவட்ட சமுர்த்தி ஊக்குவிப்பாள உத்தியோகத்தர்கள்மீது ஒரு கண்ணோட்டம் வைத்து, இத் திட்டத்தின் கீழ் வறிய மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.சி.கலீல், கல்முனை-5.

# நிரப்பப்படாத வெற்றிடம்

பொகவந்தலாவை சென் மேரிஸ் மத்திய கல்லூரியில் சுமார் 2200 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். தற்போது இக்கல்லூரியில் 41 ஆசிரியர்கள் மாத்திரமே கடமையாற்றுகின்றார்கள்.

இக் கல்லூரிக்கு 55 ஆசிரியர்கள் மேலும் தேவையென கல்வி அதிகாரிகள் கணிப்பிட்டுள்ளனர். மத்திய மாகாணத்தில் சிறந்த தமிழ் பாடசாலையாகத் திகழுகின்ற இக் கல்லூரி 'விளையாட்டுத்துறை கல்லூரி'யாக தரமுயர்த்தப்பட்டுள்ளதோடு, ஜனாதிபதியின் 300 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை இக்கல்லூரியில் நிலவியபோதும் அதிபர், ஆசிரியர்களின் தியாக மனப்பான்மையால் கல்லூரியின் மாணவர் பரீட்சைப் பெறுபேறுகளும் திருப்திகரமாகவுள்ளன. ஆகவே, மேலும் இக்கல்லூரி தேசிய மட்டத்தில் இன்னும் உயர்வதற்கு ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிரப்பவேண்டும்.

அத்தோடு மத்திய மாகாண தமிழ்க் கல்வியமைச்சும் கூடிய அக்கறை செலுத்த வேண்டுமென இப்பகுதி வாழ்பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சோ. ஸ்ரீதரன், பொகவந்தலாவ.

# "உள்ளே வரவேண்டாம்!"

(காரைதீவு நிருபர்)

அம்பாறைக்குச் செல்லும் கல்முனை, அக்கரைப்பற்று போன்ற தமிழ்ப்பிரதேச பஸ்டிப்போ பஸ்களை அம்பாறை மத்திய பஸ் தரிப்பு நிலையத்தினுள் அனுமதிப்பதில்லை. பாதுகாப்பு காரணமாம். ஏனைய டிப்போ பஸ்கள் உள்சென்று பயணிகளை ஏற்றும் அதேவேளை கல்முனை, அக்கரைப்பற்று டிப்போ பஸ்கள் 'அநாதை' போல் வெளியில் நின்றுவிட்டுவர வேண்டியுள்ளது.

அதுமட்டுமல்ல,தமிழ்ப் பிரதேச டிப்போ பஸ்களின் முன் பெயர்ப்பலகைகளில் ஊர்களின் பெயர்கள் மும் மொழிகளிலும் இருக்க வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளதாம். ஆனால் அம்பாறை டிப்போவிலிருந்து செல்லும் பஸ்களில் சிங்களத்தைத் தவிர வேறெந்த மொழியையுமே காணமுடியவில்லையே? அங்கு அந்தப் பணிப்பு செல்லுபடியாகாதோ!

# மாணவி பெற்ற புள்ளிகள்

கடந்த ஆண்டு நடைபெற்ற 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பிபில-கனுல்வெல முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம் மகத்தான முறையில் புள்ளிகளைப் பெற்று மொனராகலை மாவட்டத்திலே முன்னணியில் நிற்கின்றது.

சரீப் சகீலா பர்வின் என்ற மாணவி 144 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், சஹாப்தீன் நஷ்ரியா 117 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் மேலும் யூசுப் சிஹான் 109 புள்ளிகள், செய்யது நிஷ்ரின் 94 புள்ளிகள் ஹபீப் அஸ்லி 88 புள்ளிகளும் பெற்று எல்லாமாக இம்முறை 5 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளார்கள்.

கடந்த மூன்றாண்டு காலமாக இம் மாவட்டத்திலே சிறந்த புள்ளிகளைப் பெற்று பல மாணவர்கள் இப்பாடசாலை மூலம் தெரிவாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எச்.எம்.ஜ.ப்பர்-அதிபர்.

# நகரசபை ஊழல் குறித்து விசாரணை

சுமார் 80 லட்சம் ரூபாய் செலவில் திருக்கோணமலை நகரசபையால், தந்தை செல்வா வீதியில் ஐக்கிய பொதுச் சந்தை கட்டடமும், சந்தை கட்டட கடைத் தொகுதிகளும் நிர்மாணிக்கப்பட்டன. இவற்றுக்கான ஒப்பந்தவேலைகள் நகரசபைத் தலைவரால் முறையற்ற விதத்தில், கேள்வி கோராது, சில தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டன. அதனையடுத்து குறிப்பிட்ட முறைகேடுகள் குறித்தும், சில சட்டவிரோத பணக் கொடுப்பனவுகள் குறித்தும் விசாரணைகளை மேற்கொள்ள, ஆளுநர் அலுவலகத்தால் கணக்காய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.இக்குழு 29.01.98 தொடக்கம் திருக்கோணமலையில் தங்கியிருந்து நகரசபையில் கணக்காய்வுகளை மேற்கொண்டது.

இக் கணக்காய்வுக் குழு, நகரசபைத் தலைவரால் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட பணக் கொடுப்பனவுகள், சம்பந்தப்பட்ட கோவைகளை நகரசபையில் இருந்து மேலதிக விசாரணைக்காக எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிய வருகின்றது. இக் கணக்காய்வுக் குழுவில் (AUDIT) வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு.என். நாகேஸ்வரனும் அங்கம் வகிக்கின்றார்.


## HEALTH IS WEALTH

Here's an opportunity to be wealthy healthwise with the professionals.

- General massage
- Herbal massage
- Steam bath
- Herbal Steam bath

**ORCHID EXECUTIVE (PVT) LTD.,**
Old Police Station Road,
37, Kirulapona Avenue,
Colombo-05.
T.P. 854271

R.No. N(pus)11358

BRANCH AT
No. 6A, Sellamuthu Avenue, Kolpity.
T.P. 074-517713


விளம்பரப் பகுதி


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.



## UNION

யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411



**தேவை** தலைநகரில் முன்னணி நிறுவனமொன்றிற்கு தமிழ் தட்டெழுத்தாளர் தேவை. மொழியாற்றல் கவனிக்கப்படும். அப்பிள் கொம்பியூட்டர் கையாளக் கூடியவராயின் நன்று.

இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

AD- T98
C/O THINAMURASU
P.O. BOX-1772, COLOMBO.



## நவீன தொழில் நுட்பம்
## ஆயுள் பூராவும்
## உழைக்கக்கூடிய உத்தரவாதம்

**PHOENIX**
பைசிக்கள்

அசல் நூறு வீதம் சீனாவின் தயாரிப்பு



**பைஸால் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்**
**(FAIZAL HARDWARE STORES)**
74, டாம் வீதி, கொழும்பு 12. தொலை: 433727
பெக்ஸ்: 446088, E-mail - faisto@sri.lanka.net

இலங்கை மக்களின் ஏகோபித்த தெரிவு - பீனிக்ஸ் பைசிக்கள்

GRAYON



## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

### வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்திமிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

### SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாகிவிட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

### வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் அறிவித்தால் மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும், தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம். மட்டக்களப்பு விலாசத்து க்கு கடித தொடர்பு கொள்ளவும்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

**கொழும்பில் பெப்ரவரி 22 முதல் 28 வரை**

**DR.P.ARUMUGAM**
**AHAMED TOURIST INN**
**BANG BANG BUILDING No. 10, Reclamation Road, (entrance: Bankshall St, Opposits Renjanas) Colombo-11.**
**T.P. 436383, 436390.**

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**ஓட்டமாவடியில் மார்ச் 4. 5ம் தினங்களில்**
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி. T.P.065-57345

**கல்முனையில் மார்ச் 7.8.9.10ம் தினங்களில்**
T.M.M. பாமசியிலும் T.P.065-29329

**வவுனியாவில் மார்ச் 14.15.16.17ம் தினங்களில்**
வவுனியாவில் (2ம் குறு க்குத்தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, VANNI INN இல் சந்திக்கலாம். T.P.024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

மற்றைய நாட்களில் **Dr.P.Arumugam No.33. Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa** விலும் சந்திக்கலாம்.



## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை

**SHAKTHY SARAVANA,**
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை

**SHAKTHY SARAVANA,**
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை



## BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
## கல்வி நெறிகள்

- ★ 90 Days Spoken English
- ★ 90 Days Spoken Sinhala
- ★ Method of Book-Keeping
- ★ Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)

மேற்படி பாடநெறிகள் நேரிலும்/ தபால் மூலமும் நடைபெறுகின்றன. வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமே அறிந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.


விரும்பும் பாடநெறி:..........................
பெயர்:..........................
முகவரி..........................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11.Tel: 434770, 074-718592



## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

# கண்ட காட்சியும் காணாத உண்மைகளும்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

**போ**ர்க்களம் செல்ல வாருங்கள் என்று பத்திரிகையாளர்கள் சிலரைக் கூட்டிப்போனார்கள். போர்க்களத்தில் யாருடைய தடையும் இல்லாமல் சுதந்திரமாக தகவல் சேகரிக்க வேண்டும். அதுதான் போர்க்களப் பத்திரிகைப் பணி. ஆபத்தான பணி.

**ஆனால், நம் நாட்டில் படையினர் தமது பிரசார நலனுக்காக, தாம் விரும்பும் இடங்களை மட்டும் பத்திரிகையாளர்களுக்கு காண்பித்து விட்டு திருப்பி அனுப்புகிறார்கள். அதனை போர்க்களத்தை நேரில் காண்பித்தனர் என்பது பொருந்துமா?**

போர்க்களம் என்றால் இரு தரப்பும் மோதும் பிரதேசம் என்று அர்த்தம். எனவே மறுதரப்பும் பத்திரிகையாளர்களது கண்களில் தெரியவேண்டும். ஆனால், படையினரோ புலிகளின் நிலைகளின் பக்கம் பார்வைபடக்கூட பத்திரிகையாளர்களை அனுமதிப்பதில்லை.

பாதுகாப்பு என்று காரணம் கூறப்பட்டாலும்கூட, உண்மை அதுவல்ல. படை நிலைகளுக்கு மிகச் சமீபமாக புலிகளின் நிலை இருப்பதை பத்திரிகையாளர்கள் கண்டுவிட்டால் தாம் கைப்பற்றியுள்ள பகுதிகளின் உண்மையான விஸ்தீரணம் தெரிந்து விடும் என்பதும் ஒரு காரணம்.

கிளிநொச்சி நகரை படையினர் பத்திரிகையாளர்களுக்கு காண்பித்தவிதம் அலாதியானது.

**படையினர் அழைத்துச் சென்ற பத்திரிகையாளர்கள் எவருக்கும் (தமிழ்ப்பத்திரிகையாளர்கள் உட்பட) கிளிநொச்சியின் பூகோள அமைப்பு துளியும் தெரியாமல் இருந்ததும் படையினருக்கு வசதியாகப் போய்விட்டது.**

பத்திரிகையாளர்களுக்கு அவசர அவசரமாக 'புல்லட் புரூஃப் ஜாக்கெட்' எனப்படும் ரவைத் தடுப்பு கவச ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

**கிளிநொச்சி நகர் முழுக்க கட்டுப்பாட்டில் இருந்தால் பின்னர் எதற்கு ரவைத் தடுப்பு கவச ஆடைகள்?**

முன்னர் கிளிநொச்சி நகரைப் படையினர் கைப்பற்றியபோதும் பத்திரிகையாளர்களை கூட்டிச்சென்றிருந்தனர்.

படையினரைத் தவிர ஒரே ஒரு நாய் மட்டும்தான் நகரில் இருந்தது என்பதை பத்திரிகையாளர்கள் மிகச் சுதந்திரமாக நடமாடி அறிந்தும் கொண்டனர்.

அப்போது பத்திரிகையாளர்களுக்கு கவச உடை எதுவும் கொடுக்கப்படவில்லை. தமது பூரண கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு செல்லும் பத்திரிகையாளர்களுக்கு படையினர் இதுவரை ரவைத் தடுப்பு உடைகள் கொடுத்ததுமில்லை.

எனவே, கிளிநொச்சி நகருக்குள் புலிகள் இருப்பதால்தான் ரவைத் தடுப்பு ஆடைகள் கொடுக்கப்பட்டன.

**நெருங்கிச் சுடக்கூடிய தூரத்தில் புலிகள் இருக்கிறார்கள் என்றும் அர்த்தம். ஏனெனில் துப்பாக்கியால் சுடப்படுவதில் இருந்து மட்டுமே ரவைத் தடுப்பு உடை பாதுகாப்பளிக்கும்.**

ஷெல் வந்து விழுந்து வெடித்தால் ரவைத் தடுப்பு உடையால் எவ்வித பயனும் இல்லை. அல்லது ஆர்.பி.ஜி. மற்றும் லோ போன்ற ஆயுதங்களால் தாக்கினால்கூட ரவைத்தடுப்பு உடையுடன் மேலே போய்ச் சேரவேண்டியதுதான்.

**பெப்ரவரி 03ம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் சந்தியில் இருந்து டிப்போச் சந்திவரையான ஆறு கிலோ மீட்டர் வரையான தூரம் படையினரிடம் இருந்தது.**

பெப்ரவரி 03ம் திகதிக்கு பின்னர் கரடிப்போக்குவரை மூன்று கிலோ மீட்டர் தூரம் படையினர் பின்வாங்கினர்.

**படையினர் பின்வாங்கிய மூன்று கிலோ மீட்டர் தூரப் பகுதியில் பங்கர்கள் மட்டும் இருக்கவில்லை. மினி முகாம்களும் இருந்தன. கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம், சிங்கள மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலும் படையினர் முகாமிட்டிருந்தனர்.**

அவற்றைத் தவிர மிகப் பாதுகாப்பானதும், விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல் போன்றவற்றுக்கு ஈடுகொடுக்கக் கூடியதுமான கொங்கிரீட் பங்கர்களைக் கொண்ட காப்பரண்கள் பலவும் படையினரால் அமைக்கப்பட்டிருந்தது.

அனைத்தையும் கைவிட்டுத்தான் படையினர் மூன்று கிலோமீட்டர் பின்வாங்கினர்.

பெப்ரவரி ஆறாம் ஏழாம் திகதிவரையான கடும் மோதலின் பின்னர் கரடிப்போக்கில் இருந்து 500 யார் தூரத்திற்குள் படையினர் முன்னேற முடிந்தது. அதுவும் பிரதான சாலை வழியாக முன்னேற முடியவில்லை.

குறுக்குப் பாதை ஊடாகவே சுற்றிச் சுழன்று நிலைகொண்டனர். கரடிப்போக்கில் இருந்து 500 யார் சுற்றளவுத் தூரத்திற்குள்தான் கந்தசாமி கோவிலடி, வைத்தியசாலை, ரயில் நிலையம் என்பவை அமைந்துள்ளன.


**அவற்றைத்தான் பத்திரிகையாளர்களுக்கு காண்பித்துள்ளனர். ஆனால், தற்போது பத்திரிகையாளர்களுக்கு காண்பிக்கப்பட்ட பகுதியில் இருந்து மேலும் இரண்டு கிலோ மீட்டருக்கு மேலே சென்றால்தான் படையினர் பெப்ரவரி 03ம் திகதிக்கு முன்னர் நிலைகொண்டிருந்த டிப்போச் சந்தி வரும். டிப்போச் சந்திதான் முன்னணி இராணுவ வேலி அமைந்திருந்த எல்லைப் பகுதியாகும்.**

ஆக, பெப்ரவரி 03ம் திகதி பறிகொடுத்த மூன்று கிலோ மீட்டரில் ஒரு கிலோமீட்டரைக் கூட இதுவரை படையினரால் மறுபடி கைப்பற்ற இயலவில்லை.

**ஆக, இரண்டு, இரண்டரை கிலோமீட்டர் தானே பறிகொடுத்திருக்கிறார்கள் என்று அலட்சியமாக நினைக்கக்கூடிய களமல்ல. புளியங்குள நகரை பிடிக்கவும் இன்னும் இரண்டு கிலோமீட்டர்தான் உள்ளது. கடந்த ஆறுமாதமாக ஜயசிக்குறுய் படைகளால் அந்த இரண்டு கிலோமீட்டர் தூரத்தை கடக்கவே முடியவில்லை.**

அதேநிலைதான் இப்போது கிளிநொச்சி நகரிலும் படையினருக்கு தோன்றியுள்ளது.

புளியங்குள நகரை பிடிக்க இரண்டு கிலோமீட்டர் தூரத்தை கடக்க முடியாமல் ஜயசிக்குறுய் படைகள் ஆறுமாதம் போரிடுகின்றன. கிளிநொச்சி நகரை முழுதாகப் பிடிக்க இரண்டு இரண்டரை கிலோமீட்டர் தூரம் கடக்க வேண்டிய நிலையில் கடந்த 15 நாட்களாக சத்ஜய படைகள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன.




கிளிநொச்சி நகரை 'சத்ஜய' மூன்றாம் கட்ட நடவடிக்கை மூலம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக 3.10.96ல் படையினர் கைப்பற்றினர்.

அப்போது பரந்தன் சந்தியில் இருந்து ஆரம்பமான மூன்றாம் கட்ட நடவடிக்கையை பத்து நாட்களில் படையினர் பூர்த்தி செய்து கிளிநொச்சி நகரைக் கைப்பற்றினர்.

பரந்தன் சந்தியில் இருந்து பெரிய பரந்தன் ஊடாக வளைந்தும், நெளிந்தும் சுற்றிவளைத்து படைகள் நகர்ந்த தூரத்தை கணக்கிட்டால் கிட்டத்தட்ட எட்டுக்கிலோ மீட்டர்.

**அவ்வாறு இருந்தும் பத்துநாட்களுக்குள் கிளிநொச்சி நகரை பிடிக்க முடிந்தது. ஆனால் இம்முறை கரடிப்போக்கு சந்தியில் உள்ள படையினரால் அங்கிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள டிப்போச் சந்திக்கு 15 நாட்களாகியும்கூட செல்ல முடியவில்லை.**

காரணம் என்ன? மரபுப் போர்கலந்த சண்டை முறையில் புலிகளின் ஆற்றல் உயர்ந்து வருகிறது என்பது ஒரு காரணம். படையினரால் உருவாக்கப்பட்ட பாரிய காப்பரண்கள் புலிகளுக்கு கவசமாக மாறியிருப்பது இரண்டாவது காரணம்.

இவற்றை ஒப்புக்கொண்டால், புதியதையும் பிடிக்க முடியாமல், இருந்ததையும் பறிகொடுத்துவிட்டனர் என்று கண்டனங்கள் கிளம்பும். அதனால் போர்க்கள நிலைமையை படைத்தரப்பு பூசிமெழுகப் பார்க்கிறது.

ஆனாலும், உண்மை நிலவரத்தை மூடி மறைக்க முடியாதளவுக்கு களநிலைமை இருந்திருக்கிறது. பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரவைத் தடுப்புக் கவச ஆடையும்,பிரதான சாலை வழியாக செல்லாமல், ஒற்றையடிப் பாதை வழியாக பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்றதும், படு வேகத்தில் பத்திரிகையாளர்களை திரும்ப அழைத்துச் சென்றதும், காண்பிக்கப்பட்ட பகுதிக்கு மிக அருகில் புலிகள் நிலை கொண்டிருக்கின்றனர் என்பதை புத்திசாலிப் பத்திரிகையாளர்கள் பலரை ஊகிக்க வைத்துவிட்டது.

1996இல் கிளிநொச்சியை பிடித்தபோது தொலைக்காட்சியில் முக்கியமாக காண்பிக்கப்பட்டது பௌத்த விகாரை. அங்கு பூசையும் நடத்தி தென்னிலங்கை மக்களை மகிழ்வூட்டினர்.

**கிளிநொச்சி நகரில்தான் அந்த விகாரையும் இருக்கிறது. அதுவும் புலிகளின் கட்டுப்பாட்டில் சென்றுள்ள பகுதிக்குள் போய்விட்டது.**

**பத்திரிகையாளர்களை கூட்டிச் சென்ற நாளான 15.02.98 அன்று கிளிநொச்சி நகர் முழுக்க படையினரின் கையில் இருக்கவில்லை என்பதற்கு குறிப்பிட்ட விகாரையைக் காண்பிக்காத ஒன்றே போதும் சாட்சிக்கு.**

கிளிநொச்சி என்று பெயர் பொறிக்கப்பட்ட எல்லைக் கல்லை அடிக்கடி காண்பிக்கிறார்கள். சில பத்திரிகைகளிலும் புகைப்படங்கள் பிரசுரமாகியுள்ளன.

பெயர் பொறித்த எல்லைக் கல் ஊரின், அல்லது நகரின் எல்லையில்தான் இருக்கும். அந்தக் கல்லருகே, நின்று படம் எடுப்பதால் குறிப்பிட்ட ஊருக்குள்ளோ நகருக்குள்ளோ சென்றதாக அர்த்தமாகாது.

இப்படித்தான் கனகராயன் குளம் என்ற பெயர்ப் பொறித்த எல்லைக் கல்லை இரண்டு மாதம் முன்பாக காண்பித்தனர். இதுவரை கனகராயன்குளத்தை படையினர் கைப்பற்றவே இல்லை.

**கிளிநொச்சி என்று பெயர் பொறிக்கப்பட்டு காண்பிக்கப்படும் அந்த எல்லைக்கல் இருப்பது கரடிப்போக்கு பகுதியிலேயே தவிர நகருக்குள் அல்ல.**

புலிகளின் உடல்கள் என்று நூற்றுக்கு மேற்பட்ட உடல்களை வீடியோ படமாக காண்பித்தனர். பத்திரிகையாளர்களும் பார்த்தனர். உடல்களின் முகப்பகுதிகள் துணியினால் மூடப்பட்டிருந்தன.

**உடல் சிதைந்தால் உடற் பகுதியைத்தான் மூடவேண்டுமே தவிர முகப்பகுதியை மூடுவதில்லை. ஆகவே முகங்கள் மூடப்பட்டுக் கிடந்த மர்மம் என்ன? படையினரின் உடல்களை புலிகளின் உடல்கள் என்று காண்பித்திருக்க முடியாதா என்ன?**

முகத்தில்தான் படையினரா, புலிகளா என்ற வித்தியாசம் தெரியும். படையினர் என்றால் முடிவெட்டும், சவரம் செய்யப்பட்ட முகமும் பளிச்சென்று காட்டிக் கொடுத்துவிடும்.

பரந்தன் சண்டைக்கு பின்னர் 32 புலிகளின் உடல்கள் வரை படையினரிடம் கிடைத்தது என்று சென்றவாரம் குறிப்பிட்டிருந்தேன். அந்த உடல்களையும் கலந்து வைத்து படம் எடுத்திருக்கக்கூடும்.

மிக முக்கியமான கேள்வி யாதெனில், கைப்பற்றிய ஆயுதங்கள் என்று தொலைக்காட்சியில் காண்பித்தவர்களால், உடல்களை ஏன் காண்பிக்க முடியவில்லை.

**கைப்பற்றியதாகக்கூறி ஆயுதங்களை காண்பிப்பது சரியான ஆதாரமாகாது. புலிகள் பாவிப்பது ஒன்றும் புதுவித ஆயுதங்களல்ல. படையினரும் அதே ரக ஆயுதங்களையே பயன்படுத்துகின்றனர். தங்கள் கைகள் பற்றியிருந்த ஆயுதங்களைக்கூட கைப்பற்றிய ஆயுதங்கள் என படையினர் காண்பிக்கலாம்.**

எனவே, தாங்கள் தோல்வி காணவில்லை, என்று நிரூபிக்க படாதபாடு படும் படைத்தரப்பு, நூற்றுக்கு மேற்பட்ட புலிகளின் உடல்கள் கைப்பற்றப்பட்டிருந்தால் எத்தனை ஆரவாரமாக தொலைக்காட்சிகளில் காண்பித்திருக்கும் என்பது ஊகிக்க கடினமானதல்ல.

முன்னர் மணலாறு முகாம் தாக்குதலில் பலியான புலிகளின் உடல்களை ஆண்புலி, பெண்புலி என்று நன்கு தெரியவேண்டும் என்பதற்காக பட்டவர்த்தனமாக காண்பித்தவர்கள் படையினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

படையினர் கூறுவதுபோல புலிகளின் 200 சடலங்களை கைப்பற்ற முடிந்திருந்தால் ஒருவேளை கொழும்பில் இருந்து பிரதான அமைச்சர்கள் பறந்து சென்றிருப்பர். உடல்களை பார்வையிடும் காட்சியையும் காண்பித்திருப்பர். ஏனெனில் எப்பாடுபட்டாவது போர் வெற்றிச் செய்தியை தெரிவிக்க வேண்டிய கட்டத்தில் இன்று அரசாங்கம் இருக்கிறது.

**மேலும் சந்தேகத்தை தருவது இதுதான்: பரந்தன், கிளிநொச்சி சமரில் 53 படையினர்தான் பலியாகினர் என்று பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியுள்ளனர். புலிகள் கைப்பற்றிய படையினரின் சடலங்கள் மட்டும் 55. அதில் ஒப்படைக்கப்பட்டவை 41. அதற்கு முன்னரே படைத்தரப்பு வெளியிட்ட செய்திப்படி மோதலில் மட்டும் பலியான படையினர் தொகை 24. எனவே அதன்படி பார்த்தால்கூட முதல் மூன்றுநாள் மோதலில் மட்டும் பலியான படையினரின் கணக்கு 79 ஆகிறதே!**

கிளிநொச்சியில் இருந்த தொலைத்தொடர்பு கோபுரம் எதனையும் புலிகள் தாக்கவில்லை என்றும், அது பொய்த் தகவல் என்றும் ரூபவாஹினியில் செய்தி சொல்லப்பட்டது. ரூபவாஹினி சொன்னது உண்மை(!) ஏனெனில் தொலைத் தொடர்பு கோபுரம் இருந்தது ஆனையிறவு– பரந்தன் பிரதேசத்தில். அதுதான் தாக்கப்பட்டது. கிளிநொச்சியில் இருந்த தகவல் தொடர்பு கோபுரம் தாக்கப்பட்டதாக செய்திகள் வெளியானதாகவும் தெரியவில்லை.

**கிளிநொச்சியில் முன்னரங்க நிலைகள் சிலவற்றுக்குள் ஊடறுக்க முற்பட்ட புலிகளை விரட்டி அடித்துவிட்டோம் என்று கொழும்பில் படைத் தளபதி கூறியிருந்தார்.**

**ஆனால், யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த மேஜர் ஜெனரல் பலகல்ல, சில யார்கள் தூரத்திற்கு தந்திரோபாயப் பின்வாங்கல் ஒன்றை படையினர் மேற்கொண்டனர் எனக்கூறியிருக்கிறார்.**

மொத்தத்தில் பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்ற படையினர் புதிதாக எதை நிரூபித்தனர்? கரடிப்போக்கில் படையினர் நிலைகொண்டுள்ளனர் என்பதை பத்திரிகைகள் தாமாகவே எப்போதோ வெளியிட்டிருந்தன.

### அன்றும் — இன்றும்

சத்ஜய மூன்றாம் கட்டம்
22.09.96 தொடங்கியது.
பரந்தன் சந்தியில் இருந்து
மேற்காக நகர்ந்து பெரியபரந்தன்
ஊடாக சுற்றிச் சென்று
கிளிநொச்சி நகரைப் பிடிக்க
பத்து நாட்களாகின.
படை நகர்ந்த தூரம்
கிட்டத்தட்ட எட்டு கிலோ மீட்டர்.
ஆனால், தற்போதைய சண்டையில்
கரடிப்போக்கில் இருந்து மூன்று
கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள
தமது பழைய நிலையான டிப்போச்
சந்திவரை படை நகர
பதினைந்து நாட்களாக
சண்டை தொடர்கிறது.

படையினரும் கரடிப்போக்கு சுற்றாடலில் ஒரு பகுதியைத்தான் காண்பித்துள்ளனரே தவிர, நகரின் முழுப் பகுதியையும் காண்பிக்கவில்லை. எனவே கிளிநொச்சி நகர் புலிகளின் கையில் என்ற செய்தி பொய் என்று படையினர் நிரூபிக்க இயலவில்லை. ஏனெனில் உண்மை அதுதான்.

நாளை எப்படியோ தெரியாது.

இச் செய்தி எழுதப்படும் 18.02.98 வரை கிளிநொச்சி நகரின் மையப்பகுதிவரை புலிகள் நிலைகொண்டிருந்தனர்.

**பெரும் இழப்பை கொடுத்து கிளிநொச்சியை தக்கவைக்க புலிகள் விரும்பவில்லை என்றே தெரிகிறது. ஆனால் படையினரின் காப்பரண்கள் கைகொடுப்பதால், தமது தரப்புக்கு அதிக இழப்பற்ற முறையில் படையினரின் முன்னேற்றத்தை தடுக்க முடிகிறது. எனவேதான் கிளிநொச்சி நகரை தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.**

கிளிநொச்சி நகரை தொடர்ந்து வைத்திருப்பதோ, கைவிடுவதோ புலிகளுக்கு கௌரவப் பிரச்சனையான விடயமல்ல. ஆனால் கிளிநொச்சி நகரை மறுபடி பிடித்தேயாக வேண்டும் என்பது படையினருக்கு கௌரவப் பிரச்சனையாகியுள்ளது.

எனவே, சுதந்திர தினத்தை முடித்துக் கொண்டு ஜயசிக்குறுய் படைகளுக்கு உதவியாக இறக்க நினைத்த படை பலத்தில் பெரும் பகுதியை கிளிநொச்சிக்கு கொண்டு செல்ல வேண்டி ஏற்பட்டது.

பரந்தன்–கிளிநொச்சி சமர் மூலம் புலிகளின் இராணுவ செயற்பாடு மற்றொரு கட்டத்திற்குள் பிரவேசித்துள்ளது.

வன்னிச் சமரில் இதுவரை காலமும் முன்னேறும் மரபுப் படையை தடுத்து நிறுத்துவது, மற்றும் ஊடறுத்துத் தாக்குவது என்ற உத்திகளோடுதான் சண்டைகள் முன்னெடுக்கப்பட்டன.

**ஒரு பரந்த பிரதேசத்தில் நிலை கொண்டிருக்கும் மரபுப் படையணிமீது தாக்குதல் தொடுத்துப் பின்வாங்கச் செய்வதுடன், மரபுப் படையின் கையில் இருந்த குறிப்பிட்ட நிலப்பகுதியை கைப்பற்றி நிலை கொள்ளவும் தம்மால் முடியும் என்பதை கிளிநொச்சி சமர் மூலம் புலிகள் நிரூபித்துள்ளனர்.**

ஏற்கனவே முல்லைத்தீவு முகாமை தாக்கியழித்து அப்பகுதியை புலிகள் கைப்பற்றியிருந்தனர். ஆனால் முழுக்க முழுக்க கெரில்லாப் பாணியில் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் மூலமே முல்லை முகாம் அழிக்கப்பட்டது.

**பரந்தன்–கிளிநொச்சிச் சமரும், கடந்த பதினைந்து நாட்களாக கிளிநொச்சி நகரில் தொடரும் சண்டையும் மரபுப்போர் உத்திகளும் கலந்த சண்டைகளாகும்.**

அதுமட்டுமன்றி புலிகள் தாக்குவர் என்று ஒவ்வொரு நொடியும் விழிப்பாக இருந்த பிரதேசமே பரந்தன் முதல் கிளிநொச்சிவரை படைகள் நிலை கொண்டிருந்த பிரதேசமாகும்.

அவ்வாறான நிலையில் கூட படையினர் பின்வாங்க நேர்ந்தமை புலிகளின் தாக்குதலின் உக்கிரத் தையே குறிக்கிறது. படையினர் வைத்திருந்த காப்பரண்கள் எத்தனை வலிமையானவை என்பதை, அந்தக் காப்பரண்களில் இருந்து புலிகள் நடத்தும் தாக்குதலை முறியடிக்க படையினர் படும் பாட்டில் இருந்து தெரிகிறது.

**அதே காப்பரண்களில் இருந்து புலிகளை எதிர்த்து தாக்க முடியாமல் படையினர் பின்வாங்கும் அவசியம் ஏற்படுமளவுக்கு புலிகள் உக்கிரம் காட்டியுள்ளனர்.**

கிளிநொச்சியில் புலிகளின் அணிகள் முழுக் கவனம் செலுத்தவதால், ஜயசிக்குறுய் படைகள் முன்னேற பலத்த எதிர்ப்பு இருக்காது என்று படையினர் திட்டம் போட்டனர்.

அதனை புலிகளும் முன்கூட்டியே ஊகிக்காமல் இருந்திருக்க முடியாது. அதனால்தான் வன்னியின் சகல முனைகளிலும் கவனம் செலுத்தும் விதமாக, தமது ஆளணிப் பலத்திற்கு ஏற்ற சண்டை முறையில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் காப்பரண்களில் இருந்துகொண்டு ஷெல்களைத்தான் அடிக்கடி ஏவுகின்றனர். அதேசமயம் ஞாயிறு காலையில் பரந்தன் படைநிலைகள்மீது மற்றுமொரு திடீர் தாக்குதல் கொடுத்து விட்டு, அதே வேகத்தில் திரும்பின புலிகளின் அணிகள்.

படையினர் கரடிப்போக்கு முன்னரங்க பகுதியில் முழுப்பலத்தையும் ஒன்று குவித்து கிளிநொச்சி நகரை நோக்கி நகர்ந்தால், முரசுமோட்டை ஊடாக ஊடறுக்கும் புலிகளின் அணிகள் படையினரின் பின்னரங்கப் பகுதியிலும், இடுப்புப் பகுதியிலும் பலத்த சேதத்தை விளைவிக்கக் கூடும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சத்ஜய படை நடவடிக்கையின்போது புலிகளிடம் இருந்த ஆட்டிலெறி மற்றும் மோட்டார் குண்டுகளின் சுடு பலத்தைவிட, தற்போது பன்மடங்கு சுடுபலம் இருக்கிறது.

**'ஜயசிக்குறுய்' படையினரிடம் கைப்பற்றிய ஆட்டிலெறி ஷெல்கள்,மோட்டார் குண்டுகள் மற்றும் ஆயுதக் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட ஷெல்கள் போன்றவை புலிகளின் ஆட்டிலெறி, மற்றும் நீண்டதூர மோட்டார்களின் சுடுபலத்தை உயர்த்தியுள்ளன.**

முரசுமோட்டையில் இருந்து ஆட்டிலெறி இயக்கப்பட்டால், ஆனையிறவு தளம் வரை சென்று விழும்.

அதுமட்டுமன்றி கிளிநொச்சி நகரில் படைபலத்தை அதிகரிப்பதற்காக, கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு பகுதியான 30 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பூநகரியை படையினர் கைவிட்டனர்.


தற்போது பூநகரியில் இருந்தும் புலிகள் மோட்டர் ஷெல்களை ஏவுகின்றனர்.

எனவே, சத்ஜய இராணுவ நட வடிக்கை மேற்கொள்ளப்பட்ட இரண்டு வருடங்களின் பின்னர் கள நிலவரப்படி புலிகளின் சண்டைப் பலம் மேலோங்கியுள்ளது.

எனவே, புலிகள் இராணுவரீதியில் பலவீனமாகிவிட்டனர் என்ற அரசதரப்பின் பிரசாரம் உண்மைதானா? என்ற கேள்விக்கு பதில் சொல்வது கடினமல்ல. ■

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**இடம் வலம் தெரியாது** என்ற நம்பிக்கையில், "கிளிநொச்சி பார்க்க வாருங்கோ" என்று பத்திரிகையாளர்களை கூட்டிப்போனவை. கரடிப்போக்குக்கு பக்கத்தில் 200 யார் தூரத்துக்குள் சுத்திக்காட்டிப் போட்டு, சுழற்றிக்கொண்டு வந்து போட்டினம். ரவை துளைக்காத ஆடையும் கொடுக்கப்பட்டதாம். ஒரு ஷெல் வந்து விழுந்திருந்தால் ஆடை என்ன செய்யும?

**செய்தி எழுதும்போது** கொஞ்சம் பொருத்தமாகக் கதை எழுதக்கூடாதோ? "கிளிநொச்சி முழுக்க எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது" என்று முதல் பந்தியில் வாசிக்கினம். பின்னர் அடுத்த பந்தியில் "ஏறக்குறைய நகர் கட்டுப்பாட்டில் இருக்கிறது" என்று சொல்லுகினம். உண்மை கசியிறதை எப்படித் தடுக்கிறது? கஷ்டம்தானே!

**பச்சைக் கட்சியினரை** ஒரு வாங்கு வாங்கும் பொறுப்பை அதிகாரத்தரப்பார் கூட்டான கட்சித் தலைவரிடம் ஒப்படைத்துவிட்டார்களாக்கும்! அதிகாரத் தரப்பாரின் உத்தியோக பூர்வமற்ற பேச்சாளராக கலக்கிக்கொண்டிருக்கிறார். எங்கள் சனத்தின் தலையில் மண் அள்ளிப்போட பச்சைக் கட்சியையும் கூப்பிட்டுபவர் உள்ள கட்சியோடு சேர்த்து வைக்கப்போகினமாக்கும்! சாணக்கியத்தை நினைச்சா புல்லரிக்குது.

**ரெண்டு எழுத்தாருக்கும்** ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும இடையே வெட்டுக் குத்து நடக்கிறது. கூட்டான கட்சிக்கு கொண்டாட்டம். என்றாலும் ரெண்டு எழுத்தாரை தமிழ்க் கட்சிகள் அதிகம் திட்டாமல் இருப்பதும் கூட்டான கட்சிக்கு வருத்தம். ரெண்டு எழுத்தாரை சனம் வெறுக்க வைத்தால், அதன் பலன் தங்களுக்குத்தான் சேரும் என்று நினைக்கினம் ஐயாமார். ரெண்டு எழுத்தாராலேயே முடியவில்லை; இனி இந்த இயக்கங்கள் ஏன்? என்று சனம் யோசித்து நிராகரித்துவிட்டு, கூட்டான கட்சிக்கு புள்ளடி போடுமல்லோ, அதுதான் மோதவைக்க ஆசையாம்! ஹி.ஹி.சின்னச் சின்ன ஆசை.

**முதன் முதல்** தோன்றிய இயக்கம் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் அந்த இயக்கத்தினர். தேர்தலை முன்னிட்டு நீண்டகாலத்தின் பின்னர் முதன் முதலாக யாழ்ப்பாணம் சென்றனர். சென்றதும் செல்லாததுமாக யாழ் புடவைக் கடைகள் சிலவற்றில் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் என்று நிதி கேட்டிருக்கினம். வாகனங்களும், சாப்பாட்டு பார்சல்களும்கூட மக்களிடம் கேட்கப்பட்டுள்ளனவாம். இயக்கங்கள் புழுத்துப் போச்சு. இனி இனம் தெரியாத கப்பக்கறப்புக்கள், கொள்ளைகள்கூட நடக்கலாம். பெரியவர் ஒருத்தர் சொன்ன பொன்மொழி இது: "நின்றால் வேலுப்பிள்ளையாரின் மகன் நிற்கவேணும்; இல்லையென்றால் கூட்டணி நிற்கவேணும்!"

**மலையகத் தனித்துவத் தலைவர்** தன்னை நியாயப்படுத்த ரெண்டு எழுத்துத் தலைவரின் பெயரையும் இழுத்திருக்கிறார். கேட்டது கிடைக்காவிட்டால் எது கிடைத்தாலும் வாங்கிக்கொண்டு, அதற்கு ஒரு நியாயம் சொல்லும் தன் நிலையோடு ரெண்டு எழுத்து தலைவரை ஒப்பிடுவதை தொண்டரின் சகாக்கள்கூட முகச்சுளிப்போடு பேசிக்கொண்டவையாம்.

**ரூபவாஹினித் தமிழ் பகுதித் தலைவராக** இருந்துவிட்டு, இனியும் நம்பிப் பயனில்லை என்று தெரிந்துகொண்டு இராஜினாமாச் செய்தவர் வசந்தராஜா. இப்போது 'தமிழ் கார்டியன்' பத்திரிகை ஆசிரியராக இருக்கிறார். வெளியுலகில் காலத்துக்கு ஏற்ற பணி செய்கிறது பத்திரிகை. அமைப்பும் நன்றாக உள்ளது.

**யாழில் இருந்து** 'சூர்ய காந்தி' என்றொரு பத்திரிகை புதிதாக மலர்ந்திருக்கிறது. விரைவில் இன்னொரு பத்திரிகை வரவுள்ளதாக அச்சக வட்டாரத் தகவல் ஒன்று கூறுகிறது. ஆயிரம் பூக்கள் மலரட்டும். ஆயிரம் கருத்துக்கள் தோன்றட்டும். ஆனால் உரமான கருத்துக்களாக இருக்கட்டும். வரவேற்போம்! தமிழில் புதிய பத்திரிகைகளும், செய்தி ஊடகங்களும் மேலும் பெருகவேண்டும்! ஆனால் ஊதுகுழல்களாக இருக்கக்கூடாது. பரந்துபட்ட சிந்தனையும், சரியான கருத்துக்களை இயலுமானவரை முன்வைத்தலுமே இன்றைய தேவை! கஷ்டங்கள் மத்தியிலும் 'உதயன்' அதை குறிப்பிட்டளவு செய்கிறது. 'சூர்ய காந்தி'யும் செய்யும் என நம்புவோம்.

**இவ்வாரப்** பொன்மொழி:

**"கவிழ்த்துவிடும்
முகஸ்துதிகளையும்
முழுப் பொய்களையும்விட
காயப்படுத்தினாலும்
உண்மையே மேல்!"** ■




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# ரோகன விஜயவீரவின் கடைசி நாட்கள்

அரசு ஏனைய இயக்கங்களுடன் பேச்சு நடத்துவது குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சி என்றே புலிகள் கருதினர்.

இந்திய அரசு செய்தது போல, ஏனைய இயக்கங்களை குறைந்த பட்ச தீர்வுகளுக்கு முதலில் இணங்கவைத்துவிட்டு, பின்னர் புலிகளையும் அத்தீர்வை ஏற்குமாறு நிர்ப்பந்திக்கும் இராஜதந்திரத்தை பிரேமதாசாவும் கையாளப்போகிறாரோ என்று புலிகள் சந்தேகப்பட்டனர்.

. எனவே, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருடன் பிரேமதாசா அரசாங்கம் பேச்சு நடத்தியதற்கு புலிகள் தங்கள் கண்டனத்தை தெரிவித்தனர்.

பிரேமதாசாவுக்கு புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தையை முறிக்கும் எண்ணம் இல்லையென்றாலும், புலிகளை இயக்கத்தை மட்டும் ஏகப்பிரதிநிதிகளாக அங்கீகரித்தால், அவர்கள் கேட்பதை கொடுக்க வேண்டி இருக்குமோ என்ற தந்திர யோசனையும் இருந்தது.

ஜே.வி.பி.யை முற்றாக ஒழித்துக்கட்டிய பின்னர் புலிகளுடன் பேச்சு நடத்துவதுடன், ஏனைய கட்சிகளையும் பேச்சுக்கு அழைக்கலாம் என்று திட்டம் வைத்திருந்தார் ஜனாதிபதி.

விரைவில் ஜே.வி.பி.யை ஒழித்துவிடலாம், அதன் தலைவரான ரோகன விஜயவீரவையும் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையை பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் பிரேமதாசாவுக்கு வழங்கியிருந்தன.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்னவின் முயற்சியால், ரோகனாவையும், ஜே.வி.பி.யையும் ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகள் படு தீவிரமாக நடந்து வந்தன.

ரோகன விஜயவீர பிடிபட்டால் கொன்றுவிடவேண்டும் என்று திட்டவட்டமாக முடிவு செய்திருந்தார் ரஞ்சன்.

ஜே.வி.பி.க்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் மற்றும் முப்படை அதிகாரிகளை தட்டிக்கொடுத்து ஊக்குவித்தவர் ரஞ்சன்தான்.

ரஞ்சனின் வழிநடத்தலில் ஜே.வி.பி.யை ஒழித்துக் கட்டும் கடைசிக் கட்டத்திற்குள் பிரவேசித்தது பாதுகாப்புத் துறை.

## ரோகன விஜயவீர

இக் கட்டத்தில் ரோகன விஜயவீரவின் கடைசி நாட்களைப் பற்றி வாசகர்களுக்கு கண்டிப்பாகத் தெரிவித்தேயாக வேண்டும்.

ஆயிரக்கணக்கான இளைஞர்களை ஒன்றுதிரட்டி இரண்டு தடவைகள் மாபெரும் ஆயுதக் கிளர்ச்சிகளுக்கு தலைமை தாங்கியவர் ரோகன விஜயவீர.

1971ல் நடைபெற்ற கிளர்ச்சியில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி.யின் கதை முடிந்தது என்று கருதப்பட்டது.

கதை முடியவில்லை. 1987ல் வடக்கு–கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகள் எங்கும் ஆயுதக் கிளர்ச்சி வெடித்துக் கிளம்பியது.

ஏறக்குறைய இரண்டு வருடகாலம் நாட்டையே ஆட்டிப்படைத்தது ஜே.வி.பி.

ரோகன விஜயவீரவின் கொள்கைகள் பற்றிய மதிப்பீடுகள் எப்படி இருப்பினும், ரோகன விஜயவீரவின் திறமைகளையும், மக்களைக் கவரும் ஆளுமைத் திறனையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

யார் வேண்டுமானாலும் கட்சி நடத்தலாம். ஆனால் யார் வேண்டுமானாலும் கட்டுப்பாடுடைய, போர்க்குணமிக்க ஆற்றலுடைய, எதற்கும் தயாரான கட்சியை கட்டியமைக்க முடியாது.

ரோகன விஜயவீர புரட்சிகரக் கட்சியையும், அதற்குரிய புரட்சிகர இராணுவத்தையும் ஒழுங்கமைப்பதிலும், ஆற்றலுடன் கட்டியெழுப்புவதிலும் குறிப்பிடத்தக்க திறனுடையவராக இருந்தார்.

பாராளுமன்றத் தேர்தல்கள் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. தேர்தல்கள் மூலம் தலைமைகளும் உருவாக மாட்டாது.

மக்கள் எப்போதுமே சரியாகத் தீர்மானிப்பார்கள், சரியானவர்களுக்கு வாக்களிப்பார்கள், சரியான கருத்தினை பற்றி நிற்பார்கள் என்று உத்தரவாதம் கிடையாது.

மக்கள் தாமாகவே சரியான முடிவுகளுக்குச் செல்வர் என்றால், தலைவர்கள் தோன்றும் அவசியம் இருந்திருக்காது..



தாடியில்லாத ரோகன விஜயவீர

தவறான சக்திகள் மக்களை ஏமாற்றி பதவிக்கு வரவும், தங்களை தலைவர்களாக கூறிக்கொள்ளவும் தேர்தல்கள் பயன்படுவது உண்டு.

போலி வாக்குறிகள், ஏமாற்று, மோசடி என்பவைதான் பலசமயங்களில் தேர்தலில் வெற்றி வாய்ப்பை தீர்மானிக்கின்றன.

தூய்மையான தேர்தல், நியாயமான தேர்தல் என்பதெல்லாம் சுத்த ஏமாற்றுக் கதைகள். அதுவும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தற்போதைக்கு நியாயமான தேர்தல் என்பதற்கு வாய்ப்பே இல்லை.

எனவேதான் தேர்தல் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதை புரட்சியாளர்கள் ஏற்பதில்லை.மக்களை போராட்டங்களுக்கு அணிதிரட்டுகிறார்கள். ஆயுதம் ஏந்தாத போராட்டங்கள் தோல்வி காணும்போது ஆயுதம் ஏந்திய போராட்டங்களுக்கு தயார்படுத்துகிறார்கள்.

சில சமயங்களில் தேர்தல்களிலும் அவர்கள் பங்குபற்றுவர். அவ்வாறு பங்கு கொள்வது தேர்தல் முறைகளில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக அல்ல.

தங்கள் கருத்துக்களை பகிரங்கமான முறையில், பரவலாக வெளிப்படுத்துவதற்காகவும், அரசாங்கத்தால் முளையிலேயே கிள்ளி எறியப்படாமல் தங்கள் அமைப்பை வளர்த்துக் கொள்வதற்காகவும், சட்ட பூர்வ வாய்ப்புக்கள், சட்டபூர்வ பாதுகாப்புக்கள் என்பவற்றை குறிப்பிட்ட காலம் பயன்படுத்துவதற்காகவுமே தேர்தல்களில் போட்டியிடுவர். பதவிகள் கிடைத்தால் அவற்றையும் பயன்படுத்துவர்.

## போட்டியும், தவிர்ப்பும்

தேர்தல்களில் எப்போது போட்டியிடலாம்? எப்போது போட்டியிடக்கூடாது என்பதும் முக்கியம்.

மக்களின் எழுச்சிகளையோ, அல்லது மக்களின் உணர்வுகளையோ திசை திருப்ப அரசாங்கங்கள் தேர்தல்களை நடத்துமானால் அவற்றை நிராகரிக்க வேண்டும்.

புரட்சி எழுச்சிக்கான தேவைகள் சிலவற்றை நிறைவேற்றலாம் என்ற நிலையிலோ, அல்லது, பாராளுமன்றம் மற்றும் நிறுவனங்களில் மக்கள் நம்பிக்கை கொண்டு நிற்கும் சூழ்நிலையில், அந்த நிறுவனங்களுக்கு சென்று அங்கிருந்தே அவற்றை அம்பலப் படுத்தும் தேவைக்காகவும் தேர்தலில் போட்டியிடலாம்.

1971ல் ஜே.வி.பி. கிளர்ச்சி மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டது. ரோகனவிஜயவீர உட்பட பல தலைவர்கள் சிறைகளில் அடைக்கப் பட்டனர்.

1977ல் ஐ.தே.கட்சி பதவிக்கு வந்த பின்னர் ஜே.வி.பி.யினரை விடுதலை செய்தது. ஆயினும் ஜே.வி.பி. மறுபடி ஆயுதக் கிளர்ச்சிக்கு தயாராகிறதா? என்பதை அரசின் உளவுத்துறை கண்கொத்திப் பாம்பாக கவனித்து வந்தது.

அதனால் தங்களை தேர்தலில் நம்பிக்கை கொண்ட கட்சியாக வெளியே காண்பித்தபடி, மறைமுகமாக ஆயுதக்கிளர்ச்சி நடவடிக்கைக்கான தயாரிப்புக்களில் ஈடுபடத் தொடங்கியது ஜே.வி.பி.

1982 அக்டோபர் 20ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரோகன விஜயவீர போட்டியிட்டார். இரண்டு இலட்சத்து 73 ஆயிரத்தி 428 வாக்குகள் கிடைத்தன. இரண்டாவது இடத்தில் வந்தார்.

மேதின அணிவகுப்புகள், பகிரங்க அரசியல் கூட்டங்கள், கருத்தரங்குகள் என்று ஜே.வி.பி. மீண்டும் வளர்ந்து வந்தது.

பகிரங்க அரசியலில் சாதுவான முகத்தை காட்டிக் கொண்டு, இரகசியமாக அரசியல் வகுப்புக்கள், ஆயுதப் பயிற்சிகள் என்பவை சுறுசுறுப்பாக நடைபெற்றன.

அமைப்பை கட்டுவதில் மாத்திரமல்ல, புரட்சிகரக் கருத்துக்களைப் பிரசாரப்படுத்துவதிலும் ரோகன விஜயவீர வல்லவர்.

தமது அமைப்பில் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றைப் பேணுவதிலும், அவற்றை மீறுகின்றவர்களைத் தண்டிப்பதிலும் தயவு தாட்சண்யம் காட்டியதில்லை.

இலங்கையில் புரட்சிகர கம்யூனிச இயக்கங்கள் பலவும், வடக்கு-கிழக்கில் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பலவும் இருந்துள்ளன.

ஆயினும், கட்டுப்பாடானதும், திடமானதுமான அமைப்பை உருவாக்கி, எதற்கும் தயாரான ஆற்றலுடன் கூடிய உறுப்பினர்களை வளர்த்தெடுத்தவர்களில் முதலிடம் பிரபாகரனுக்கு, இரண்டாவது இடத்தில் இருப்பவர் ரோகன விஜயவீர. மூன்றாம் இடம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தலைவராக இருந்த சண்முகதாசனுக்குத்தான் என்று நினைக்கிறேன்.

ஏனைய கட்சிகள், இயக்கங்களுக்கு தலைவர்களாக இருந்தவர்களில் சிலர் ஆற்றலுள்ளவர்களையும் முனைமங்கச் செய்வதில் வல்லவர்களாக இருந்தனர். வேறு சிலர் ஓடுகிற தண்ணீரின் போக்குக்கு ஏற்ப நீந்திச் செல்பவர்களாக இருந்தனரே தவிர, தீர்க்கமான பாத்திரம் வகிப்பவர்களாகவோ, நிகழ்ச்சிப் சமகால போக்குகளை தீர்மானிப்பவர்களாகவோ இருக்கவில்லை.

ரோகன விஜயவீர ஈராக், கியூபா போன்ற நாடுகளுக்கு சென்று வந்தார். ஷம்பியா, நிக்கரகுவா, ஸ்பெயின் போன்ற நாடுகளில் இருந்து புரட்சிகர இயக்கங்களுடன் தொடர்பு வைத்திருந்தார்.



ரோகன விஜயவீர–மனைவி பிள்ளைகளுடன்

ரோகன விஜயவீரமீதும், ஜே.வி.பி.மீதும் சந்தேகம் கொண்ட அரசாங்கம் 1983ல், அவரைக் கைதுசெய்ய முயற்சித்தது.

கைதாக விரும்பாமல் தலை மறைவானார். அதனைத் தொடர்ந்து ஜே.வி.பி இயக்கத்தினரும் தலைமறைவாகவே இயங்கத் தொடங்கினர்.

பகிரங்கமாக இயங்கியபோதே எந்தத் தருணத்திலும் சட்டவிரோதமான முறையில் இரகசியமாக இயங்கக்கூடிய தயார் நிலையில் இருந்தது ஜே.வி.பி.

அதனால், ரோகன விஜயவீர தலைமறைவானதும், ஜே.வி.பி.யின் இரண்டாம் கட்டத் தலைவர்களைத் தேடி அரசாங்கம் வலை விரித்தபோது யாரும் சிக்கவில்லை.

## காட்டுக்குள்

ரோகன விஜயவீரவுக்கு 1981ல் ஒரு மகளும், 1982 ஏப்ரலில் ஒரு மகனும் பிறந்தனர்.

இரண்டு பிள்ளைகளையும்,தன் மனைவியையும் தங்காலையில் உள்ள உறவினர் வீடொன்றில் விட்டுவிட்டு கதிர்காமத்தில், செல்லக் கதிர்காமம் சார்ந்த காட்டுப் பகுதிக்குள் தனது பாதுகாவலர்களுடன் புகுந்து கொண்டார்.

தலைமறைவானதும் தனது தாடியை மழித்து, தலைமுடியையும் வித்தியாசமாக வெட்டிக்கொண்டார்.

சிறுது காலத்தின் பின்னர் தனது குடும்பத்தினருடன் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று தங்கியிருந்தபடியே கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

நாடெங்கும் ரோகன விஜயவீரவை தேடிக்கொண்டிருந்தபோது, சாதாரண ஆள் போன்று நாட்டின் பல பகுதிகளுக்கு சென்று வந்தார்.

1984 ஜூலை 24ம் திகதி பதுளை மருத்துவ மனையில் மூன்றாவது பெண் குழந்தை பிறந்தது. அப்போது அத்தநாயக்கா என்ற பெயரில் நடமாடிக்கொண்டிருந்தார் ரோகன. அதனால் குழந்தைக்கும் அத்தநாயக்கா முதியான்சிலாகே மாயா என்று பெயர் வைத்தனர்.

தமது இரு பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்ப்பதற்காக வேறு பெயர்களில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் தயாரித்தனர். ரோகன விஜயவீரவின் மனைவியின் பெயரும் மாற்றப்பட்டது.

தனது மூன்று பிள்ளைகள்மீதும் மிகுந்த வாஞ்சை கொண்டிருந்தார் ரோகன விஜயவீர.

ரோகன விஜயவீர குடும்பத்தினர் தங்கியிருந்த வீட்டுக்கு அருகில் களவு நடந்திருந்தது. அதனை விசாரிக்க பொலிசார் வந்தனர். ரோகன விஜயவீரவின் வீட்டுக்கு வந்து மனைவியிடமும் விசாரித்தனர். உங்கள் கணவர் பெயர் என்ன? அவர் எங்கே? என்றும் கேட்டுவிட்டுப் போனார்கள்.

அதனால் சந்தேகம் அடைந்த ரோகன அந்த வீட்டைக் காலி செய்தார்.

பண்டாரவளையில் நெலுவ என்ற இடத்தில் 13 ஏக்கர் தோட்டம் ஒன்றை கட்சி நிதியில், ஜே.வி.பி. முக்கிய பிரமுகர்களில் ஒருவரான சோமவன்ச அமரசிங்கவின் பெயரில் வாங்கினார்கள்.

இங்கு தங்கியிருந்த போது 1987ல் ரோகனவின் நான்காவது பிள்ளையாக பெண் குழந்தை பிறந்தது. 1988 மே 20ல் ஐந்தாவதாக ஆண் குழந்தை பிறந்தது.

1987ல் ஜூலை 29ம் திகதி ரோகன விஜவீர குடும்பம் பண்டாரவளை தோட்டத்தையும் காலி செய்துவிட்டு, இரத்தினபுரி ஊடாக பண்டாரகமவுக்கு சென்றனர்.

தொடர்ந்து ஒரே வீட்டில், ஒரே பகுதியில் இருப்பது பாதுகாப்பானதல்ல என்பதால் அடிக்கடி வீடு மாறிக் கொண்டே இருந்தனர்.

பண்டாரகமவுக்கு செல்லும்போது இரத்தினபுரியில் ஐ.தே.கட்சிக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

ஜே.வி.பி.யினரால் அரசியல் கட்சிக் கூட்டங்கள் தாக்கப்படலாம் என்ற அச்சுறுத்தல் இருந்தமையால் அப்பகுதியினால் செல்லும் வாகனங்கள் பொலிசாரால் சோதனையிடப்பட்டன.

ரோகன விஜயவீர காரின் முன் ஆசனத்தில் தன் இரு பிள்ளைகளுடன் அமர்ந்திருந்தார். ஏனைய மூன்று பிள்ளைகளுடன் மனைவி பின் ஆசனத்தில் இருந்தார். காரை கமநாயக்கா செலுத்தினார்.

பொலிசார் உள்ளே பார்த்துவிட்டு தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்.

ரோகன விஜயவீர என்றால் தாடி வைத்திருப்பார். கண்ணாடி போட்டிருப்பார், பாதுகாவலர்கள் சகிதம் ஆயுதங்களுடன் பயங்கரமாக நடமாடுவார் என்றுதான் பொலிசார் நினைத்தனர்.

"நான்தான் ரோகன விஜயவீர" என்று அவர் கூறியிருந்தால்கூட நம்பியிருக்க மாட்டார்கள்.

ஒருநாள் ரோகன விஜய வீரகமநாயக்காவும் வெளியே சென்றுவிட்டு காரில் திரும்பிவந்தபோது, பண்டாரகம வீட்டின் முன்பாக பொலிஸ் குழு ஒன்று நிற்பதைக் கண்டனர்.

காரை ஒரு புறமாக நிறுத்திவிட்டு இருவரும் பதுங்கிக் கொண்டனர். பொலிசார் சென்ற பின்னர்தான் மனைவியிடம் சென்று விசாரித்தார்.

அருகிலுள்ள தோட்டத்திற்கு பூக்கள் கொய்ய வந்தாகவும், தவறுதலாக அங்கு வந்துவிட்டதாகவும் பொலிசார் கூறியதாக மனைவி சொன்னார்.

ரோகன அதனை நம்பவில்லை. மின்னல் வேகத்தில் அந்த தோட்டத்தைக் காலி செய்துவிட்டு, காரில் புறப்பட்டு கொழும்பு சென்றனர்.

பாதுகை என்ற இடத்தில் உள்ள இ.போ.ச. ஊழியர் ஒருவர் வீட்டில் தன் குடும்பத்தினரை ஒரு மாதம்வரை தங்க வைத்தார் ரோகன.

நுவரெலியாவில் உள்ள உலப்பனையில் இருக்கும் சென் மோரிஸ் தோட்டத்தில் உள்ள பங்களாவை கட்சி நிதியில் வாங்கியிருந்தார் சோமவன்ச அமரசிங்க.

அடிக்கடி வெளியே சென்று நடவடிக்கைகளுக்கு வழிகாட்டிவிட்டு வீட்டுக்கு திரும்புவார் ரோகன. சென் மோரிஸ் தோட்ட வீடு கட்சியின் அரசியல் பீட உறுப்பினர்களுக்கு மட்டும்தான் தெரிந்திருந்தது.

நாட்டின் பல பகுதிகளில் ஜே.வி.பி. கிளர்ச்சிகள் நடந்து கொண்டிருந்தபோது சென் மோரிஸ் தோட்ட வீடு அமைந்திருந்த உலப்பனையில் மட்டும் அமைதி நிலவியது.

அதனை துல்லியமாகச் கவனித்துவிட்டது ஜே.வி.பி.க்கு எதிரான ஒருங்கிணைப்பு நடவடிக்கை பிரிவு. அதனால் சந்தேகம் வந்துவிட்டது.

தம்மை அறியாமலேயே ஜே.வி.பி.யினர் செய்த தவறு அது. அத் தவறுதான் பெரும் விபரீதத்துக்கு அடிகோலியது.

இராணுவ வாகனம் ஒன்றும் சென் மோரிஸ் தோட்டப் பக்கம் வந்து சென்றது.

உடனடியாக அங்கிருந்து பண்டாரவளைக்குச் சென்றது ரோகனவின் குடும்பம். எனினும் இராணுவத்தினர் சென் மோரிஸ் வீட்டுப் பக்கம் அதன்பின்னர் செல்லவில்லை என்பதை அறிந்ததும், மறுபடியும் அங்கேயே திரும்பி வந்தனர்.

இக் காலகட்டத்தில் ரோகன விஜயவீரவின் பிள்ளைகள் அடிக்கடி நோய்வாய்ப்படலாயினர்.

1989 ஆகஸ்ட் 25ல் இரண்டாவது புதல்வி சுராணிக்கு சிறு நீருடன் இரத்தம் போகத் தொடங்கியது. பதுளையில் லங்கா நேர்சிங் ஹோமில் சேர்த்தனர்.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு விட்டது என்பதால் பதுளை பொது மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டாள்.

பதுளை பொது மருத்துவ மனையில் ஆபத்துக் காத்திருந்தது. அது ரோகனவின் மகளது கட்டிலுக்கு அருகேயே இருந்தது.

ரோகனவின் மகளது கட்டிலுக்கு அடுத்த கட்டிலில்தான் பதுளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் குழந்தை இருந்தாள்.

ஜே.வி.பி.யினர் பொலிசாரையும் அவர்களது குடும்பத்தினரையும் பழிதீர்ப்பதால் பொலிஸ் அதிகாரியின் மகளுக்கு மருத்துவமனையில் கட்டிலுக்கு அருகே காவல் போடப்பட்டிருந்தது.

எங்கே, தங்களை அடையாளம் கண்டுவிடப்போகிறார்களோ என்று ரோகனவின் மனைவி பயந்து கொண்டிருந்தார்.

நல்ல வேளையாக யாரும் அடையாளம் காணவில்லை. கொழும்பு மருத்துவ மனைக்கு பிள்ளையை கொண்டு செல்லுமாறு மருத்துவ மனையில் கூறினர்.

1989 அக்டோபரில் சிறீ ஜெயவர்த்தனபுர மருத்துவ மனையில் குழந்தையைக் சேர்ந்தனர்.

இக் காலகட்டத்தில் போலி அடையாள அட்டையுடன் கொழும்புக்கும், ஏனைய பகுதிகளுக்கும் ரோகன விஜயவீர தன் மனைவியுடன் சென்று வந்தார்.

சோதனையிடும் படையினரோ, பொலிசாரோ அவர்களைச் சற்றும் சந்தேகிக்கவில்லை.

எனினும் எல்லாவற்றுக்கும் முடிவான அந்த நாள் வந்தது. ரோகனவின் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவனே பணத்திற்கு ஆசைப்பட்டு காட்டிக் கொடுத்தான்.

அந்த சோகமான இறுதி அத்தியாயம் அடுத்த வாரம்.

(தொடர்ந்து வரும்)

## அலசுவது- இராஜதந்திரி

# ஆளும் கட்சி-எதிர்க்கட்சி இழுபறி
# தமிழ் பேசும் தரப்புக்கு சாதகம்
## விவேகமில்லாமல் சமரசம் பேசும் கட்சிகள்

அரசியல் தீர்வு முயற்சிகளை ஐ.தே.கட்சி குழப்பிவருகிறது என்று ஆட்சியாளர்கள் மறுபடியும் உரத்து கூறிவருகின்றனர்.

**இதே ஆட்சியாளர்களால்தான் ஐ.தே.கட்சி ஆதரித்தால் என்ன, ஆதரிக்காவிட்டால் என்ன தீர்வுத் திட்டத்தை கொண்டுவந்தே தீருவோம். அதற்குரிய திட்டம் எம்மிடம் இருக்கிறது என்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கூறியிருந்தனர்.**

தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் ஜனாதிபதி சந்திரிக்காவே தன் வாயால் அதனைக் கூறியிருந்தார்.

தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தலை பின்போடும் படியும், உள்ளூராட்சித் தேர்தலில் ஏட்டிக்குப் போட்டியாக நின்றுகொண்டு, அரசின் தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது கடினம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் கூறியிருந்தார்.

தமிழ்க் கட்சிகள் சார்பாக கூட்டணித்



தலைவர் மு.சிவசிதம்பரம் அவர்கள் ரணிலின் கோரிக்கையை ஜனாதிபதியிடம் தெரிவித்ததுடன் நின்றுவிடாமல், அக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

**ஆனால், ஜனாதிபதி சந்திரிக்கா ரணிலின் கோரிக்கையை நிராகரித்ததுடன், "ஐ.தே.கட்சி ஒருபோதும் தீர்வுக்கு ஒத்துழைக்கப்போவதில்லை என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். எனவே தேர்தலை பின்போடுவதில் அர்த்தமில்லை. அரசியல் தீர்வை ஐ.தே.கட்சி ஒத்துழைப்பு இன்றி முன்னெடுக்கவும் எங்களிடம் திட்டம் இருக்கிறது" என்று கூறியிருந்தார்.**

ஜனாதிபதியுடனான மேற்கண்ட சந்திப்பில் திரு. சிவசிதம்பரம் மட்டுமல்லாமல், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

கடந்த ஆண்டு தென்னிலங்கை உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாக நடைபெற்றிருந்த சந்திப்பே அதுவாகும்.

அதுமட்டுமன்றி அரசியல் தீர்வுப் பொதி தொடர்பான பல்வேறு சூளுரைகளை கடந்த ஆண்டில் ஆட்சியாளர்கள் விடுத்திருந்தனர். ஐ.தே.கட்சிக்கு சவால்விடும் வகையிலேயே அவை அமைந்திருந்தன.

**"சர்வசன வாக்கெடுப்பு நடத்துவோம், ஐ.தே.கட்சிக்குள் தீர்வுப் பொதிக்கு ஆதரவானவர்கள் உள்ளனர். எனவே பாராளுமன்றத்திலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற முடியும். இனிமேலும் ஐ.தே.கட்சிக்கு காலவரையறை கொடுக்க முடியாது. 98 ஜனவரிக்குள் தீர்வு வரும்" போன்ற சவால்களையும், சூளுரைகளையும் ஆட்சியாளர்கள் சென்ற ஆண்டு முழுவதும் வாரி வழங்கிக் கொண்டிருந்தனர்.**

அதே ஆட்சியாளர்கள்தான் இப்போது மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, தீர்வுப் பொதிக்கு ஐ.தே.கட்சி தடையாக உள்ளது என்ற பல்லவியை பாடத் தொடங்கியுள்ளனர்.

கூட்டணி புளொட், இ.தொ.க., முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து ஐ.தே.கட்சிக்கு எதிராக விடுத்த அறிக்கையும் ஆட்சியாளரின் நலன் சார்ந்த ஒன்றாகவே அமைந்திருந்தது.

**ஆளும் கட்சியோ அல்லது எதிர்க்கட்சியோ தமது நலன்களுக்கு தோதாகவே தமிழ்க் கட்சிகளை பயன்படுத்த முற்பட்டுள்ளன. தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைளுக்காக தமது நலன்கள் எதனையும் பொதுஜன முன்னணியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ இதுவரை விட்டுக்கொடுத்ததாக ஒரு உதாரணம்கூட எவராலும் காண்பிக்க இயலாது.**

பொதுஜன முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இன்றுள்ள பிரச்சனை அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவது யார் என்பதே தவிர, அரசியல் தீர்வொன்றை எவ்வாறு காண்பது என்பதல்ல.

அதனால் தமக்கிடையே உள்ள போட்டியில் தமது தரப்பை நியாயமானதாகக் காட்டுவதற்காகவும், மறுதரப்பை பலவீனப்படுத்தவும் தமிழ்க் கட்சிகளையும் பயன்படுத்துவதே தென்னிலங்கையின் இரு பிரதான சிங்களக் கட்சிகளதும் உத்தியாக இருந்துவருகிறது.

கடந்த காலங்களில் சில சந்தர்ப்பங்களில் ஆட்சியமைக்க ஆசனங்கள் பற்றாக்குறையாக இருந்தபோது தமிழ்க் கட்சிகளின் உதவியை பெறுவதற்காக வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

ஆட்சியில் பங்கு கிடைத்து விட்டது, அமைச்சர் பதவியும் கிடைத்திருக்கிறது என்று புளகாங்கிதம் அடைந்த தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி போன்றவை இறுதியில் பலத்த ஏமாற்றத்தையே அறுவடை செய்ய முடிந்திருந்தது.

**அதேபோல இன்று பொதுஜன முன்னணியும் தமிழ்க் கட்சிகளின் ஆதரவை தனது நலன்களுக்கு ஏற்ப .பயன்படுத்திக் கொள்கிறதே தவிர, தமிழ் பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைளில் மட்டுமன்றி, அன்றாடப் பிரச்சனைகள் விடயத்தில்கூட இக் கட்சிகளின் கருத்துக்களை கேட்கவோ, விட்டுக்கொடுக்கவோ முன்வந்ததில்லை.**

இந்திய-இலங்கை ஒப்பந்தக் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் அமிர்தலிங்கம், அன்றைய எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஒப்பந்தத்தை குழப்பக் கூடாது என்றும், ஒத்துழைக்குமாறும் உபதேசித்தார். அதனை சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் காதில் வாங்கவில்லை.

'வடக்கு-கிழக்கு இணைப்பை எப்பாடுபட்டாவது எதிர்த்தே தீருவோம்' என்று சிறிமாவோ அம்மையாரின் சூளுரைதான் பதிலாக கிடைத்திருந்தது.

இன்று ஐ.தே.கட்சியினரைப் பார்த்து கூட்டணி உட்பட சில தமிழ்க் கட்சிகள் தீர்வுக்கு ஒத்துழைக்குமாறு உபதேசிக்கின்றன.

யார் பதவியில் இருந்தாலும் அவர்கள் சார்பாக எதிர்க்கட்சிக்கு உபதேசிக்கும் உரிமை மட்டும் தமிழ்க் கட்சிகளுக்குள்ள நிரந்தரமான உரிமையாக வாய்க்கப்பெற்றுள்ளது.

கடந்தகால அரசாங்கங்களில் இருந்து மாறுபட்ட, நம்பகமான அணுகுமுறை எதனையும் பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் இன்றுவரை காண்பிக்கவில்லை.

வாய் கொள்ளாமல் அரசியல் தீர்வு பற்றி இனிக்க இனிக்க பேசுவதுதவிர வேறெந்த முன்னேற்றத்தையும் ஆட்சியாளர்கள் நடைமுறையில் காண்பிக்கவில்லை.

பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் தீர்வுப்பொதியை முன்வைத்தபோது, கடந்த காலத்தில் எந்தவொரு அரசாங்கமும் செய்யாத சாதனையை அம்மையார் சாதித்துவிட்டார் என்று பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

**தீர்வுப் பொதியை முன்வைத்தமை அரசியல் துணிச்சல் என்றும் போற்றப்பட்டது. அத்தனை பாராட்டுக்களையும் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.**

சாதனை படைக்க யாருக்குத்தான் ஆசை இருக்காது. ஐ.தே.கட்சி ஆட்சியினரும் தம்மால் முடிந்திருந்தால் சாதனை படைக்க தயங்கியிருக்க மாட்டார்கள். சாதனை படைக்க இயலாதவர்களாக ஐ.தே.கட்சி ஆட்சியினர் இருந்தமையால்தான், பொதுஜன முன்னணியினர் சாதனை படைக்க முன்வந்ததை அனைவரும் பாராட்டினர்.

"வீணே பாராட்டாதீர்கள். இது நம்மால் மட்டும் செய்யக்கூடிய காரியமல்ல. எதிர்க்கட்சி ஒத்துழைத்தால் மட்டுமே சாதனை படைக்கலாம். எனவே காரியம் முடிந்த பின்னர் இரு தரப்பையும் பாராட்டுங்கள்." என்று சந்திரிக்கா அம்மையார் கூறவும் இல்லை.

உலக அரங்கிலும், தெற்கில் உள்ளூராட்சித் தேர்தலின் போதும் கூட தமது ஆட்சியின் தீர்வுப் பொதி என்றும், சாதனை என்றும்தான் பிரசாரம் செய்தனர்.

**தீர்வுப் பொதியின் கனம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கையில், தீர்வுப் பொதியை முன்வைத்ததைச் சாதனையாகக் கூறிக்கூறியே தமது மதிப்பின் கனத்தை உலக அரங்கில் அதிகரித்துக் கொண்டனர்.**

தீர்வுப்பொதியைச் சொல்லி பெயரெடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் எல்லாம், அதனை தமது சொந்தப் பொதி என்று உரிமை கொண்டாடுவதும், பொதியை ஏன் வழங்கவில்லை? என்ற கேள்வி எழும்போது மட்டும் எதிர்க்கட்சிமீது பழிபோடுவதுமே பொதுஜன முன்னணி ஆட்சியாளரின் தந்திரம் என்பது வெளிப்படையாகியுள்ளது.

இத் தந்திரத்தை புரிந்துகொள்ளாமல் சிலரும், புரிந்துகொண்டும் தமது சொந்த நலன்களுக்காக ஆட்சியாளரை சார்ந்து நிற்கும் தமிழ்க் கட்சிகளும் ஐ.தே.கட்சியை சாடிவருகின்றன.

**இன்றைய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை, தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தின் குரல்வளையை இராணுவத் தீர்வு மூலம் நசுக்க நினைக்கும் ஆட்சியாளருக்கு எதிராகப் பயன்படுத்துவதே விவேகமாகும்.**

பிரதான பேரினவாத கட்சிகள் இரண்டும் ஒன்று சேர்வது மூலம் ஆகப்போவது ஒன்றுமில்லை என்பது தெளிவாகியிருக்கிறது.

ஏனெனில், அரசின் கையில் உள்ளதோ கனம் குறைந்த அரைகுறைத் தீர்வாகும். தமிழ் பேசும் மக்களின் தாயகபூமியை கூறுபோட்டு, தமிழ் பேசும் மக்களின் அரசியல், பொருளாதார ஆத்மாவையே வேரறுக்கக்கூடிய தீர்வாகும்.

வடக்கு-கிழக்கை கூறுபோடுவதற்கான கருத்துக் கணிப்பு நிச்சயம் என்றும், தமிழ்க் கட்சிகள் கூறுவதை ஏற்க முடியாது எனவும் சிங்கள மக்களுக்கு பகிரங்கமாக உத்தரவாதம் வழங்கியுள்ளார் நீதியமைச்சர் பீரிஸ்.

**ஆயினும், தமிழ் பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கும், அபிலாசைகளுக்கும் வீசப்படும் சுருக்குக் கயிற்றை, தங்கச் சங்கிலி என்று கூறிக்கொண்டுதான் ஆட்சியாளர்கள் வீசவேண்டியுள்ளது. உண்மையை உலகம் அறிந்தால் தங்களுக்கு பாதகமாக முடிந்துவிடும் என்ற காரணத்தாலேயே அவ்வாறு கூறவேண்டியிருக்கிறது.**

அதனைப் புரிந்துகொள்ளாமல் பேரினவாதிகள் கூக்குரலிடுகின்றனர். ஐ.தே.கட்சியும் தூண்டிவிடுகிறது. சுருக்குக் கயிறை தங்கச் சங்கிலி வழங்கியதாக நினைத்துக் கொண்டு அடுத்த தேர்தலில் சிங்கள மக்கள் தமக்கு வாக்களிக்காமல் விட்டுவிடுவார்களோ என்று ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர்.

**அதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை நாடி நிற்கிறார்கள். எனவே, ஐக்கிய தேசியக்கட்சி ஆளும் கட்சியுடன் ஒத்துழைக்குமானால் உலகின் கண்களுக்கு மண்ணைத்தூவிவிட்டு சுருக்குக் கயிற்றை சுலபமாக வீசிவிடுவர்.**

எதிர்க் கட்சி ஒத்துழைக்க முன்வந்ததே பெரிய காரியமல்லவா, அதனால் தருவதை தற்போதைக்கு வாங்கிக் கொள்ளுங்கள் என்று தந்திரமறியாத வெளியுலகமும் தமிழ் பேசும் தரப்புக்கு உபதேசிக்க முன்வரக்கூடும்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் அரை குறைத்தீர்வை எதிர்த்து நிற்கும் தமிழ் பேசும் தரப்பின் நியாயம் எடுபடாமல் போகக்கூடும். பேரினவாதத்தின் தந்திரத்தால் தமிழ் பேசும் தரப்பு தனிமைப்பட்டு நிற்கவேண்டி நேரலாம்.

**தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளான பிரிப்பில்லாத வடக்கு-கிழக்கில் நிலப்பாதுகாப்பு, உயிர்ப் பாதுகாப்புடன் கூடிய நியாயமான அதிகாரப் பகிர்வுக்கு ஆட்சியாளர்கள் முன்வருவார்களேயானால், அதன் பின்னர் எதிர்க்கட்சியை மட்டுமல்ல, உலக சமூகத்தையும் அத் தீர்வுக்கு ஒத்துழைக்குமாறு தமிழ் பேசும் தரப்பு கோரலாம்.**

அதற்கு மாறாக, வடக்கு-கிழக்கை பிரிப்பதா இல்லையா என்பதில்கூட தமிழ்க் கட்சிகளின் கருத்தை நெத்தியடியாக நிராகரித்துள்ள அரசாங்கத்தின் பக்கம் நின்றுகொண்டு, அரைகுறைத் தீர்வை தமிழ் பேசும் மக்களின் தலையில் திணிக்கும் முயற்சிக்கு எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொடுப்பது பேரினவாதத்தின் கைகளில் துவக்கை கொடுத்து சூடு வாங்குவதற்கு ஒப்பானதாகும்.

இன்று தமிழ்க் கட்சிகளின் கடமை, ஆளும் தரப்பையும், எதிரணியையும் கூடிக்குலாவிட செய்வதல்ல. இரு தரப்பின் இழுபறியையும் வெளியுலகின் முன்பாக சுட்டிக்காட்டுவதும், இவ்வாறான நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றின் தேவையை வலியுறுத்துவதுமேயாகும்.

எதிரணி ஒத்துழைக்காவிட்டால் அரசியல் தீர்வு காணமுடியாது என்பது உண்மையானால், சகல தரப்பும் ஏற்கக்கூடிய மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றை அமைப்பதற்கு ஆட்சியாளர்கள் தயங்கவேண்டியதில்லை.

எதிர்க்கட்சிக்கு எதிராக தமிழ்க் கட்சிகளை



தூண்டிவிடுவதைவிட, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மூலம் எதிர்க்கட்சியையும் வழிக்கு கொண்டுவர ஆட்சியாளர்கள் ஏன் முயற்சிக்கவில்லை என்பதும் கேள்விக்குரியதே.

எனவே உண்மையான தடை ஐ.தே. கட்சியல்ல என்பது தெளிவு.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுரத்த ரத்வத்தையை ராஜினாமா செய்யுமாறு எதிர்க் கட்சியினர் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். பௌத்த மதகுருமாரும் கலந்துகொண்டனர்.

அவ்வாறு இருந்தும் கூட அந்த ஆர்ப்பாட்டங்களுக்கு பதிலாக தங்கள் ஆதரவாளர்களையும், பௌத்த மதகுருமார்களையும் வீதியில் இறக்கியும், தீக்குளிப்பு மிரட்டல் விடுத்தும் அரசியல் நாடகம் ஒன்றை பொ.ஜ முன்னணியினர் கச்சிதமாக அரங்கேற்றியிருந்தனர். அதன் பின்னர் அநுரத்த ரத்வத்தையின் ராஜினாமா வாபஸ் பெறப்பட்டது.

**அமைச்சர் அநுருத்த ரத்வத்தை விடயத்தில் எதிர்க்கட்சியின் எதிர்ப்பை முறியடிப்பதாக கையாண்ட சாமர்த்தியமான, துணிச்சலான அணுகுமுறையை, அரசியல் தீர்வு விடயத்தில் காண்பிக்க ஆட்சியாளர்கள் முன்வந்திருந்தால் எப்போதோ தீர்வை எட்டியிருக்க முடியும்.**

எனவே, எதிர்க்கட்சியின் எதிர்ப்பை நினைத்து ஆட்சியாளர்கள் தயங்குகின்றனர் என்ற வாதம் ஏற்புடையதாக இருக்கப்போவதில்லை.

தமிழ் பேசும் மக்களுக்கு அதிகமாக கொடுக்கப்பட்டுவிட்டது என்று தென்னிலங்கை வாக்காளர்கள் நினைக்கக்கூடாது. புலிகளையும் வெற்றிகொண்டு, குறைந்த ஒரு தீர்வையும் கொடுத்து அம்மையார் சமாளித்துவிட்டார் என்ற அபிப்பிராயம் தென்னிலங்கையில் தோன்றக்கூடிய சூழலையே பொதுஜன முன்னணி நாடி நிற்கிறது.

ஆனால், எதிர்க்கட்சி அதற்கு இணங்காது. நாளை தாம் ஆட்சிக்கு வந்த பின்னர் அப்படியொரு பெயர் தமக்கு கிடைக்கட்டும் என்றுதான் நினைக்கும்.

இந்நிலையில் இரு கட்சிகளுமே தாமாக முன்வந்து உரிமைகளை வழங்கும் என்றும், ஒத்துழைத்து நல்லதொரு தீர்வை ஏற்படுத்தும் என்றும் நினைப்பது ஏப்ரல் 1ம் திகதிக்குரிய கருதுகோள் மட்டுமேயாகும்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

### நக்கீரன்

# நடுவீதியில் நீதி

கொழும்பில் தங்கு விடுதிகள் மூன்றில் இருந்து, தலைநகரின் தகிக்கும் வெயில் பொழுதில் தமிழர்கள் விரட்டப்பட்டனர்.

இதனைச் செய்தது இனவாதிகளல்ல. காடையர்களுமல்ல. காக்கி உடையில் சென்ற பொலிசார்.

குறிப்பிட்ட மூன்று விடுதிகளில் ஒன்றில் தான் கரும்புலிப் பெண் தங்கியிருந்தார். அதுதான் அங்கிருந்த அனைவருக்கும் அப்படியொரு மறைமுகமான தண்டனை.

கரும்புலி இருந்த விடுதியை நடத்தியவருக்கு ஏதோ ஒருவகையில் சம்பந்தம் இருந்த ஏனைய இரண்டு விடுதிகளும் இழுத்து மூடப்பட்டு, அங்கிருந்தவர்களும் விரட்டப்பட்டனர்.

மூன்று விடுதிகளிலும் மொத்தம் 150 பேர்வரை இருந்தனர். அறுநூறு என்று வந்த செய்திகள் சரியல்ல. மூன்று விடுதிகளில் அறுநூறு பேர் இருப்பதும் சாத்தியமல்ல.

கரும்புலி இருந்த விடுதி உரிமையாளருக்கோ அந்த விடுதியில் இருந்த எவருக்குமோ கரும்புலி அங்கே தங்கியிருப்பது தெரியவே தெரியாது. தெரிந்தால் காலி பண்ணி விட்டு வேறு விடுதிக்கு ஓடியிருப்பர். விடுதி உரிமையாளருக்கு தெரிந்திருந்தால் கரும்புலியின் காலில் விழுந்தாவது வேறு இடத்திற்கு செல்லுமாறு வேண்டுகோள் விடுத்திருப்பார்.

ஆனால், பொலிசாரைப் பொறுத்த வரை தமிழர்களே புலிகள், புலிகளே தமிழர்கள் என்ற எண்ணம் உள்ளூரப் பதிந்துவிட்டது.

புலிகள் தமிழர்களுக்காகப் போராடுகிறார்கள் என்று பொலிசாரும், படையினரும் உறுதியாக நம்புவதாலும் அந்த எண்ணம் வலுப்பட்டுவருகிறது போலும்.

அதனால்தான் விடுதியில் இருந்தவர்கள் தமக்குள் ஒரு கரும்புலி இருப்பது தெரிந்தும் தகவல் தரவில்லை என்று கோபம் ஏற்பட்டுள்ளது.

இத்தனைக்கும் குறிப்பிட்ட கரும்புலிக்கு பொலிஸ் பதிவு தரப்பட்டுள்ளது. அவரைக் கைதுசெய்தும் உள்ளனர். தேசிய புலனாய்வுப் பிரிவு கொடுத்த அறிக்கையின் பிரகாரம் குற்றமற்றவர் என்று கருதி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அதற்காக, குறிப்பிட்ட கரும்புலியை பதிவு செய்த பொலிஸ் நிலையத்தையும், அறிக்கை கொடுத்து விடுதலை செய்த தேசியப் புலனாய்வுப் பிரிவையும் மூடவா முடியும்? சந்தேகிக்கவா இயலும்? குறிப்பிட்ட விடயங்களில் தமிழ் அதிகாரிகள் யாராவது சம்பந்தப்பட்டிருந்தால் ஒருவேளை சந்தேகம் வந்து தொலைத்திருக்கலாம்.

தேசிய புலனாய்வுப் பிரிவாலேயே கண்டுபிடிக்க முடியாத ஒரு விடயத்தை,



சாதாரண மக்கள் எப்படிக் கண்டு பிடிப்பது? அதுதவிர, புலிகள் இயக்க உறுப்பினர்கள் அனைவரும் எல்லோருக்கும் அறியப்பட்டவர்களுமல்ல. அதுவும் தலைநகருக்கு அனுப்பப்படும் புலிகள் பலரால் அறியப்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள்.

மேற்கண்ட உண்மையைக்கூட உணர முடியாத பாதுகாப்புத் தரப்பு புலிகளை எப்படி கண்டுபிடிக்கப்போகிறது?

விடுதிகளை மூடி மக்களை விரட்டியது குறிப்பிட்ட சில பொலிசாரின் ஆத்திரத்தின் வெளிப்பாடு அல்லது தன்னிச்சையான செயற்பாடு என்றும் கருத இடமில்லை.

பாதுகாப்பு மேலிடம்வரை இந்த அவலம் உடனடியாக தெரிவிக்கப்பட்டும்கூட 'வேறு விடுதிகளில் தங்கவைக்கலாம்' என்று கூறப்பட்டதே தவிர, நடந்தது அநியாயம் என்பது ஏற்கப்படவில்லை.

ஈ.பி.டி.பி. தலையிட்டு விடுதியில் இருந்து விரட்டப்பட்டோரை அன்றிரவு தங்க ஏற்பாடு செய்தது. உணவு கொடுத்தது. மனிதாபிமான நடவடிக்கை என்ற வகையிலும், ஏனைய கட்சிகள் இதனைக்கூட செய்யவில்லையே என்றளவிலும் ஈ.பி.டி.பி.யின் நடவடிக்கையைப் பாராட்டலாம்.

ஆனால், அரசியல் கட்சி என்ற வகையில் ஈ.பி.டி.பிக்கு ஒரு கடமை இருக்கிறது. நடந்தது அநியாயம் என்பதை வெளிப்படுத்துவதோடு, மேற்கொண்டு இனிமேல் இவ்வாறான அவலம் தொடராது என்ற உத்தரவாதத்தை அரச தரப்பிடம் இருந்து பெற்றுத் தந்திருக்க வேண்டும்.

ஈ.பி.டி.பி.யால் மட்டுமல்ல, வழக்கம் போல கண்டன அறிக்கைவிட்டு திருப்தியடைந்த கூட்டணியினராலும் சரி, ஏனைய தமிழ்க் கட்சிகளாலும் சரி அந்த உத்தரவாதத்தைப் பெறுவதற்கு முடியவில்லை. முடியாது.

"கடந்தகால ஆட்சியிலும் கைதுகள் நடந்தன தானே" என்று முன்னர் ஒரு தடவை கூட்டணித் தலைவர் சிவா கூறியிருந்தார். ஆனால், ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசா கொல்லப்பட்டபோதுகூட விடுதிகளில் இருந்த தமிழர்கள் அன்று விரட்டப்படவில்லை என்பதும் நினைவுகூரத்தக்கது.

இன்னொரு விடயம், சாதாரண மக்களை இலக்காகக் கொள்ளும் தாக்குதல்களை புலிகள் தவிர்த்து வருகின்றனர். கொம்பனித்தெரு தாக்குதல்கூட படையினர் மீது நடத்தப்பட்டதே தவிர, இனரீதியாக நடந்த தாக்குதல் அல்ல. தவிர, அதில் பலியான பொதுமக்களும் தமிழர்கள்தான்.

அவ்வாறு இருந்தும்கூட அவலை நினைத்து உரலை இடிக்கும் நடவடிக்கைகள் தமிழர்களை மட்டுமல்ல, நீதியையும் நடுவீதிக்கு விரட்டிவருகின்றன.

# கொள்ளை ராணி பூலான்தேவி

## 83

தருவது ரசிகன்

பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்துவிட்டு வந்தபின்னர் புத்துணர்ச்சியுடன் இருந்தார் ராஜேந்திர சதுர்வேதி.

சதுர்வேதிக்கு கிடைத்த பிரபலம் உத்தரப் பிரதேச பொலிஸ் அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை. 'மத்திய பிரதேச பொலிசாரால் முடிந்த காரியத்தை உங்களால் ஏன் செய்ய முடியவில்லை?' என்று மேலிடத்தில் கேட்டுத் துளைத்தனர்.

மல்கான் சிங் போன்ற உத்தரப்பிரதேச கொள்ளைக்காரர்கள் மத்தியப் பிரதேச பொலிசாரில் நம்பிக்கை வைத்து, அங்கு சென்று சரணடைந்தமை உத்தரப் பிரதேச பொலிசாருக்கு அபகீர்த்தியானது.

அவர்கள் கோபம் முழுக்க சதுர்வேதி மீதுதான் பாய்ந்தது. பிரதமர் இந்திரா காந்தியே நேரில் அழைத்துப் பாராட்டி இருக்கிறார் என்று அறிந்ததும் கோபம் பலமடங்கானது.

சதுர்வேதியைப் பழிவாங்க சரியான தருணம் ஒன்றுக்காக உத்தரப் பிரதேச பொலிசார் எதிர்பார்த்திருந்தனர்.

சதுர்வேதிக்கு தன்னைச் சுற்றிப் பின்னப்படும் சதிவலை பற்றித் தெரியாது. அவர் தன்னிடம் பிரதமர் ஒப்படைத்த பணியைச் செய்து முடிப்பதில் கண்ணாயிருந்தார்.

பூலான் தேவியுடன் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய நம்பகமான ஆளைத் தேடினார் சதுர்வேதி.

விக்கிரம் மல்லா, பாபா ஆகியோரின் கூட்டாளியான கன்ஷியாம்தான் சரியான ஆசாமி என்று தோன்றியது.

மல்கான் சிங்கை சிறையில் சந்தித்து அவனிடம் கன்ஷியாம் பற்றிய விபரங்களைப் பெற்றார் சதுர்வேதி.

கன்ஷியாமை சதுர்வேதி தனியாகத்தான் சென்று சந்தித்தார். ஆயுதம் எதுவும் எடுத்துச் செல்லவில்லை. கன்ஷியாம் முதலில் தயங்கினான். சதுர்வேதியின் அணுகுமுறைகள் ஏற்படுத்திய நம்பிக்கையின் காரணமாக அவரை நம்பினான்.

"பூலானைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்து விபரம் கூறுகிறேன். எக்காரணம் கொண்டும் பொலிஸ் என்னைத் தொடரக் கூடாது. என்னை வைத்து பூலானைப் பிடிக்க முயலவும் கூடாது!"

சதுர்வேதி சிரித்து,: "கான்ஷியாம் என்னை நீ நூறுவீதம் நம்பலாம்!"

பூலான் தேவிக்கு கன்ஷியாமை நம்பலாமா கூடாதா என்று தெரியவில்லை. மான் சிங்தான் நம்பலாம் என்று உத்தரவாதப்படுத்தினான்.

கன்ஷியாம் பூலானின் மனதை மாற்றும் விதமாக பல காரணங்களை கூறினான்.

"இப்படியே இருந்துவிடுவதால் கடைசியில் என்னாகப் போகிறது? என்றோ ஒருநாள் சாவு நிச்சயம்!" என்றான்.

பூலான் அலட்சியமாக புன்னகைத்து, "அது எல்லோருக்கும் நிச்சயமானது தானே? எங்கிருந்தாலும் நிச்சயிக்கப்பட்ட நாளன்று சாவு வந்தேயாகும்!" என்று தத்துவம் பேசினாள்.

"எனக்குத் தெரியும்- நீங்கள் சாவுக்கு அஞ்சாத பெண். நான் சொல்வது என்னவென்றால், இப்படியே, இந்த வாழ்க்கையில் இருந்து சாவதைவிட சரணடைந்த பின்னர் கிடைக்கக்கூடிய மன்னிப்பைப் பெற்று நல்லபடியாக வாழலாம்."

"ஆசை காட்டுகிறாயா கன்ஷியாம்?"

"நான் வற்புறுத்தவில்லை. நன்றாக யோசித்துப் பாருங்கள். மான் சிங் நீயும் தான்! பழிவாங்க வேண்டியவர்கள் யாராவது பாக்கியிருந்தால் அதனை முடித்துவிட்டுக்கூட சரணடையலாம். ஒன்றும் அவசரமில்லை. யோசியுங்கள். நாளை மறுநாள் மறுபடி வருகிறேன்!"

கன்ஷியாம் நீண்டநேரம் சுற்றிச் சுற்றிப் பேசியது பூலான் மனதில் ஊசலாட்டத்தை ஏற்படுத்தியது.

தங்கள் கூட்டத்தினர் பலர் பிரிந்து போய்விட்டதால் ஏற்பட்ட ஆட்பற்றாக் குறையும் பூலானை கவலைக்கு உள்ளாக்கியிருந்தது.

இந்நிலையில் கன்ஷியாம் கூறிய நியாயங்கள் பூலானை அசைக்கத் தொடங்கி இருந்தன.

அன்றிரவு மான் சிங்குடன் ஆலோசித்தாள். நீண்ட மௌனத்தின் பின்னர்: "உயிருக்கு உத்தரவாதமும், தண்டனைக் குறைப்பும் இருந்தால் யோசிக்கலாம்!" என்றான்.

பூலானுக்கு அவன் சொல்வது சரியென்றுதான் தோன்றியது. இரவு யோசனையின் மத்தியிலேயே கண்ணயர்ந்தாள்.

உறக்கத்தில் கண்ட கனவு பூலானை தூக்கிவாரிப்போட்டது.

இரத்தம் தோய்ந்த உடைகள் பூலானின் கனவில் தோன்றின. யாரோ ஓடுகிறார்கள். பின்னர் சூடுபட்டு விழுகிறார்கள். இரத்தம் எங்கும் இரத்தம்...! பூலான் எழுந்து மான் சிங்கை உலுப்பினாள்.

மான் சிங் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்து, "என்ன?" என்றான். "கனவு" என்றாள். கண்ட காட்சியைச் சொன்னாள்.

"வீண் பிரமை" என்றான். முதுகை தடவிவிட்டான். அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"நான் திருந்தி வாழ இந்தச் சமூகம் அனுமதிக்குமா?" என்று கேட்டாள். குரலில் கலவரம் இருந்தது. நம்பிக்கையீனம் கண்களில் தெரிந்தது.

அவள் கண்களில் மான் சிங் முத்தமிட்டான். அவன் முத்தம் மூடியிருந்த இமைகளையும் தாண்டிக் குளிர்ந்தது.

வெளியே குளிர்க்காற்று வீசிக்கொண்டிருந்தது. மான் சிங்கின் தேகம் சூடாயிருந்தது. குளிருக்கு கணகணப்பாக இருந்தது.

மான் சிங் அவளின் கழுத்து நரம்புகளை உதடுகளால் வருடினான். அப்படியே மெல்ல மெல்ல மலையுச்சியில் இருந்து இறங்கும் பயணிபோல, அவன் உதடுகள் கீழே நழுவிக்கொண்டிருந்தன.

குறிப்பிட்ட தினத்தன்று கன்ஷியாம் மறுபடி வந்திருந்தான்.

"என்னை சரணடைய வைத்தால் உனக்கு சதுர்வேதி எவ்வளவு கொடுப்பார்? சதுர்வேதிக்கு கவர்மெண்ட் எவ்வளவு பணம் தரும்?" என்று கேட்டாள் பூலான்.

கன்ஷியாம் அக்கேள்வியால் அரண்டு போனான். "நல்லது, இனி நான் விலகிக் கொள்கிறேன். பணத்துக்காக ஆசைப்படுவதாக இருந்தால், உங்களைக் காட்டிக்கொடுத்தால் மேலும் அதிக பணம் கிடைக்கும் என்பதைக்கூட மறந்து போனீர்களே!" என்றான்.



பூலான்

மான் சிங் அவனை சமாதானப்படுத்தினான். பூலான் வருத்தம் தெரிவித்தாள். "முதலில் சதுர்வேதியை தனியாகச் சந்திக்கலாம். பின்னர் சரணடைவதா இல்லையா? என்று முடிவு செய்யலாம்!" என்றாள் பூலான்.

கன்ஷியாம் அதனை சதுர்வேதியிடம் கூறியபோது, அவர் சந்தோஷ மிகுதியால் அவன் தோளில் பலமாகவே அறைந்துவிட்டார்.

எங்கு சந்திப்பது என்பது முடிவானது. பூலானுக்குத் தகவல் அனுப்பப்பட்டது.

அதேநேரம் உத்தரப்பிரதேச பொலிசாருக்கும் அந்தத் தகவல் போய்ச்சேர்ந்தது. கன்ஷியாமின் நண்பனாக நடித்துக்கொண்டிருந்த பொலிஸ் உளவாளி ஒருவன் மூலமே தகவல் பறந்துபோனது.

பூலான் தேவி எங்கே வைத்து சதுர்வேதியைச் சந்திக்கப்போகிறாள் என்ற விபரமும் பொலிசாருக்கு துல்லியமாகக் கிடைத்தது.



"பூலான் தேவி பல பொலிசாரைக் கொலை செய்தவள். காக்கி உடைகளை இரத்தத்தில் நனைத்தவள். அவளை ஒழித்துக்கட்டவேண்டும். சரணடைய சந்தர்ப்பமே இருக்கக்கூடாது. சதுர்வேதியை சந்திக்க வரும் பூலான் தேவியை, உங்கள் துப்பாக்கிகள் சந்திக்கவேண்டும்!" என்றார் அந்த உயரதிகாரி.

தனக்கு நம்பகமான பொலிசாரையே சதித்திட்டத்திற்கு பயன்படுத்தினார். அந்த உயரதிகாரிக்கு சதுர்வேதிமீதுதான் பொறாமை. அதனை நேரடியாகச் சொல்லாமல், பொலிஸ் உணர்ச்சியை தூண்டும் விதமாகப் பேசினார்.

பூலான் தேவியையும், மான் சிங்கையும் மட்டும் அழைத்துவரும்படி கன்ஷியாம் தன் ஆட்களான மன்ஷராமையும், ராம்பிரகாஷையும் அனுப்பினான்.

எட்டாவா மாநிலத்தில் உள்ள கறான்சன் என்ற கிராமத்தை சூழ இருந்த காடுகளில் தான் பூலான் குழுவினர் மறைந்து இருந்தனர்.

**கடந்த வாரம்**

**மல்கான் சிங் போன்றோரை சரணடையவைத்த மத்திய பிரதேச பொலிஸ் அதிகாரி ராஜேந்திர சதுர்வேதி பூலானையும் சரணடைய வைப்பதாக இந்திரா காந்தியிடம் கூறுகிறார். முயற்சியில் இறங்குகிறார். இனி...**

ஏனையோரை முகாமில் இருக்குமாறு கூறிவிட்டு பூலானும், மான் சிங்கும் கன்ஷியாமின் ஆட்களுடன் சென்றனர்.

கணவாய் ஒன்றில் வைத்து சதுர்வேதியைச் சந்திப்பதாகத்தான் கன்ஷியாம் ஏற்பாடு செய்திருந்தான்.

பூலான் காக்கி உடைக்கு மேலே சேலை அணிந்திருந்தாள். வெயில் கொளுத்தி எரிந்தது. பூலான் தொப்பலாக நனைந்து போனாள்.

முட் பற்றைகள் அடர்ந்த பாதை வழியாகவே அவர்கள் செல்லவேண்டி இருந்தது. அதனால் சேலையைக் கழற்றி சுற்றிவைத்துக் கொண்டாள்.

குறிப்பிட்ட கணவாய்ப் பகுதிக்கு அவர்கள் செல்ல முன்னரே இடைநடுவே சுட்டுக் கொல்வதுதான் உத்தரப்பிரதேசப் பொலிசாரின் திட்டம்.

இரகசியச் சதி என்பதால் ஐந்தே ஐந்து பொலிசார் மட்டும்தான் காரியத்தில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஒரு குன்றின் மறைவில் அவர்கள் காத்திருந்தனர். பூலான் குழுவினர் வருவதைக் கண்டதும் பொலிசாரின் இதயப் பிரதேசத்தில் வேகமான அதிர்வுகள் கேட்டன.

நான்குபேரில் யார் பூலான் தேவி என்பதை எட்டத்தில் வைத்து இனம் காண்பது கடினமாக இருந்தது.

அதனால் ஒரு பொலிஸ்காரன் அவசரத் தப்புச் செய்தான். தலையை சற்று உயர்த்தி எட்டிப் பார்த்தான்.

எந்த நேரமும் ஆபத்தை எதிர்பார்த்து வாழப்பழகிவிட்ட பூலானின் கண்கள் அவனைக் கண்டுவிட காக்கி உடை பொலிஸ் என்பதைச் சொல்லிவிட்டது.

"எல்லோரும் தரையோடு படுங்கள்!" என்று கட்டளையிட்டபடி புதர்களின் பக்கமாக தாவி நிலத்தில் உருண்டாள் பூலான்.

அதேநேரம் பொலிசாரின் துப்பாக்கிகள் சடசடக்கத் தொடங்கிவிட்டன.

பூலானின் உத்தரவு பிறந்த நொடியே நிலைமையை உணர்ந்து மான் சிங் துரிதமாகச் செயற்பட்டான். ஆனால் கன்ஷியாமின் ஆட்களுக்கு அனுபவம் போதாது.

தரையில் படுக்காமல் ஓடத் தொடங்கினர். பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுகள் அவர்கள் இருவரையும் ருசி பார்த்தன.

மான் சிங் புதர் ஒன்றின் மறைவில் இருந்து சுடத் தொடங்கினான். பூலானும் மான் சிங்குக்கு சற்றுத் தள்ளியிருந்த புதர் மறைவில் இருந்து சுட்டுக்கொண்டிருந்தாள்.

சதித்திட்டம் என்பதால் தங்களில் ஒருவர் மடிந்தாலோ, காயப்பட்டாலோ கையும், களவுமாக மாட்டிக்கொள்வதாகிவிடும் என்பதால் பொலிசார் சண்டையைத் தொடர விரும்பவில்லை.

எதிர்பாராத தருணத்தில் தாக்கி பூலானை தீர்த்துக்கட்டுவதுதான் அவர்களது திட்டம். திட்டம் பலிக்கவில்லை.

சுட்டபடியே பின்வாங்கிச் சென்றனர். பூலானும், மான் சிங்கும் வெளியே வந்தனர்.

"பொலிஸ் நாய்களை நம்பக்கூடாது என்று படித்துப் படித்து சொன்னேனே கேட்டாயா? பார் இரண்டுபேர் செத்துப் போனார்கள்."

மான் சிங் பேசவில்லை. 'இது சதுர்வேதியின் வேலையாக இருக்காது,' என்று அவனது உள்மனம் சொன்னது.

அதனைக் கூறினால் ஏற்கக் கூடிய மனநிலையில் அப்போது பூலான் இல்லை என்பதால், மௌனமாக இருந்தான்.

உடல்களை அப்படியே விட்டுவிட்டு இருவரும் வந்த வழியே தப்பிச் சென்றனர்.

பின்வாங்கிச் சென்ற பொலிசார், மேலதிக உதவி பெற்று திரும்பி வரமுன்பாக அந்தப் பகுதியைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்றுதான் உடல்களைவிட்டுப் போனார்கள்.

சதுர்வேதியும், கன்ஷியாமும் காத்திருந்து பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

இரண்டு நாட்களின் பின்னர்தான் உண்மை தெரியவந்தது. கன்ஷியாம் சதுர்வேதியை சந்தேகப்பட்டான்.

பூலான் தன்னையும் சந்தேகிக்கப் போகிறாளே என்று பயந்துபோனான். பூலானைச் சந்தித்து விளக்கம் அளிப்பதுதான் சரி என்று நினைத்தான்.

பூலான் குழுவினரை கன்ஷியாம் சந்திக்கச் சென்றபோது, எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது.

உத்தரப்பிரதேச பொலிசார் பூலான் குழுவினர் இருந்த பிரதேசத்தை ,சுற்றி வளைத்துக்கொண்டனர்.

"பூலான் தேவி! நீ எங்கிருந்தாலும் நீ தப்ப முடியாது! மரியாதையாக நீயாக வந்து சரணடைந்தால் உயிர்ப்பிச்சை அளிக்கப்படும். சண்டையிட நினைத்தால் தொலைத்துவிடுவோம். காடுகள் முழுக்க எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது. நீ தப்பவே முடியாது!" என்று ஒலிபெருக்கியில் அறிவித்தனர்.

பூலான் அதிரவில்லை. அஞ்சவில்லை. ஓங்கிச் சிரித்தாள். துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

(தொடர்ந்து வரும்)

## அர்ஜுனவின் மும்பாய் காதலி

கிரிக்கெட் வீரர்களுக்கும் நடிகைகளுக்கும் இடையே நட்புகள் மலர்வது ஆச்சரியமல்ல. சில நட்புகள் கல்யாணம்வரை செல்வதுமுண்டு. வேறு சில இடை நடுவே முறிந்ததும் உண்டு.

எனினும், இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் பற்றிய கிசுகிசுக்கள் வெளிவருவது குறைவு. அதுவும் நடிகைகளுடன் இணைத்துப் பேசப்படுவதும் அரிது.



ஆனால், சமீபத்தில் இந்தியாவில் மும்பாயில் இருந்து வெளியாகும் சஞ்சிகை ஒன்று இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் பற்றிய செய்தி ஒன்றைப் பிரசுரித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அர்ஜுன ரணதுங்கவுக்கும் மும்பாய் படவுலக நடிகை பூனத்துக்கும் இடையே நட்பு மலர்ந்துள்ளதாக அந்த சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

அத் தகவல் இதோ: இலங்கை கிரிக்கெட் அணிக் கப்டன் அர்ஜுன ரணதுங்க இந்தி நடிகை பூனம் என்பவருடன் கடந்த சில மாதங்களாக நெருக்கமாக உறவாடி வருகிறார். பல பொது நிகழ்ச்சிகளில் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வலம் வருவதும் சகஜமாகிவிட்டதனால், பூனம் தனது கணவரை விவாகரத்துச் செய்யப்போவதாக பல மாதங்களாக வதந்தி உலா வருகிறது. இதுபற்றி அவரிடம் கேட்டபோது, "எவர் எதைக் கூறினாலும் எனக்கு அக்கறையே இல்லை. இக் கூற்றை மறுக்கவோ வேறு கதைகளைக் கூறி மழுப்பவோ நான் விரும்பவில்லை," என்று கூறினார்.

உண்மையில் பூனத்துக்கு நம்பிக்கையான ஒரு துணை தேவைப்படுகிறது. இது அவருடைய தற்போதைய நிலையிலிருந்து உணரக் கூடியதாக இருக்கிறது.

அர்ஜுன ரணதுங்கவின் நட்புக் கிடைத்ததைத் தொடர்ந்து பூனத்தின் நடைமுறைகளில் மாற்றம் தென்படுகிறது. வங்காளத்தில் நடைபெற்ற ஒரு விருந்தின்போது பூனமுடன் ரணதுங்கவும் அவ்விருந்தில் கலந்து கொண்டார். இது தவிர வேறு பல வைபவங்களிலும் இருவரும் மிக நெருக்கமாக தென்பட்டதாக கதைகள் பரவுகின்றன.


அண்மையில் இடம்பெற்ற இலங்கை அணி பங்குபற்றிய கிரிக்கெட் ஆட்டத்தின் போது, பூனம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பூனம் அசோக்கிடமிருந்து பிரிவதற்கு தடை எதுவும் இருக்காது என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பூனம் அர்ஜுன ரணதுங்கவுடன் காணப்படும்போது மிக மகிழ்ச்சியாகவே காணப்படுகிறார். ஆனால் அர்ஜுன திருமணமாகி இரு குழந்தைகளுக்குத் தந்தையாக இருக்கிறார், என்று அந்த சஞ்சிகை தெரிவித்திருக்கிறது.

அர்ஜுன ரணதுங்க இன்னமும் அந்தச் சஞ்சிகைக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றே தெரிகிறது.

## இம்ரானின் இரகசிய சமரசம்

காதும் காதும் வைத்த மாதிரி காரியத்தை முடித்துவிட்டார் பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் கப்டன் இம்ரான்கான். அவரது ஸ்டைலே அதுதானே!



அழகி ஷீத்தா வைற்றுக்கு பிறந்த குழந்தைக்கு இம்ரான் கான்தான் தந்தை என்று நிரூபிக்கப்பட்டுவிட்டதல்லவா?

அதனை அடுத்து தன்னையும், தனது குழந்தையையும் இம்ரான்கான்தான் பராமரிக்க வேண்டும் என்று வழக்குத் தொடுத்தார் ஷீத்தா வைற்.

பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட அந்த வழக்கை பாதியிலேயே வாபஸ் வாங்கிவிட்டார் ஷீத்தா.

ஷீத்தா வைற்றின் பிள்ளைக்கு இம்ரான்கான்தான் தந்தை என்று தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னரும், அதனை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளாமல் இருந்தார் இம்ரான்கான்.

ஆனால், ஷீத்தா வைற் பராமரிப்பு வழக்குத் தொடுத்தவுடன் பணிந்துவிட்டார் இம்ரான். நீதிமன்றத்தின் வெளியே வைத்தே பிரச்சனையை இரகசியமாகத் தீர்த்தும் விட்டார்.

"நான்தான் தந்தை என்று ஒப்புக்கொள்ளுகிறேன். பராமரிப்பும் செய்கிறேன்" என்று முதற் கட்டமாக பெருந்தொகைப் பணம் கொடுத்து சமரசம் செய்து கொண்டாராம் இம்ரான். அதுதான் ஷீத்தா வைற் வழக்கை வாபஸ் பெற்றாராம்.

தனது மகளின் வருங்கால வாழ்வில் கூடுதலான அக்கறை செலுத்தவும் இம்ரான் ஒப்புக்கொண்டதால்தான் ஷீத்தா விட்டுக் கொடுத்தாராம். அதனை அவரே கூறியும் இருக்கிறார்.

பிரிட்டனிலுள்ள இம்ரான்கானின் சட்ட ஆலோசகர்கள் இத்தகவலை ஊர்ஜிதம் செய்ய மறுத்துவிட்டனர்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரீபின் நெருக்கமான சிலர் தூண்டியமையினாலேயேதான் இம்ரான்மீது வழக்கினைத் தொடர்ந்ததாகவும் ஷீத்தா வைற் தெரிவித்துள்ளார்.

## தாவும் காதலன்

டயானாவின் சகோதரர் சாள்ஸ் ஸ்பென்சரை விவாகரத்துச் செய்ய மனைவி வழக்குத் தொடுத்திருந்தார்.



கொலோப்பி என்ற பெண்ணுடன் தன் கணவருக்கு தொடர்பு இருப்பதாக புகார் கூறியே மனைவி விவாகரத்து கோரினார்.

ஆனால், சாள்ஸ் ஸ்பென்சரின் காதலியான கொலோப்பியும் வழக்குத் தாக்கல் செய்து சாள்ஸ் ஸ்பென்சரை நீதிமன்றத்துக்கு இழுத்துவிட்டார்.

தன்னை கர்ப்பமாக்கிவிட்டு ஏமாற்றிவிட்டார் என்பதே கொலோப்பி கூறிய குற்றச்சாட்டு. அது மட்டு மல்ல, கோசி பொரைன் என்ற பெண்ணுடனும் சாள்ஸ் ஸ்பென்சர் கூடிக் குலாவுகிறார் என்றும் கொலோப்பி குற்றம் சாட்டினார்.

இரண்டு வழக்குகளும் ஒரே நாளில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. மனைவியும், காதலியும் ஒன்றாகவே நீதிமன்றத்துக்கும் சென்றனர்.

இதற்கிடையே வெளியாகியுள்ள இன்னொரு செய்தி, தனது மூன்றாவது காதலியான கோசி பொரைனையும் சாள்ஸ் ஸ்பென்சர் ஏமாற்றி விட்டதாகத் தெரிவிக்கின்றனர்.

## வாய்ப்புக் கிடைத்தபோது....

பிலிப்பைன்ஸ் நாட்டில் மணிலாவில் ஒரு பணக்காரத் தம்பதி தங்கள் வீட்டின் அருகே உடற்பயிற்சிக்காக ஓடிக்கொண்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கவனித்த ஆறுபேர் திடீரென்று துப்பாக்கியுடன் தோன்றி கார் ஒன்றில் அவர்களைக் கடத்திக்கொண்டு போய்விட்டனர்.

இருவரையும் மலை உச்சியில் உள்ள பங்களா ஒன்றில் அடைத்துவைத்துவிட்டு பெரிய தொகை கேட்டு மிரட்டினார்கள். ஆறு நாட்கள் ஆகிவிட்டன.

ஆறாவது நாள் நள்ளிரவில் எல்லோரும் தூங்கியிருந்த நேரமாகப் பார்த்து மெதுவாக எழுந்து தப்பித்துவிட்டார் மனைவி.

அத்தனை பெரிய மலை உச்சி பங்களாவில் இருந்து, இரவு நேரத்தில் தனியாகத் தப்பி வந்ததை பாராட்டுகிறவர்கள், கணவரையும் தட்டி எழுப்பிக் கூட்டி வந்திருக்கலாமே என்றும் கேட்காமலில்லை.

"எனக்கு மட்டும்தான் வாய்ப்புக் கிடைத்தது. தப்பிவந்துவிட்டேன்!" என்கிறார்.

## விமானியுடன்சீண்டல்

அமெரிக்காவின் பொல்லாத போர் விமானங்களில் ஒன்று பி-52. இதனை ஓட்டிச் செல்வதற்கு பயங்கரமான திறமை தேவைப்படும்



இந்தப் போர் விமானத்தை ஆண்கள்தான் ஓட்டுவது வழக்கம். முதன் முதலாக ஒரு பெண்மணி இந்த விமானத்தைச் செலுத்துகிறார். அவரது பெயர் ஹெல்லி. இளமை கொஞ்சும் 27 வயது. 1995ல் விமானப் படையில் சேர்ந்து கடும் பயிற்சியின் பின்னர் போர் விமானியாகிவிட்டார்.

குண்டு வீச்சு விமானத்தின் முதல் அமெரிக்க விமானி என்ற பெருமை கிடைத்தாலும், மறு பக்கம் இந்த விமானிக்கு கொடுமையும் இழைக்கப்படுகிறது.

விமானப்படையின் சக ஊழியர்கள் 'செக்ஸ்' ரீதியாக தொல்லை கொடுக்கிறார்களாம். அவருடன் பேசும் போதே இரட்டை அர்த்தத்தில் பேசுகிறார்களாம். சிலர் நேராகவே "நீ ரொம்ப செக்ஸியாக இருக்கிறாய்!" என்று கூறுகிறார்களாம்.

"தொழில் ரீதியாக பழக வேண்டிய நிலையில் சற்று நெருக்கம் ஏற்பட்டால்கூட அதையே பல வீனமாகக் கருதி ஆண்கள் எல்லை மீறுகிறார்கள்," என்று குற்றம் சாட்டியிருக்கிறார் ஹெல்லி.



## நினைவுச் சின்னம்

'நினைவாலே சிலை செய்து உனக்காக வைப்பேன்' என்று பாடல் இருக்கிறது. அது காதலிக்காக காதலன் பாடும் பாடல்.

நினைவாலே மட்டுமல்ல, வெண்கலத்தாலேயே தன் மனைவிக்கும், இரண்டு பிள்ளைகளுக்கும் சிலை செய்து வைத்திருக்கிறார் ஒரு கோடீஸ்வரர்.

சிலைகளுக்கு அருகில் நிற்பவர்தான் அந்தக் கோடீஸ்வரர். அமெரிக்காவைச் சேர்ந்தவர் பெயர்: ஜோலிக்னெர்.

கடந்த ஆண்டு இவரது மனைவியும் இரு மகள்களும் விமானத்தில் சென்றபோது விபத்தில் பலியாகினர்.

'இழப்பால் உடைந்துபோனார் ஜோலிக்னெர். முதலாண்டு நினைவாக தன் வீட்டுத் தோட்டத்தில் வெண்கலச் சிலைகளை நிறுவியிருக்கிறார். தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டதால், மனைவி, பிள்ளைகளை நேரில் காண்பதுபோல ஒரு திருப்தி ஏற்படுகிறதாம்.

## ஐநூறு வருட உடல்

தென் அமெரிக்காவின் மேற்குக் கரையில் பசுபிக் பெருங்கடலைத் தழுவியபடி உள்ள பெருநாடு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மிகச் சிறந்த பண்பாடுடைய சாம்ராஜ்யமாக விளங்கியது.

இங்கு வாழ்ந்த மக்கள் இயற்கையின் பல கூறுகளையும் கடவுள்களாக வணங்கி வந்துள்ளனர். அங்குள்ள 'நெவாடோ அம்பட்டோ' என்ற மலைச்சிகரத்தை, தங்களுக்கு தண்ணீரை வழங்கும் தேவதையாக வழிபட்டு வந்துள்ளனர்.

இங்கு வாழ்ந்தவர்கள் 'இங்கா' இனத்தவர்கள். தங்கள் வளமான வாழ்க்கைக்கு வற்றாத நீரை வழங்கும் அம்பட்டோ சிகரத்தில், தங்கள் குடும்பத்திலுள்ள மூத்த மகளை- அவள் பருவமடைந்ததும்- பலியாகக் கொடுக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டிருந்தனர்.

500 ஆண்டுகளுக்கு முன்னர் அம்பட்டோ சிகரத்தில் தேவதைக்கு அர்ப்பணிக்கப்பட்ட பெண்ணொருத்தியின் சடலத்தை 1995-செப்டம்பர் 8ம் திகதி ஜொஹான் றெயின்ஹாட் என்பவர் கண்டுபிடித்தார்.



அம்பட்டோ சிகரத்தில் கடல் மட்டத்திலிருந்து 19 ஆயிரத்தி 700 அடி உயரத்தில் உறைபனியாலும், சில கிலோமீட்டர் தூரத்தில் எரிதணலை எப்போதும் வெளியேற்றிக் கொண்டிருக்கும் 'சபன்சயா' எரிமலையின் சாம்பலினாலும் மூடப்பட்டிருந்த இந்தச் சடலம் கெட்டுப்போகாமல் பாதுகாப்பாக இருந்தது.

மிகச் சிறந்த கம்பளிப் போர்வைகளால் சுற்றப்பட்டிருந்த இச்சடலத்தின் அருகே சோளம், கோதுமை போன்ற தானியங்களும் வேறுபல பொருட்களும் மட்பாண்டங்களில் வைக்கப்பட்டிந்தன.

இப்பெண் கழுத்து நெரிக்கப்பட்டோ, நஞ்சூட்டப்பட்டோ கொலை செய்யப்படவில்லை. அங்கங்கள் எவற்றிலும் எவ்வித காயமும் இருக்கவில்லை.

தேவதைக்கு அர்ப்பணிக்கப்பட்ட இப்பெண் கடும் குளிரினால்தான் உயிர் விட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

இச்சடலம் எடுக்கப்படும்போது இதன் எடை 80 இறாத்தலாக இருந்தது. இதன் தலை முடிகள் எதுவும் சிதைவுறாமல் காணப்பட்டன.

## இரட்டை நாக்கு



நேற்று ஒரு பேச்சு, இன்று ஒரு பேச்சுப் பேசுகிறவர்களைப் பற்றி 'அவருக்கு இரட்டை நாக்கு' என்று சொல்வோம் அல்லவா.

உண்மையாகவே 'இரட்டை நாக்கு' உள்ள மனிதரை கண்டுள்ளீர்களா? இதோ இருக்கிறார் பாருங்கள். ஃபிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரத்தைச் சேர்ந்தவர். பெயர்: பிலிப்ஸ். வயது 37.


ஒரு நாக்கு மேலேயும், இன்னொரு நாக்கு அதற்குகீழேயும் அமைந்துள்ளன. ஒரு நாக்கை வைத்தே சிலர் என்ன பாடுபடுத்துகின்றனர்.

இரண்டு நாக்கு இருந்தால் என்னாகும்? என்று தானே நினைக்கிறீர்கள்! சரிதான்!

## தகவல் பெட்டி

## வேட்டையும் பாதுகாப்பும்





எதிர்த்துப் போராட முடியாமையால் அழிந்து கொண்டிருக்கும் இனங்களில் ஒன்று சிம்பன்சி என்று அழைக்கப்படும் மனிதக் குரங்குகள்.

மேற்கு ஆபிரிக்கக் காடுகளில் மனிதக் குரங்கு இனத்தைச் சேர்ந்த சிம்பன்சிகளும், கொரில்லாக்களும் பயங்கரவேகத்தில் அழிந்துவருகின்றன. கொங்கோ நாட்டு காடுகளில் மட்டும் வருடம்தோறும் மூவாயிரம் சிம்பன்சிகளும், அறுநூறு தாழ்ந்த பிரதேச கொரில்லாக்களும் வேட்டையாடப்பட்டு வருவதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

மனிதர்களால் அழிக்கப்படும் மனிதக் குரங்குகளை மனிதர்கள்தான் காப்பாற்றியும் வருகிறார்கள். தாய்க் குரங்குகள் வேட்டையாடப்பட்டதால் அநாதரவாகத் தத்தளித்த குட்டிக் குரங்குகளுக்கு சரணாலயம் அமைத்து பராமரிக்கின்றனர்.

சைக்கிளில் செல்பவர் வேட்டைக்காரர். பிடித்த குரங்கை இறைச்சிக்காக கொண்டு செல்கிறார். சரணாலயம் அமைத்து புட்டியில் பால் கொடுப்பதும் மனிதர்கள்தான். பாருங்கள் மனிதரில் எத்தனை நிறங்கள்!



இரண்டாம் உலகப்போர் காலத்தில் வாழ்ந்த மனிதர் இவர். கடும் போரால் கொடும் பட்டினியால் மக்கள் வாடினர். இவர் மட்டும் வயிறார உண்டு கொண்டிருந்தார். எப்படி என்றா கேட்கிறீர்கள்? எலி இருக்கப் பசி ஏன்? வெள்ளை எலிகளை பிடித்து கரக் முறக் என்று ஒரே கடியாக கடித்து உள்ளே தள்ளி வயிற்றை நிரப்பி விடுவாராம்.

என்ன, குமட்டுகிறதா? நம்நாட்டில்கூட வெள்ளை எலி சாப்பிடும் ஆட்கள் இருக்கிறார்கள். வெளிநாடுகளில் பாம்பு, தவளை போன்றவற்றைக்கூட ஒரு பிடி பிடிக்கிறார்கள்.

ஜெர்மன் வீதிகளில் திரிந்த இந்த எலி மனிதனை புகைப்படம் எடுத்தவர் அந்தக் கால பிரபல புகைப்படக் கலைஞர் டொனால்ட் மெக்யூரின்.

## எலி மனிதன்

## முதலிடத்தில் 'காதலே நிம்மதி' காலை வாரிய படங்கள்

கடந்த தீபாவளிக்கு வெளியான தமிழ்ப் படங்கள் பல வசூலில் தோல்வி கண்டிருந்தன. அடுத்து பொங்கல் படங்களும் வசூலில் சறுக்கியுள்ளன.

'பொன்மனம்', 'கிழக்கும் மேற்கும்', 'மறுமலர்ச்சி' போன்ற படங்களுக்கு நல்ல பெயர் கிடைத்தும், வசூலில் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. சூர்யா -முரளி நடித்த 'காதலே நிம்மதி' மட்டும் வசூலில் எங்கும் முதலிடத்தில் நிற்கிறது.

'பொன்மனம்' (பிரபு-கவுண்டமணி) முதல் மூன்று நாட்கள் சென்னை சாந்தி திரையரங்கில் அரங்கு நிறைந்த காட்சிகள். பின்னர் திடீர் வீழ்ச்சி.

உளவுத்துறை (விஜயகாந்த், மீனா) நல்ல கதை இல்லையென்ற குறையையும் மீறி வசூலில் முன்னணியில் நிற்கிறது. ஆனாலும் நீண்ட நாள் ஓட்டத்திற்கு தாக்குப்பிடிக்குமா என்பது சந்தேகம்தானாம்.

மூவேந்தர் (சரத்குமார்- தேவயானி) உதவிக்கு வரலாமா (கார்த்திக்-தேவயானி) நாம் இருவர் நமக்கு இருவர் (பிரபு தேவா-மீனா) ஆகிய பொங்கல் படங்கள் வசூலில் காலைவாரி விட்டுள்ளன.

அர்ஜுன் நடித்த 'கொண்டாட்டம்' விற்பனையாகாமல் கிடந்தது. பல இழுபறியின்பின்னர் திரையிட்டுள்ளனர். பாக்யராஜின் 'வேட்டிய மடிச்சுக் கட்டு' விலைபோகாமல் கிடக்கிறது.

## பாடல் சரியில்லை

இளையராஜாவின் மகனான கார்த்திக்ராஜாவின் இசையில் பாடல் ஒன்றைப் பாடினார் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். அந்தப் பாடலைப் போட்டுக் கேட்டார் இசையமைப்பாளர். பாடல் சரியாக வரவில்லை என்று தானே பாடி பதிவு செய்துவிட்டாராம்.

இதனால் இயக்குநர் உட்பட பலரும் மூட்அவுட். ஆனாலும் வெளியே காட்டிக் கொண்டால் நஷ்டமாகுமே என்று பேசாமல் இருக்கிறார்களாம்.

## நாயகம் தாமதம்

கமலின் 'மருதநாயகம்' படம் வெளிவர ஒரு வருடமாகும். அதற்கிடையே 'காதலா காதலா'வில் நடித்து முடித்திருக்கிறார். இன்னொரு குறுகிய காலத் தயாரிப்பிலும் நடித்து முடிக்க இருக்கிறார் கமல்.

அப்படமும் கமலின் சொந்தத் தயாரிப்பாக இருக்குமாம். மருதநாயகம் செலவுக்கும் இந்த குறுகிய காலத் தயாரிப்புக்களின் இலாபம் உதவும்.

## கோடி விஜய்

'காதலுக்கு மரியாதை' பட வெற்றிக்கு பின்னர் விஜய் சம்பளம் எவ்வளவு என்கிறீர்கள்? ஒரு கோடி ரூபாயை முட்டுகிறதாம். ஒப்பந்தம் செய்யச் சென்ற தயாரிப்பாளர்கள் சுவரில் எறிந்த பந்தாக திரும்பி வருகிறார்கள்.

அதிக படங்களில் நடிப்பதைத் தவிர்த்து அம்சமான படங்களில் மட்டுமே நடிக்க விரும்புகிறார் விஜய். அதனால்தான் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறாராம்.

## காதல் வேதம்

பாடகர் ஹரிஹரன் காலம் அறிந்து பயிர் செய்திருக்கிறார். காதல் என்று தொடங்கும் படங்கள் ஹிட்டாகிக் கொண்டிருக்கின்றன. அதனால் காதலுக்கு மவுசு உள்ள காலத்தில் காதல் ரசம் சொட்டும் பாடல்களை பாடி ஓடியோ ஆல்பம் ஒன்று வெளியிட்டுள்ளார்.

ஆல்பத்தின் பெயர் 'காதல் வேதம்' பாடல்கள் எழுதியவர்: வைரமுத்து.

## அன்றும் – இன்றும்

"சிம்ரானின் வரவு உங்களை பின்னுக்கு தள்ளிவிட்டதா?" இந்தக் கேள்விக்கு கலகல சிரிப்புடன் ரம்பாவின் பதில்:

"இரண்டு வருஷம் முன்பாக நக்மாவை நான் பின்தள்ளிவிட்டேன் என்று பத்திரிகைகளில் எழுதினார்கள். அதற்காக அப்போதும் நான் சந்தோசப்படவில்லை. இப்போது சிம்ரான் என்னை பின்னுக்கு தள்ளி விட்டதாகக் கேட்கிறீர்கள். இதற்கும் நான் கோபப்படவில்லை.

## சங்கவி உபதேசம்

கவர்ச்சி பற்றி சங்கவி சொல்லும் சங்கதி என்னவோ?

"சினிமாத் துறையில் கவர்ச்சி காட்டி நடித்த முன்னோடி நான் இல்லை. எனக்கு முன் நடித்தவர்கள் செய்ததைத்தான் நானும் செய்கிறேன்.

மறைந்த நடிகை திவ்யபாரதி படம் ஒன்றில் ஒரு சட்டை மட்டும் போட்டுக் கொண்டு நடித்தார். நானும் அப்படி தெலுங்குப்படம் ஒன்றில் நடித்தேன்.

இந்த வயதில்தான் கவர்ச்சி காட்ட முடியும். அறுபது வயதிலா காட்ட முடியும்?"



பொபி தியோல்-மனிஷா கொய்ராலா
படம்: குப்த்

## மனிஷா சாதனை

சென்ற ஆண்டு இந்தியாவில் வெளியான படங்களில் அதிக வசூல் அறுவடை செய்து சூப்பர் ஹிட்டான படத்தின் பெயர் 'குப்த்'

பொபிதியோல்-மனிஷா கொய்ராலா ஜோடியாக நடித்தபடம் அது. இளசுகள் மீண்டும் மீண்டும் பார்த்ததுதான் படத்தின் மகா வெற்றிக்கு காரணமாம்.

பொபிதியோல் காதல் லீலைகளில் உண்மையாகவே மன்னராம். கரிஷ்மா கபூர், சோனாலி என்று அவரது பட்டியலில் உள்ள நடிகைகளில் மனிஷாவையும் இணைக்க முயன்றாராம். மனிஷா அபாய மணியடித்துவிட்டார். காதலும் வேண்டாம், கத்தரிக்காயும் வேண்டாம் என்று கூறிவிட்டார்.

## நீடிக்கிறார் ராம்கி

விஜயசாந்தியின் அபிமான ஜோடியாக நீடிக்கிறார் ராம்கி. தனக்கு அடக்கமான நாயகன் என்பதால் தொடர்ந்து சிபாரிசு செய்கிறார் விஜயசாந்தி.

சமீபத்தில் வெளியாகி ஹிட்டான படம் 'நடாம்'. அதனையடுத்து தமிழில் வரப்போகும் படம் 'ஜான்சி'. விஜயசாந்திதான் ஜான்சி. அவருக்கு உதவும் காதலனாக ராம்கி நடிக்கிறார். பிரகாஷ்ராஜ், வடிவேலு, அலெக்ஸ் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. இயக்கம்: எச்.அன்ராஜ்.

## இரட்டை வேடம்

'உளவுத்துறை' இதுவரை நன்றாகப் போய்க் கொண்டிருப்பதால், அடுத்த படமும் சொந்தத் தயாரிப்புத்தானாம். அப்படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கப்போகிறார் விஜயகாந்த்.

'உளவுத்துறை' படத்தில் தண்ணீருக்கு அடியில் நடைபெறும் சண்டைக்கு திரையரங்கில் பலத்த கரகோசம். அக் காட்சியில் நடிக்கப்பட்ட கஷ்டத்திற்கு கைமேல் பலன் என்று பூரிக்கிறார் விஜயகாந்த்.

## ○யார்○ பூஜா?

'சொல்லத்தான் நினைக்கிறேன்' போன்ற படங்களில் கிறங்கடிக்கும் இளைஞியாக நடித்தவர் ஜெயசுதா. கமலஹாசனுடன் மிக அதிகமாக கிசுகிசுக்கப்பட்டவர்.

சமீபத்தில் 'அந்தி மந்தாரை' படத்தில் விஜயகுமாரின் ஜோடியாக நடித்தார். 'பாண்டியன்' படத்தில் ரஜினிக்கு அக்காவாக நடித்தார். ஓரளவு வயதாகி விட்டால் நடிகைகளை அக்கா, அம்மா என்று ஓரம் கட்டி விடுவது வழக்கம் தான்.

அன்றைய ஜெயசுதாவை அப்படியே உரித்து வைத்தது போன்ற நடிகை ஒருவர் இப்போது வந்திருக்கிறார். 'சூர்ய பார்வை' படத்தில் பூஜா என்ற பெயரில் அர்ஜுன் ஜோடியாக அறிமுகமாகிறார்.


யார் இந்தப் பூஜா? ஜெயசுதாவின் தங்கையும், நடிகையுமான சுபாஷிணியின் மகள்.

'சூர்யபார்வை'யில் ரகுவரன், ராதாரவி, இந்து ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்கம் ஜெகன். இசை: என்.ஏ.ராஜ்குமார்.

## முகப்பில்

கமலஹாசன்
படம்: காதலா காதலா

சிம்ரான்
படம்:இதுதான் காதல்



அருண்குமார்-பானு
படம்: துள்ளித் திரிந்த காலம்

## திரையுலக மறுபக்கம் 43
## புகழால் வழிம...
## திருந்திய பின்னா...

உயரமான வில்லன் நடிகர்களில் அருவர் அவர். குணசித்திரப் பாத்திரங்களிலும் நன்கு சோபிக்கக்கூடியவர்.

சில படங்களில் கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. மள மளவென்று பட வாய்ப்புக்கள் குவிந்தன.

இரவு பகல் என்று பாராமல் வில்லனாகவும், நாயகனாகவும் மாறி மாறி நடித்துக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் துணை நடிகைகள் சிலரது சகவாசம் கிடைத்தது. பின்னர் புகழ் கிடைக்கத் தொடங்கியதால் முன்னணி நடிகைகள் சிலர்கூட அவருடன் சகவாசம் கொள்ள ஆசைப்பட்டனர்.

நடிகருக்கு தலைகால் புரியவில்லை. பெரிய நடிகைகள் தன் மடியில் இருக்கக்கூடிய காலம் வரும் என்று கனவிலும் நினைத்ததில்லை.

தினமும் மது வும், மாதுவும் அவரை ஆட்டிப் படைக்க, தூக்க...

...மின்மையும் கடும் உழைப்பும் அவர் உட...

நடிகைகளின் அழைப்பை தட்டவும் மு... பலப்படுத்த போதை மருந்தை நாட...

முதலில் போதைப் பவுடர் கொண்... போதை ஊசி போட்டுக் கொள்ளும் அ...

போதை மயக்கத்தில் படப்பிடிப்புக்... தேடிப்போன தயாரிப்பாளர்களை ...

முன்னணி நடிகைகள் சிலர் நடிகரின் ... நடிகரால் இனிமேல் எந்த ரீதியிலும் பய... விலகிப்போயினர்.

அப்போதுதான் ரசிகை ஒருத்தி நடி... நடிகருக்கு ரசிகையின் ஆறுதலான உப...

### க...

அந்த ரசிகையும் அடிக்கடி படி... மட்டும்தான் வீட்டில் தனியாக இருந்... உதவியாளர்கள் அனைவரும் நடிகரவி...

ரசிகை முதலில் பணிவிடை செய்... ர்தியாக வளர்ந்தது. போதை மருந்து... 'கவனிப்பு' தினம் தேவை என்று நடிகர் ...

ரசிகை தயங்க, "உன்னைத்தான் கல்... கொடுத்தார் நடிகர். அதன்பின்னர் இர...

இந்த விடயமும் ரசிகையின் வீட்டா... விட்டாரை எதிர்த்துக் கொண்டு நடிகரு...

கொஞ்சம், கொஞ்சமாக நடிகர் ... வாய்ப்புக்கள் கிடைத்தன.

சிலகாலம் முன்னணியில் இருந்த ... அறிவுஜீவித்தனமாக பேசக்கூடியவ... கவர்ந்தது. அதனால் ரசிகையை எப்ப...

புதிய கா...



கரிஷ்மா கபூர்
படம்: கோகன்வரன்

## துணிச்சல் ஜோடி

அஜித்குமார்-மந்த்ரா நடித்து படுதோல்வி கண்ட படம் 'இரட்டை ஜடை வயசு'. அதே ஜோடி மீண்டும் துணிச்சலாக ஒன்று சேர்கிறது.

'சக்தி மகா சக்தி' என்னும் படத்தில் இந்த ஜோடி நடிக்கப் போகிறது. இன்னொரு ஜோடியாக ஆனந்த், இந்து நடிக்கின்றனர். மன்சூர் அலிகான், செந்தில், என்.எஸ். சந்திரன், ராக்கி, வடிவுக்கரசி, கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

இயக்கம் ராஜசிம்மன். இசை: என்.ஏ.ராஜ்குமார். தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் தயாராகும் சினிமாஸ்கோப் படம்.

## சம்பளப் பாக்கி

'வேட்டிய மடிச்சுக் கட்டு' படப்பிடிப்பில் பாக்யராஜ்-நக்மா இடையே ஒரு 'இது' ஏற்பட்டு நக்மாவின் காதல் நடிகர் கொதித்துப் போனது பழைய கதை. காதலரான நடிகர் போட்ட போட்டில் ஆடிப் போனார் பாக்யராஜ் என்றுதான் எல்லோரும் நினைத்தனர்.

ஆனால், பாக்யராஜ் வேறு விதமாகப் பழிவாங்கிவிட்டார். நக்மாவின் சம்பளப் பாக்கியை கொடுக்காமல் இழுத்தடிக்கிறார். கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ரூபாய் பாக்கியாம்.



கமல்-ரம்பா
படம்: காதலா காதலா

# மினி சினி

* 'சித்திரமே சித்திரமே' படத்திற்காக மோகனுக்கும், 'உல்லாசம்' படத்திற்காக அஜித்குமாருக்கும் கமலஹாசன் பாடல்களைப் பாடியிருந்தார். இதே போல் அண்மையில் 'வேலை' படத்திற்காக விக்னேஷிற்கு விஜய் பாடலொன்றைப் பாடியுள்ளார்.

* 'காதலன்' படத்தில் வரும் 'ஊர்வசி ஊர்வசி...' பாடல் காட்சியில் கண்ணாடி பஸ் ஒன்று பயன்படுத்தப்பட்டது தெரிந்ததே. தற்போது டி.ராஜேந்தரின் 'மோனிஷா' படத்தில் வரும் பாடல் காட்சி ஒன்றிற்காக கண்ணாடி ரயில் ஒன்று பயன்படுத்தப்படவுள்ளது.

* 'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்' ஆகிய படங்களைத் தொடர்ந்து சேரன் அடுத்து இயக்கும் 'பாரசீக ரோஜா' படத்தில் பிரபல இந்தி நடிகர் ஷம்மி கபூர் முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளார். இவர் ஏற்கனவே 'அமரன்' படத்தில் நடித்திருக்கிறார்.

* ஒளிப்பதிவாளர் விஜயலட்சுமியைத் தொடர்ந்து விஜயஸ்ரீ என்றொரு பெண் ஒளிப்பதிவாளர் 'வேலை' படத்தின் மூலம் ஒளிப்பதிவாளராக அறிமுகமாகிறார். இவர்கள் இருவரும் பிரபல ஒளிப்பதிவாளர் அசோக்குமாரிடம் உதவியாளர்களாக இருந்தவர்கள்.

* சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் 'சொல்லாமலே' படத்தில் லிவிங்ஸ்டன் ஜோடியாக நடிக்க முதலில் ஒப்பந்தமானவர் சுவலட்சுமி. தற்போது அந்த வேடத்தில் கௌசல்யாவை நடிக்க வைத்துள்ளனர்.

* 'நினைத்தேன் வந்தாய்' தெலுங்கில் வெற்றி பெற்ற 'பெல்லி சந்தடி' படத்தின் தமிழ்ப் பதிப்பு என்பது தெரியும். தமிழில் விஜய்-தேவயானி-ரம்பா நடிக்கும் வேடங்களில் தெலுங்கில் ஸ்ரீகாந்த்-ரவளி-தீப்தி ஆகியோர் நடித்திருந்திருந்தனர்.

* பாரதிராஜா இயக்கத்தில் நெப்போலியன் நடிக்கும் 'சிறுகன் முறியவில்லை', சரத்குமார் நடிக்கும் 'வாக்கப்பட்ட பூமி' ஆகிய இரண்டு படங்களின் தலைப்புக்களும் மாற்றப்படவுள்ளன.

* பிரபல மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் இயக்கிய 'விராசத்' என்ற இந்திப்படம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, பிரியதர்ஷனுக்கு அமிதாப்பச்சன் நடிக்கும் படமொன்றை இயக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

* சூர்யா-ஜோதிகா இணைந்து நடிக்கும் 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தில் நாசர்-விஜயகுமார் இருவரும் இரட்டை இசையமைப்பாளர் வேடத்தில் நடிக்கின்றனர்.

* 'ஆஹா' படத்தைத் தயாரித்த ஷோகன் ஃபிலிம்ஸ் அஜித்குமார் நாயகனாக நடிக்க 'பேரழகி' என்ற படத்தைத் தயாரிக்க இருந்தது. ஆனால் அஜித்குமார் நடித்த 'ரெட்டை ஜடை வயசு' தோல்வியடைந்ததால் வேறொருவரை கதாநாயகனாக்கவுள்ளனர்.

## மாறுகிறார் சத்யராஜ்

சத்யராஜ் பகுத்தறிவுவாதி. அதேபோல மனதை கட்டுப்படுத்தவும் தெரிந்தவர். அசைவ உணவு வகையறாக்களை மூக்குமுட்டப் பிடிப்பவர் இப்போது கைவிட்டுவிட்டார். மரக்கறி உணவு மட்டும்தான். அதுவும் மதிய உணவாக பழங்கள் மட்டும். முன்னர் செயின் ஸ்மோக்கராக இருந்தார். இப்போது சிகரெட்டை தொடுவதே இல்லை. நடிப்புக்கு அவசியப்பட்டால் மட்டும் தொடுகிறார்.

# சினிவிசிட்

## 'அண்ணன் தங்கச்சி'

வில்லன் நடிகர் சரண்ராஜ் படம் ஒன்றை இயக்கப் போகிறார். கன்னடத்தில் பல படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார் சரண்ராஜ். சுருதியுடன் இணைந்து அவர் நடித்து 200 நாட்கள் ஓடிய படம் 'தவறின தொட்டிலு'.

அந்தப் படத்தைத்தான் தமிழில் இயக்கப் போகிறார். 'அண்ணன் தங்கச்சி' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

படத்தில் இரண்டு கதாநாயகர்கள். ஒருவர் சரண்ராஜ். இன்னொருவர் சரவணன். கதாநாயகி சுருதி. இவர் 'கல்கி' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர். இசை: தேவா.

## சிம்ரான் விடு தூது

கமல், ரஜினி ஆகியோருடன் நடித்தேயாக வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கிறார் சிம்ரான்.

கமலஹாசனுக்கு தூதுவிட்டுப் பார்த்தாராம். 'காதலா காதலா' படத்தில் ரம்பாவுக்கு வாய்ப்புக் கொடுத்ததுபோல தனக்கும் ஒரு படத்தில் வாய்ப்புத் தரவேண்டும் என்று சிம்ரான் அன்பு வேண்டுகோள் விடுத்திருக்கிறாராம். கமல் வாய்ப்புக் கொடுப்பாரா தெரியவில்லை.

ஆனாலும் ரஜினியின் அடுத்த படத்தில் சிம்ரான்தான் கதாநாயகி என்பது நூற்றுக்கு தொண்ணூறு வீதம் உறுதியாகிவிட்டது. 'சூப்பர் ஸ்டாருடன்' நடிக்கும் நாளை எண்ணி இதயத் துடிப்புடன் காத்திருக்கிறார் சிம்ஸ்.

சூப்பர் ஸ்டாரின் படத்தில் நடித்து விட்டால் போதும் இந்த ஆண்டில் தமிழ்ப்பட உலக நம்பர் வன் இடம் தனக்குத்தான் என்று நம்புகிறார். சென்னையில் நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியுள்ள சிம்ரான் விரைவில் சொந்த வீட்டுக்கு குடியேறுகிறார். பங்களா ஒன்று வாங்கிவிட்டார்.

ஹோட்டலில் இருப்பதால் பல தொல்லைகள். அதுமட்டுமல்லாமல் சந்திக்கவரும் வி.ஐ.பிக்கள் பற்றியும் வெளியே தெரிந்துவிட வாய்ப்புண்டாம். அதுதான் தனி பங்களா.

## காதோடு சொல்லுகிறோம்

'அன்புடன்' இந்தப் படத்தில் ஹீரோ ஹீரோயினாக நடிப்பவர்கள் 'காதலுக்கு மரியாதை' கொடுக்கும் நடிகரும், காலமெல்லாம் காதல் வாழ்க' என்று சொல்லும் நடிகையும்தான். மேற்படி ஜோடிகள் படப்பிடிப்பு நேரத்தில் தங்களுக்கு 'டயலாக்' இருந்தால் மட்டுமே பேசிக்கொள்கிறார்கள். மற்றபடி மூச்..பேச்! என்னாச்சு? இருவருக்கிடையே ஏதோ 'விஷயத்தில்' கசமுசாவாம்.

'தேவதை' நடிகைக்கு நாயகனைப் பிடித்தால்தான் கட்டிப்பிடித்து நடிக்க சம்மதிப்பாராம். 'தொழில்' என்பதற்கு ஒத்த கருத்துவரும் பெயருள்ள படத்தில் நாயகனாக நடிப்பவர் விக்னேஷ். அவருடன் நடிக்க நடிகையை அணுகினார்களாம். 'வேண்டவே வேண்டாம். மாட்டவே மாட்டேன்' என்றுவிட்டார் நடிகை.

நல்ல உயரமும், வாளிப்பான உடம்பும், வசீகரமான முகமும் வெள்ளை நிற மேனியும் கொண்ட அந்த இரண்டெழுத்து நடிகை திருமணம் செய்துகொண்டு அமெரிக்காவில் சமீபத்தில் குடியேறினார். திருமண ஆசையே இல்லாத அந்த நடிகை பெற்றோரின் நிர்ப்பந்தத்தால் வேண்டா வெறுப்பாக சம்மதித்தார். இப்போது மோகம் முப்பது நாளில் தீர்ந்துவிட்டது. நடிப்பாசை மறுபடி தலை தூக்கியிருக்கிறது. கணவரோ நடிக்கக் கூடாது என்கிறார். நடிகை நடிப்பேன் என்று பிடிவாதமாக நின்று, அமெரிக்காவில் இருந்தபடியே வாய்ப்புத் தேடி வலை எறிந்திருக்கிறார்.

இயக்குநர் இமயம் (சிகரமல்ல) அறிமுகம் செய்த நான்கு எழுத்து நடிகை வாய்ப்பில்லாமல் வறட்சியில் தவிக்கிறார். குறிப்பிட்ட ஹீரோக்களுடன் மட்டுமே (மிகவும் வேண்டப்பட்ட) நடிப்பேன் என்று பிடிவாதம் பிடித்தவர். அதனால் இயக்குநர்கள் பலரது கோபத்தை சம்பாதித்தவர் இந்த நடிகை. இப்போது நடிகை வறட்சியில் இருக்கும்போது அந்த 'மிகவும் வேண்டப்பட்ட' நடிகர்கள்கூட திரும்பியும் பார்க்கவில்லையாம்.

'ஹீரா' நடிகையின் காதல் கோட்டையில் சிக்கிய இளம் நடிகர் மெல்ல மெல்ல நழுவிக்கொண்டிருக்கிறார் அல்லவா. பார்த்தார் நடிகை, 'கார்' நடிகரின் அன்புக்கு பாத்திரமாகி விட்டார். உடனடியாக தன் படம் ஒன்றில் நடிகைக்கு சிபாரிசு செய்து வாய்ப்புத் தேடிக் கொடுத்தார் 'கார்' நடிகர்.

## பிஸி வினிதா

இந்தியில் பிஸி, தெலுங்கில் பிஸி என்று புளுகிவிட்டுக் கொண்டிருந்தார் குலைத் புகழ் வினிதா. ஆனால் எங்குமே பிஸி இல்லை. இந்தி நடிகர் மிதுன் சக்கரவர்த்தியும் கைவிரித்துவிட்டார்.

தமிழில் முரளி ஜோடியாக 'விரத்தாவாட்டு' படத்தில் மட்டும் நடித்து வருகிறார் வினிதா. இப்படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் ராஜ்கிரண். தன்னை அவருக்கு ஜோடியாகப் போட்டு விடுவார்களோ? என்று பயந்தாராம் வினிதா. ஆனால் முரளிக்கு ஜோடியாகத்தான் போட்டுள்ளார்கள் என்பதால் பயம் போய்விட்டது.

## ...மாறிய நடிகர் ...னார் உதறினார்

... உடலை பலவீனப்படுத்தின.

... முடியாது. தட்டமனமும் இல்லை. அதனால் உடலை ... தொடங்கினார்.

... சிகரெட்டுக்களையே புகைத்தார். பின்னர் படிப்படியாக ... அவரது உடல் போதைக்கு அடிமையானது.

... கலந்துகொள்ள முடியாமல் போனது. ... குறையாக விரட்டினார்.

... பணத்தை சாமர்த்தியமாக சுருட்டிக் கொண்டனர். ... இல்லை என்று தெரிந்ததும் அந்த நடிகைகள் ...

... நடிகருக்கு உதவ முன்வந்தார். தனிமையில் தவித்த ... உபசார வார்த்தைகள் இதமளித்தன.

## ...கவனிப்பு

... வீட்டுக்கு செல்ல ஆரம்பித்தார். நடிகர் ... ஊதியம் கொடுக்காததால் ஊழியர்கள், ... போய்விட்டார்கள்.

... ஆரம்பித்தார். உளரீதியாக தொடங்கிய நட்பு உடல் ... பழக்கத்தை விடவேண்டுமானால் ரசிகையின் ... கூறினார்.

... செய்வேன். இது சத்தியம்" என்று வாக்குக் ... நடிகருடன் தங்க ஆரம்பித்தார் ரசிகை. ... தெரியவந்தது. அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ... நடிகருடனேயே தங்கியிருந்தார் ரசிகை.

... குணமடைந்தார். சினிமாவிலும் மறுபடி நடிக்க ...

... நடிகையின் 'நட்பு'ம் கிடைத்தது. அந்த நடிகை ... அவரது பேச்சும், பழக்கவழக்கமும் நடிகரைக் ... தன் வீட்டைவிட்டு காலி பண்ண வைத்துவிட்டார். ... காதலி கிடைத்ததும் தன்னை திருத்தி வழிப்படுத்திய ரசிகையை மறந்து விட்டார் நடிகர். 'ரசிகை' பொறுக்க மாட்டாமல் சஞ்சிகை ஒன்றுக்கும் பேட்டியளித்தார். நடிகரோ எதனையும் கண்டு கொள்ளவில்லை. நடிகையை மணந்தார். மறுபடி புகழேணியில் உயர்ந்தார். உயர்ந்து கொண்டும் இருக்கிறார்.

## தொடரும் உறவு

நடிகர் கமலஹாசன் தன் முதல் மனைவி வாணியை விவாகரத்து செய்ததை அவரது குடும்பத்தினர் விரும்பவில்லை. கமல் இப்போது சரிகாவை மணந்து இரண்டு பிள்ளைகளும் உள்ளனர்.

ஆனால் கமலஹாசனின் சகோதரர் சாருஹாசன், மற்றும் சுஹாசினி ஆகியோர் வீடுகளுக்கு வாணி வந்து போகிறார். சுஹாசினியின் கணவர் மணிரத்னத்தின் படங்களிலும் உடை வடிவமைப்பாளராக வாணி பணி புரிந்திருக்கிறார். நாட்டியப் பள்ளி நடத்தும் வாணி விரைவில் மறுமணம் செய்து கொள்ள இருக்கிறார்.



சங்கவி
படம்: பகவத் சிங்

பருவம் வந்ததும் ஆசை வந்ததா?
ஆசை வந்ததும் பருவம் வந்ததா?

## தேவை

முற்றிய
தேயிலை இலைகளை
மடித்துக் கொண்டு
அப் பின்னணி இசையில்
பந்து தேடுவது....
•••
புற் கிளையொன்றை
முறைப்பெண்ணின்
காதில் நுழைத்து
அவள் தரும் தண்ணீர்
அபிசேகத்தை
வாஞ்சையுடன்
வாங்கிக் கொள்வது....
•••
சன் டிவியின்
'டமிழ்' நிகழ்ச்சிகள்...
•••
நிஜ வயிற்றுவலிக்கும்
பொய் வயிற்றுவலிக்கும்
உத்தியோகபூர்வ
'மருந்தைக்' கொஞ்சம்
அருந்திக் கொள்வது...
•••
எச்சில் துப்பும்
தூரத்திலுள்ள பள்ளியில்
முடிந்தவரை
படித்து முடித்துவிட்டு
தொழிலாளர் நியமனத்திற்காய்
காத்திருப்பது...
•••
இப்படியே இருந்துவிட்டாலும்
அடையாள அட்டை
தேவை!!!
•••

எஸ்.பிரபா.

## தொலைந்தது தலையெழுத்து

கற்களும் முட்களும்
கிழித்த பாதம்
இரத்தத்தில் தோய...
எல்லாமே கடந்துவிட்டோம்,
தலைச்சுமையிறக்க
இன்னுமொரு
சத்திரமுங் கிடைக்கவில்லை.
•
இளைப்பாற நினைத்து
ஒதுங்கிய ஆலயத்திலும்
எலும்பும்–ஊனமும்
தடயங்களாக–
மீண்டும் சுமையுடன்
நெடுந்தூரம் ஓடுகிறோம்!
•
நாதியற்றவராய்,
தாய் நாட்டில் அன்னியராய்,
அலைக்கழிக்கப் படுகிறோம்!
ஆறுதல் கூறவுமோர்
அயலவரும் எமக்கில்லை!
•
அண்டியோர் யாவரும்
தெண்டலில் இன்னும்
சண்டைகள் போடுவதால்,
சாக்கடையில் இனமானம்!
•
சர்வதேச சந்தையின்
சன நெருக்கடியில்
தொலைந்து போனது மனிதம்!
எஞ்சிய உருவங்கள்
ஐ.நா.விலும் அவதாரம்.
•
அடுத்தது எதுவென்ற
ஆரூடம் எமக்கில்லை.
•
நாம் தொலைத்தது
இருப்பிடங்களை
மட்டுமல்ல;
எம்
தலையெழுத்தையுந்தான்!

மணலாறு–பாஸ்கி.

## உலகப் புகழ்பெற்ற படம்



இரண்டாம் உலகப் போரின்போது 'கிளிக்' செய்யப்பட்ட கலக்கல் புகைப்படம். குண்டுகளைக் கக்கியபடி செல்லும் யுத்த டாங்கிமுன் பாய்ந்து, டாங்கியை செலுத்தும் வீரரை துப்பாக்கி முனையில் மடக்கும் தத்ரூபமான காட்சி.

## மறந்து போகுமா...?



பூச் செண்டும்
வாழ்த்து மடலும்
நட்பை பேணலாம்..
விரக்தியடையாத
மனதிற்கு!
**
சொன்ன வார்த்தையும்,
கொடுத்த பரிசும்,
ஞாபகம் இருக்கலாம்...
உண்மையன்பு
உள்ளவர்களுக்கு!
**
வாழும் சோகமும்,
நடந்த கஷ்டமும்,
மாண்டு போகலாம்..
எழுத்தாளனுக்கு!
**
எடுத்த வெற்றியும்,
அடைந்த தோல்வியும்,
மறக்காமல் இருக்கலாம்...
வீரனுக்கு!...
**
கேட்ட பேச்சும்,
வாங்கிய அடியும்,
மறந்து போகலாம்–
தாயன்பினில்!
**
ஆனாலோ...!
இங்கு
விழுந்த செல்லும்,
மடிந்த உயிரும்,
மறந்து போகுமா?
நாளும் வரும்
மரண பீதி
மாண்டு போகுமா?
**
செழித்த சந்தோஷம்
மரித்துப் போனதை
மறந்து போகுமா.?
மனம்!
**
எடுத்த
ஓட்டம்
அகதியெனும்
கம்பத்தை
அடைந்ததை
மறந்து போகலாமா?
**

மு.சசிகலா, கோமாரி–01.

## மகஜர் காலங்கள்...

என்றும்
எனதன்பு
நண்பனுக்கு!
பயத்துடன் எழுதுவது
யாதெனில்,
மனம் நலமா?
என் மனம் இங்கு
நலமில்லை.
**
உன் உடல் சுகமா?
என் உடல்
'சுகம் கெட்' பார்த்து
தப்பியது!
**
வயதிற்கு வந்த
பெண்ணைப் போல
வீட்டின் உள்ளேயே
இருக்கிறேன்.
**
நண்பர்களை
சுகம் கேட்கச்
சொன்னாய்;
அவர்களின்
வீட்டிற்கு போய்
நீண்டகாலம்.
**
உன் கண்ணாடி
வியாபாரம்
எப்படிப் போகிறது?
இங்கு ஒரு
கிளை திறக்கவும்.
**
வேறென்ன புதினங்கள்.
**
சுகங்களுக்கும்
புதினங்களுக்கும்
பதில் மட்டும் போடு!
**
இப்ப
இங்கு
வரவேண்டாம்!
**

சுபா வரன்–
கண்டி.

## தேன் கிண்ணம்

## பாவம் கடவுள்!

'கணதெய்யோ'–உனக்கு
கண்டியில்
விசேட பூசையாமே..!
மலை நாட்டில்
மலர்களில்லாதப்படியால்...
செங்கற்களால்–உனக்கு
'அபிசேக'மாமே..!
நீ கடவுள் தானா? என்றறிய..
உன்னை காலால்
உதைத்தார்களாமே?
தூக்கி உடைத்தார்களாமே?
பாவம்–நீ
உயிரற்ற...
கல்லென்பதால் தப்பித்தாய்..!
உயிரிருந்திருந்தால்...
உருவியெடுத்திருக்க
மாட்டார்களா?

சோ.ஸ்ரீதரன்,
பொகவந்தலாவை.

## என் மனைவிக்கோர் மடல்

நவா!
இப்போதெல்லாம்
எனக்கு
விடாய்ப்பது
நீரல்ல–
நீதான்!
–*–
அதனால்தான்–
உணவை மறந்தும்,
உறங்க மறந்தும்
உன்
நேச விடாய்ப்பில்
என்
நெஞ்சு
நெகிழ்ந்துபோனது!
–*–
தபால் காரனையே
எதிர்பார்த்து
என்
விழிகள்
வழியில் தவம்
கிடக்கிறது!
–*–
என்
உடலில்
ஒட்சிசன்
இருக்கும் வரையில்
உனக்காகவும்,
உன்
கடிதத்திற்காகவுமே
காத்துக்கொண்டிருப்பேன்!
–*–
வரண்டுபோன பூமிக்கு
வானம்
மழைத்துளி தூவி
வசந்தம் சேர்ப்பதுபோல்,
உன்
நேசவிடாய்ப்பால்
நெகிழ்ந்துபோன
என் நெஞ்சை
நெறிப்படுத்த
ஒரு
கடிதத்தையேனும்
எனக்கு
அனுப்பிவைக்க
மாட்டாயா...??

காவத்தமுனை– ஹாறூன்.

## பேனா நண்பர்கள்



பெயர்:
பொ, ஜெயகுமார்
வயது: --
முகவரி:
66 1/2, சைட் வீதி,
ஹட்டன்.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.
கிரிக்கெட்.



பெயர்:
யூ.ஏ.எம். அன்சார்
வயது: 23
முகவரி: P.O.BOX-577,
CODE-92400, AL-ARDIYAH,
KUWATI.
பொழுது போக்கு:
பத்திரிகை, கவிதை,
நாவல்.



பெயர்:
எஸ். ஜெய காந்தி,
வயது: 19
முகவரி: 12, சேத வத்த,
குரு நாகல் வீதி, சிலாபம்.
பொழுது போக்கு:
கிரிக்கெட், டி.வி.,
கவிதை எழுதுதல்,
ஓவியம் வரைதல்.



பெயர்: க. அழகேஸ்,
வயது: 19
முகவரி:
இறக்கக்கண்டி,
நிலாவெளி,
திரு கோணமலை.
பொழுது போக்கு:
வானொலி, டி.வி.



பெயர்: ஏ.சி.சபினா
வயது: 19
முகவரி: BLOCK NO-05
STREET NO-53, HOUSE NO-22,
CODE NO-28400,
AL-RUMAITHIYA, KUWAIT.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி,
தொலைக்காட்சி.



பெயர்:
எனரின் அன்டனி
வயது: 25
முகவரி:
P.O. BOX-873,
TRIPOLI, LEBANON.
பொழுது போக்கு:
வானொலி, டி.வி.,
முரசு வாசித்தல்

## இந்த வாரம் உங்கள் பலன்

(22.02.1998 தொடக்கம் 28.02.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | – சூரியன், புதன், செவ்வாய், வியாழன், கேது. |
| மீனம் | – சனி. |
| சிம்மம் | – இராகு. |
| மகரம் | – வெள்ளி. |

★ சந்திரன்– தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| **புதன்**- பலவித பேறு, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| **வியாழன்**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| **வெள்ளி**- வீண்குறை கேட்டல், தொழில் மந்தம். | பகல் 11 மணி |
| **சனி**- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- மனக் கிலேசம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் 11 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **புதன்**- வெளியிடப் பயணம், துயர் நீங்கும். | மு.ப. 10 மணி |
| **வியாழன்**- அந்நியர் உதவி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் 11 மணி |
| **சனி**- பண வரவு, மனக்கவலை நீங்கும். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், கடன் படல். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- வீண் முயற்சி, அந்நியர் பகை. | பி.ப. 2 மணி |
| **புதன்**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- கடன் சுமை, மனக் கிலேசம். | மு.ப. 10 மணி |
| **சனி**- உறவினர் உதவி, முயற்சி புலிதம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- ஆடம்பர வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **திங்கள்**- தொழில் கஷ்டம், பெரியோர் உதவி. | பி.ப. 1 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **புதன்**- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, வீண் செலவு. | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- மனக்குறை நீங்கும், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- வீண் அலைச்சல், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| **திங்கள்**- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | மு.ப. 10 மணி |
| **செவ்வாய்**- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| **புதன்**- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- பெரியோர் உதவி, செய்தொழில் நன்மை. | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- மறைமுக எதிர்ப்பு, காரியக் கேடு. | பகல் 12 மணி |
| **சனி**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | மு.ப. 10 மணி |
| **புதன்**- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- இனசன பகை, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| **சனி**- அந்நியர் சகாயம், பலவித பேறு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் 11 மணி |
| **திங்கள்**- அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| **புதன்** - முயற்சி பலிதம், காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. 2 மணி |
| **சனி**- வெளியிடப் பயணம், செய்தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், மனக் கவலை. | மு.ப. 10 மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| **புதன்**- தொழில் கஷ்டம், வெளியிடப் பயணம். | மு.ப. 10 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, பண வரவு. | பகல் 11 மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. 10 மணி |
| **திங்கள்**- இனசன விரோதம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, பொருள் வரவு. | பி.ப. 3 மணி |
| **புதன்**- பயனுள்ள செயல், அந்நியர் உதவி. | மு.ப. 10 மணி |
| **வியாழன்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **சனி**- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- உறவினர் பகை, பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- மறைமுக எதிர்ப்பு, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| **சனி**- குடும்ப சுகம், மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் 11 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, பெரியோர் உதவி. | மு.ப. 10 மணி |
| **புதன்**- பயனற்ற செயல், மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- செய்தொழில் நன்மை, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| **சனி**- பெரியோர் சகாயம், பண வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, பண வரவு. | மு.ப. 10 மணி |
| **செவ்வாய்**- பலவித பேறு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, கடன் சுமை. | பகல் 11 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | மு.ப. 10 மணி |
| **வெள்ளி**- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், பணச் சிக்கல். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

## லேடீஸ் ஸ்பெஷல்

### நரைக்குத் தடை



அழகான- அடர்த்தியான கூந்தல் வேண்டும் என்று எல்லாப் பெண்களும் விரும்புகிறார்கள். ஆனால் அவர்களின் ஆசைக்கு எதிராக முடி உதிர்தல், பொடுகு, பேன் போன்ற தொல்லைகள் ஏற்படுகின்றன. மண்டை ஓட்டையும், கூந்தலையும் சுத்தமாகப் பராமரித்தாலே இந்தத் தொல்லையில் பாதிக்கு நிவாரணம் கிடைத்து விடும்.

பொடுகு முடி உதிர்தலுக்கு முக்கிய காரணமாகின்றது. அடிக்கடி தலையைச் சொறிவதால் மண்டையோட்டில் காயம் ஏற்பட்டு புண்ணாகிவிடவும் கூடும்.

எல்லாருக்கும் பொடுகு இருக்கத்தான் செய்யும் என்று நினைத்து, அதனைக் கவனிக்காமல் விட்டு விடாதீர்கள். எளிய, வீட்டு சிகிச்சை முறையிலே பொடுகைக் குறைத்துவிடலாம். உழுந்தையும், கடுகையும் சம அளவு எடுத்து தண்ணீரில் அரைத்து கூந்தலில் பூசி அரை மணி நேரம் கழித்து கழுவிவிட்டால் பொடுகு நீங்கும். கடுக்காய் தோட்டை மோரில் அரைத்து புரட்டினாலும் பொடுகு நீங்கும்.

ஒலிவ் எண்ணெயுடன் சிறிதளவு எலுமிச்சம் பழச்சாறும், தேங்காய் எண்ணெயும் சேர்த்து சூடாக்கி தலையில் தேய்த்துவிட்டு, சுடுநீரில் தோய்த்து பிழிந்த துவாயால் தலையைச் சுற்றிக் கட்டுங்கள். 15 நிமிடம் கழித்து பொடுகைப் போக்கும் ஷம்புவைப் பயன்படுத்திக் குளியுங்கள்.

வாரத்தில் ஒரு நாள் தேயிலை தண்ணீரில் தலையைக் கழுவினாலும் வாரத்தில் ஒருநாள் முட்டை வெள்ளைக் கருவைத் தலையில் தேய்த்துக் கழுவினாலும் பொடுகு நீங்கும்.

கூந்தலில் அகால நரை ஏற்பட பாரம்பரியமும் ஒரு காரணம். மனநெருக்கடி, சத்துக்குறைவு, அடிக்கடி கோபம் கொள்ளுதல் போன்றவைகளும் அகால நரைக்குக் காரணமாகின்றன.

நரை வராமல் இருக்கவும், நரை முடியின் நிறத்தைப் போக்கவும் 'ஹென்னா' என்ற சிகிச்சை முறை உள்ளது. அதை வீட்டிலே தயாரித்து பயன்படுத்தலாம்.

சிறிதளவு காயவைத்துத் தூளாக்கிய மருதோன்றி, ஒரு முட்டை, பாதி எலுமிச்சை பழத்தில் உள்ள சாறு, ஒரு தேக்கரண்டி உடனடிக் கோப்பித்தூள் ஆகியவற்றைக் கலந்து முடியில் தேய்த்து முக்கால் மணி நேரம் கழித்துக் கழுவி விடுங்கள்.

## பஸ் பயணிகள் கவனிக்கவும்!

பஸ்களில் ஏறும்போதும் இறங்கும் போதும் கவனிக்க வேண்டியவை:

* பஸ் நிலையங்களில் அல்லது நிறுத்தங்களில் நின்று மட்டுமே பஸ்களில் ஏற வேண்டும். பஸ் சிக்னலுக்காக நிற்கும் இடத்திலோ, போக்குவரத்துத் தடையால் நிற்கும் போதோ ஏற-இறங்க முயற்சி செய்ய வேண்டாம்.
* பஸ் நின்ற பின்பு பலமாகக் கம்பியைப் பிடித்துக் கொண்டு ஏற வேண்டும்.
* இருக்கை கிடைத்தால் ஒரு நிமிடம் நிதானித்து இருக்கையைப் பார்த்து- அழுக்கு இருந்தால் துடைத்து விட்டு அமருங்கள்.
* பஸ்ஸில் இருக்கும் போது அல்லது நிற்கும் போது கைகளையோ, தலையையோ வெளியே நீட்டக் கூடாது. இருக்கையில் இருப்பவர்கள் முன்னால் இருக்கும் கம்பியைப் பிடித்தபடி உட்கார வேண்டும்.
* பஸ்ஸில் இருந்து இறங்க அவசரப்பட வேண்டாம். கூட்டம் அதிகமாக இருந்தால் முன்னதாகவே எழுந்து வாசல் பக்கம் நின்று கொள்ளலாம். இருப்பினும் கண்டக்டர் பஸ்ஸை பெல் அடித்து நிறுத்திய பிறகே இறங்க வேண்டும். பஸ் முழுமையாக நின்ற பிறகே பஸ்ஸை விட்டு இறங்க வேண்டும். ஓடும் பஸ்ஸில் இருந்து இறங்குவது ஆபத்து.
* பஸ்ஸில் இருந்து இறங்கியதும் ஒரு நிமிடம் நிதானித்து இரண்டு பக்கமும் பார்த்துவிட்டு ரோட்டைக் கடக்க வேண்டும்:

**பஸ் பயணத்தின் போது கவனிக்க வேண்டிய இன்னும் சில விஷயங்கள்:**

* பஸ்ஸில் பயணம் செய்யும்போது அருகில் இருப்பவர்களால் நோய் பரவக்கூடும். ஏனென்றால் கூட்டத்தில் யாராவது நோயாளிகள் இருப்பார்கள்.
* பயணம் முடிந்ததும் குளித்த பின்புதான் உணவு உண்ண வேண்டும். பயணத்தின் போது மற்றவர்களிடமிருந்து நோய்க்கிருமிகள் உங்களுக்குத் தொற்றி விடலாம். நீங்கள் நோயாளிகளாக இருக்கும் போது பயணத்தைத் தவிர்த்து விடுங்கள்.

எஸ். சாந்தி, வெள்ளவத்தை.

## துப்பட்டா என்று உடைபோட்டா...



பெண்களின் ஆடையலங்காரம் நாளுக்கு நாள் மெருகேறிக் கொண்டே இருக்கிறது. தினசரி புத்தம் புது மொடல் உடைகளை இளம் வயதுப் பெண்கள் எதிர்பார்க்கிறார்கள்.

குர்தாவில் நிறை எம்ப்ரொய்டரி வேலை செய்தார்கள். கண்ணாடி அலங்காரத்தை உருவாக்கினார்கள். கை நீளம் குறுகியும், பெருகியும் வந்து கொண்டிருக்கின்றன.

இப்போது புதுமையான மாற்றங்கள் குர்தாவின் துப்பட்டாவில் ஏற்பட்டிருக்கின்றன.

மொத்தம் துப்பட்டா 2 மீட்டர் நீளம். இதனை பெண் கழுத்தைச் சுற்றி எப்படி வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம் என்ற நிலைமாறி, இப்போது தோளில் நேராக- ஆண்கள் துவாயைப் போட்டிருப்பது போன்று-ஃபாஷன் வந்துவிட்டது. 'பிளெய்ன்' சுரிதாருக்கு 'பிரிண்ட்' போட்ட துப்பட்டாவை நிறைய பெண்கள் ஜோடியாகப் போட்டுக் கொள்கிறார்கள்.

"சுரிதாருக்கு அழகு தருவதே துப்பாட்டாதான். அதைத் தோளில் போட்டுக் கொண்டிருந்தால் எவ்வளவு கம்பீரமாக இருக்கும் தெரியுமா?" என்று கேட்டபடி கம்பீரமாக நடந்து போகிறார்கள்!


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

### மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DF

பெயர்:.......................
முகவரி:.......................
.......................
தொழில்:.......................
கையொப்பம்:.......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-02-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 23

புவனா

ரஷ்யாவின் உலகசாதனைச் 'செஸ்' வீரர் காஸ்பரோ. அவருக்கும், பிரிட்டிஷ் செஸ் வீரர் ஒருவருக்கும் இடையே தெற்கு ஃபிரான்ஸில் போட்டி நடந்தது.

காஸ்பரோதான் வெற்றிபெறுவார் என்பது முன்கூட்டியே தெரிந்த சங்கதி. அதனால்



பிரிட்டிஷ் பிரமுகர்கள் பலரை விசேஷமாக அழைத்திருந்தும் அவர்கள் செல்லவில்லை.

ஆனால் டயானா சென்றார். காஸ்பரோவுடன் மோதி தோல்விகண்ட பிரிட்டிஷ் வீரரை டயானா பாராட்டினார்.

"மிகச் சிறப்பாக ஆடினீர்கள். நுட்பமாக காய்களை நகர்த்தினீர்கள். பிரிட்டிஷ் உங்களுக்காக பெருமிதம் கொள்கிறது!" என்றார் டயானா.

அந்த ஊட்டமான வார்த்தைகளால் உற்சாகமானார் அந்த பிரிட்டிஷ் வீரர்.

டயானாவைச் சந்தித்த காஸ்பரோவின் பிரதிநிதி, "காஸ்பரோவ் உங்களைச் சந்திக்க ஆர்வமுடன் இருக்கிறார். வருகிறீர்களா?" என்றார்.

"மன்னிக்க வேண்டும், எங்கள் நாட்டு வீரருக்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்" என்று கூறிவிட்டார் டயானா.

டயானாவின் இவ்வாறான நடவடிக்கைகள் பிரிட்டிஷ் மக்களில் பலதரப்பட்டவர்களிடமும் டயானாமீதான அபிமானத்தை அடர்த்தியாக்கின.

அரச குடும்பத்தின் ஒட்டுதல் இல்லாத உறவுகள் டயானாவை வெறுப்பூட்டிக் கொண்டிருந்தன.

அரண்மனை வாழ்க்கை புழுக்கத்தை ஏற்படுத்தியது. எத்தனை நாள்தான் மாறுதலே இல்லாத, சுவையும் இல்லாத வாழ்க்கையில் அடைபட்டுக் கிடப்பது?

### கில்பி வந்தார்

அக் கட்டத்தில்தான் கில்பியின் தொடர்பு ஏற்பட்டது. டயானாவை சிறு வயதில் இருந்தே அறிந்திருந்தவர் கில்பி. கம்பீரமான தோற்றம் கொண்டவர்.

கில்பியும் டயானாவும் அரண்மனைக்கு வெளியே அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தனர்.

தானே காரை ஓட்டிக்கொண்டு கிளம்பி விடுவார் டயானா. ஆரம்பத்தில் மகாராணியின் புருவம் உயர்ந்தது. இளவரசி தனியாக காரில் செல்வது என்றால் ஆச்சரியம்தான்.

ஆனால் டயானா மகாராணியின் விருப்பு வெறுப்புப் பற்றியெல்லாம் கவலைப்படும் கட்டத்தை தாண்டியிருந்தார்.

நல்ல மாமியாராக இருக்க முடியாத மகாராணியிடம், நான் எதற்கு நல்ல மருமகள் என்று பெயர்தேட அலையவேண்டும்? என்று நினைத்தோ என்னவோ மகாராணியாரை அலட்சியம் செய்ய ஆரம்பித்திருந்தார் டயானா.

கில்பியின் விரிந்த மார்பில் சாய்ந்து கொண்டு, தன்மேல் நட்பற்ற உலகில் இருந்து அடைக்கலம் தேட முயல்வதுபோல தேம்பித் தேம்பி அழுவார் டயானா.

ஆறுதல் முத்தங்களில் தொடங்கிய பரிமாற்றம், ஆவேச முத்தங்களாக மாறியது. கில்பி டயானாவையும், டயானா கில்பியையும் வசீகரித்துக் கொண்டனர்.

கில்பியை சந்திக்காத தினங்கள் டயானாவுக்கு இனிப்பற்ற நாட்கள். கில்பியின் முகத்தைப் பார்க்காத நாட்கள் டயானாவுக்கு புன்னகை இல்லாத நாட்கள்.

கில்பி-டயானா உறவு பத்திரிகைகளுக்கும் கசிந்துவிட்டது.

"இளவரசியுடன் அடிக்கடி காணப்படும் அந்த நபர் யார்?" என்று கேள்வி எழுப்பின. நிருபர்களைவிட்டு குடையவும் தொடங்கின.

'றக்பி' விளையாட்டில் சூரரான கில்பி உடலை திண்ணென்று வைத்திருந்தார். கட்டுமஸ்தான தேகம். வலியகரங்கள். அந்தக் கரங்களின் அணைப்பும், இதமான வருடலும் டயானாவை நரக உலகில் இருந்து வெளியே கொண்டு செல்வது போலிருந்தது.

சாள்ஸ் என்ற அன்பற்ற, ஆர்வமற்ற கணவனிடம் இருந்து பெறமுடியாத அன்பையெல்லாம் எங்காவது பெற்றாக வேண்டும் என்று துடித்தார் டயானா.

"வாழ்க்கையை அணு அணுவாக சுவைக்க கனவு கண்ட டயானாவை கடவுள் ஒரு முட்படுக்கையில் தூக்கி எறிந்துவிட்டான். அதிலிருந்து மீண்டுவர டயானாவுக்கு நாம் உதவ ஆசைப்பட்டோம்" என்று டயானாவின் தோழி ஒருத்தி கூறியிருந்தாள்.

கில்பி டயானா தொடர்பை குடைந்து கண்டுபிடித்த பத்திரிகையாளர்கள்; கில்பியும் டயானாவும் தொலைபேசியில் உரையாடியதையும் திருட்டுத்தனமாக பதிவு செய்தனர்.

டயானாவுக்கு கில்பி சூட்டியிருந்த செல்லப்பெயர்: 'ஸ்க்விட்ஜி'.

அதனால் கில்பி-டயானா உரையாடல் பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாவுக்கு 'ஸ்க்விட்ஜி டேப்' என்று பெயரிட்டனர்.

ஆனாலும் டேப்பைக் கேட்டவர்கள், "டயானாவுக்கு கில்பிமேல் அத்தனை ஒட்டுதல் இருப்பதாகத் தெரியவில்லை. கில்பிதான் உருகிப் போகிறார். ஆகவே கில்பியை ஒரு நல்ல நண்பராக டயானா நினைத்தும் பழகி



யிருக்கலாம்" என்றனர்.

அதனால் அந்த 'டேப்' பெரும் பூகம்பத்தை கிளப்பவில்லை. ஆனால் டயானா அதிர்ச்சியடைந்துவிட்டார்.

அதன்பின்னர் கில்பியுடனான தொடர்புகளைப் படிப்படியாக குறைத்து ஒதுங்கிக் கொண்டார்.

சாள்ஸுக்கு டயானா கில்பி உறவு ஆழமானது என்பது தெரியும். ஆனால் அது தொடர்பாக ஒரு வார்த்தைகூட டயானாவிடம் அவர் கேட்கவில்லை.

சில விஷயங்களை மனம் விட்டுப் பேசுவதைவிட மௌனமாக இருப்பதுதான் மகா கொடுமை.

சாள்ஸ் தன்னிடம் எதுவும் கேட்காமல் மௌனசாமியாக இருப்பது டயானாவை துன்பப்படுத்தியது.

அதேசமயம் தன் மடியில் கனம் இருந்தமையால் டயானாவிடம் கேள்வி கேட்க சாள்ஸ் துணியவில்லை.

### சாள்ஸ் பொறாமை

சாள்ஸும்-டயானாவும் பொது நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கலந்து கொள்வதை தவிர்க்க ஆரம்பித்தனர்.

ஆனால், சாள்ஸ் வந்தால் டயானாவும் வருவார் என்ற எதிர்பார்ப்பில் சாள்ஸ் கலந்து கொள்வதாக அறிவிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்கு ஏராளமானோர் செல்வர்.

சாள்ஸ் வருவதைக் கண்டதும் அவர்களது கண்கள் டயானாவைத் தேடும். சாள்ஸ் அவர்கள் தேடலைப் புரிந்து கொள்ளுவார்.

"மன்னிக்க வேண்டும், இன்று உங்கள் அபிமான நட்சத்திரம் வரவில்லை. அனுமதிச் சீட்டுக்கான பணத்தை திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள்" என்று சிரித்தபடி கூறுவார். ஆனால் உள்ளுக்குள் பொறாமை கனன்று கொண்டிருக்கும்.

சில நிகழ்ச்சிகளில் சாள்ஸின் மூக்கை உடைப்பதுபோல டயானாவும் நடந்து கொள்வார்.

தென் கொரியாவுக்கு சாள்ஸும், டயானாவும் ஒருமுறை விஜயம் செய்திருந்தனர்.

தென் கொரியாவை நோக்கி முன்னேறிய வட கொரியப் படைகளை 'இம்ஜன்' நதிக்கரையில் தடுத்து நிறுத்தி போரிட்டன தென்கொரியப் படைகள்.

என்னதான் முயன்றும் அந்த நதிக்கரையைத் தாண்டி முன்னேறுவதற்கு தென் கொரியப் படைகளால் முடியவில்லை.

அந்த வரலாற்று நிகழ்வை குறிக்கும் விதமாக இம்ஜன் நதிக்கரையில் நடந்த விழாவுக்காகவே டயானாவும் சாள்ஸும் சென்றிருந்தனர்.

நிகழ்ச்சி முடிந்து சாள்ஸும் டயானாவும் காருக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். சாள்ஸுடன் நடந்த டயானா டக்கென்று நின்றார்.

ஏதோ தகவல் கேட்பதுபோல ஒரு இராணுவ அதிகாரியிடம் பேச்சுக் கொடுத்தாள். அதிகாரியும் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

முன்னே சென்ற சாள்ஸ் காருக்கு அருகில் டயானாவின் வருகைக்காக காத்திருக்க வேண்டியதாயிற்று. சாள்ஸின் முகம் போகும் போக்கை ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டார் டயானா.

சாள்ஸுக்காக விட்டுக் கொடுக்க டயானா நினைத்த போதெல்லாம் சாள்ஸ் முரண்டு பிடித்துக் கொண்டே இருந்தார்.

கமீலாவுடன் சாள்ஸ் நெருக்கமாக நெருக்கமாக டயானா சாள்ஸைவிட்டு விலகிக் கொண்டே, இருந்தார்.

சாள்ஸை பழிவாங்கும் உணர்ச்சியும், மூக்கை உடைத்துப் பார்க்கும் ஆசையும் எழுந்ததும் அதனால்தான்.

### எ ே. வேதனை

தன் வேதனையை பின்வருமாறு மனம் திறந்து கூறியிருக்கிறார் டயானா.

> "அரசுரிமை என்ற கூண்டுக்குள் போட்டு நான் என் மகனை வளர்க்கமாட்டேன்."

"நான் போகும் இடம் எல்லாம் என்னை மக்கள் பெருவாரியாகச் சூழ்ந்து கொள்ளுகின்றனர்.

என்னைப் பார்ப்பதில், என்னுடைய வாய் உதிர்க்கும் இரண்டொரு சொற்களைக் கேட்பதில் அவர்கள் பெரு மகிழ்ச்சி அடைகின்றனர்.

நான் சிரிப்பதைப் பார்க்கும் போது அவர்கள் தங்களுடைய கவலைகளை மறந்து ஆனந்த பரவசமடைகின்றனர். நான் மிகுந்த மகிழ்ச்சியாக இருப்பதாக எண்ணியே அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

ஆனால், என் உள்ளத்தை அழுத்தும் வேதனைகளை அவர்கள் அறிய மாட்டார்கள்." என்றார் டயானா.

ஆழ்ந்த வேதனை, விரக்தி, சாள்ஸ்மீது எரிச்சல் இவற்றுக்கிடையே தன் இரண்டு பிள்ளைகள்மீதும் மிகுந்த பாசமும், கவனமும் வைத்திருந்தார் டயானா

அது பற்றியும் டயானா கொஞ்சம் மகிழ்ச்சி கொஞ்சம் சோகத்துடன் பின்வருமாறு கூறியிருந்தார்.

"அரச குடும்பத்தில் வேறு எவருக்கும் இரு ஆண்கள் பிறந்ததில்லை. எங்களுக்கு பிறந்த இருவருமே ஆண்கள். எனக்குத் தெரியும், வில்லியம் அவனுக்குரிய இடத்தை



மிக வேகமாக அடைந்து விடுவான்.

எனது பிள்ளைகளும் ஏமாற்றமடைய நான் விடப்போவதில்லை. நான் அவர்களை எப்போதும் அணைத்துக் கொண்டே இருப்பேன். அவர்கள் இருவரையும் இருபுறத்தில் அணைத்துக்கொண்டே இரவில் தூங்குவேன்.

வில்லியத்தை ஒரு சுதந்திர புருஷனாக வளர்க்கவே விரும்புகிறேன்.

எனது மாமியார் தனது மகனை அரசுரிமை என்ற கூண்டுக்குள் போட்டு வளர்த்ததைப்போல நான் என் மகனை வளர்க்கப்போவதில்லை.

அவனைச் சுற்றி என்ன நடைபெறுகிறது? என்பதை அவன் உணருகிறான். செவிலித் தாய்மாரின் வளர்ப்புப் பிள்ளையாக அவன் இல்லை," என்றார் டயானா.

அதனைக் கூறும்போது, விபத்து தன் கனவுகளை இடைநடுவே சிதைக்கும் என்பது அந்த இனிய தாய்க்கு தெரிந்திருக்கவில்லை.

(அடுத்த வாரமும் வரும்)

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**மடுல்கெல வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | திருமதி ஆர். ஜெயலட்சுமி, 11/3, மாவுஸா பஜார், மடுல்கெல. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்று மில்லா
மாக்களுக் கோர் கணமும்-
கிளியே!
வாழத் தகுதி யுண்டோ!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## அன்பின் சக்தி

ஒரு கிராமத்தின் அருகே காடு ஒன்று இருந்தது. அந்தக் காட்டின் எல்லையில் முனிவர் ஒருவர் பர்ணசாலை அமைத்து வாழ்ந்து வந்தார். அவர் தம்மை நாடி வருபவர்களின் துன்பங்களைப் போக்கி வந்தார்.

இதனால் அந்த முனிவரின் புகழ் எல்லா இடமும் பரவியது.

அதே காட்டில் பயங்கரத் திருடன் ஒருவனும் இருந்தான். அவன் காட்டுப் பாதையால் செல்பவர்களிடம் கொள்ளையடித்து, அவர்களைத் துன்புறுத்தி வந்தான். இதனால் அந்தக் கிராம மக்கள் மிகவும் பீதி அடைந்தனர்.

ஒருநாள் முனிவருக்கு கிராம மக்கள் இந்தப் பிரச்சனையைக் கூறினார்கள்.

அதற்கு முனிவர், அந்தத் திருடனைத் திருத்துவதற்குத் தான் முயற்சிப்பதாகக் கூறினார். இதைக் கேட்ட மக்கள் மிகவும் சந்தோசமாக வீடு திரும்பினர்.

இந்த விஷயம் எப்படியோ திருடனின் காதுகளுக்கு எட்டி விட்டது. இது அவனுக்குக் கடுங்கோபத்தை உண்டாக்கியது.

'என்ன என்னைத் திருத்தப் போகிறானா, பைத்தியக்காரன். முதலில் அவனைக் கொன்று போட்டு விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்' என்று முடிவெடுத்தான் திருடன்.

மறுநாள் கோபமாக முனிவரின் பர்ணசாலைக்குச் சென்றான் திருடன். அங்கே பர்ணசாலையின் எளிமையான சூழ்நிலை மனத்தை மயக்கியது. எலியும், பூனையும், பாம்பும் கீரியும் ஒற்றுமையாக அங்கே விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

அந்த நிமிடமே முனிவர் ஓரளவு சக்தியுள்ளவர்தான் என்பதை உணர்ந்தான். இருப்பினும் 'அவரைக் கொல்லாமல் விடக்கூடாது' என்று முடிவு செய்தான் திருடன்.

முனிவர் தியானத்தில் மூழ்கி இருந்தார். திருடன் கத்தியை ஓங்கிக் கொண்டு முனிவரை நோக்கி ஓடினான்.

ஓடும்போது கல் தடுக்கிவிடவே நிலை தடுமாறிக் கீழே விழுந்தான் திருடன். கீழே விழுந்தபோது அவன் கையில் இருந்த கத்தி, அவனது காலிலே காயத்தை உண்டாக்கியது. இரத்தம் குபுகுபுவெனப் பொங்கியது.

இந்தச் சத்தத்தினால் தியானத்தில் இருந்து விழித்தார் முனிவர். உடனே அவனுக்குச் சிகிச்சை செய்தார். மயக்கத்தில் இருந்து எழுந்ததும் பால், பழம் கொடுத்து அவனை உபசரித்தார்.

முனிவரின் அன்பான குணத்தைக் கண்ட திருடன், அவரின் காலைத் தொட்டு மன்னிப்புக் கேட்டான்.



அன்று முதல் அவன் திருட்டுத் தொழிலை விட்டொழித்து நல்லவனாக வாழ்ந்தான்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



**இரட்டை ஜாடிகள்:**
← பழங்கால பெரு நாட்டைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தும் இரட்டை ஜாடிகளில் ஒரு விசேஷம் உண்டு. இதன் ஒரு ஜாடியில் திரவத்தை ஊற்றும்போது இவற்றிலிருந்து இனிய நாதம் எழும்.



**அரச முத்திரை:**
← மௌண்ட் ஏதோஸ் குடியரசின் அரசாங்க முத்திரை நான்கு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு முத்திரையும் தனித்தனி அதிகாரிகளிடம் இருக்கும். நான்கு பேரும் கூடி முடிவெடுத்து முத்திரையிட்ட அரசு ஆணையே செல்லுபடியாகும்.



**பேப்பிள் ஒக்கிட்:**
இந்தச் செடி ரோஸ் நிறப் பூ பூக்கிறது. இதனுள் பெரிய தொப்பி அணிந்த குழந்தை உருவைக் காணலாம்.



**அதிசய முயல்:**
← ஹோலிங் ஹெயர் எனப்படும் முயல் இனம் ஆட்டுக்குட்டியைப் போல கத்தும். வயிற்றிலிருந்து இது எழுப்பும் ஒலி, ஒரே சமயத்தில் பல திசைகளில் இருந்து ஒலி வருவது போல தோன்றும்.

## வாரம் ஒரு நாடு

## எல்சல்வடோர்

**தலைநகர்**- சான் சல்வடோர்
**பரப்பு** - 21,393 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை** - 58 இலட்சம்
**மொழி** - ஸ்பானிஷ்
**எழுத்தறிவு** - 75%
**சமயம்** - கிறிஸ்தவம்
**நாணயம்** - கோலன்
**தனிநபர் வருமானம்** - 1040 டொலர்

**அமைவிடம்:**

மத்திய அமெரிக்க நாடு. பசிபிக் கடலில் கடற்கரைப்பரப்பைக் கொண்டமைந்துள்ளது. இதன் வடமேற்கே கௌதமாலாவும்; வடக்கிலும், கிழக்கிலும் ஹோண்டுராஸும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

ஸ்பெயினின் ஆதிக்கத்தில் இருந்த எல்சல்வடோர் 1827ம் ஆண்டு சுதந்திரமடைந்தது.



**பொருளாதாரம்:**

விவசாய நாடான எல்சல்வடோரின் முக்கிய உற்பத்திப்பொருள் கோப்பி. மீன் பிடித்தல் முக்கிய தொழில். கோப்பி ஏற்றுமதி நாட்டின் வருமானத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.02.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 233
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 231

**பரிசுக்குரியவர்:**
என். சுஹான் முஹம்மட்,
ப/தமிழ் மத்திய கல்லூரி, அப்புத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஜெயரெத்தினம் சற்சாஜினி, மட்/களுதாவளை ம.வி. களுவாஞ்சிகுடி. | சி. சுலக்ஷனா, இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. |
| உமாபதி ரவிதேவா, தமிழ் மத்திய கல்லூரி, வவுனியா. | ஆ.அஜந்தினி, புனித மரியாள் கல்லூரி, திருமலை. |
| பி. ஸ்ரீபிரதா, பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம். | செல்வி. நதீரா மஹ்மூத், மட்/கிழ்றிய்யா வித்., காத்தான்குடி-02. |
| கீத்தா தவபால், இறம்பைக்குளம் மகளிர் மகா வித். வவுனியா. | எஸ்.கேசாந்தரனி, தமிழ் மகளிர் வித்தியாலயம், பதுளை. |
| அம்பிகா செல்வநாயகம், விஹாரமகாதேவி மகளிர் வித். கண்டி. | செல்வன் எஸ். விநோத், களு/றஹ்மானிய்யா முஸ்லிம், மகா வித். வெலிப்பெண்ணை. |

## கின்னஸின் கதை



ஒரு தடவை பறவைகளைச் சுடும் போட்டி ஒன்றில் கலந்து கொண்டார் சேர்ஹியூச் பீவர் என்பவர். அந்த வேளையில், "ஐரோப்பாவிலேயே மிக வேகமாகப் பறக்கும் பறவை எது?" என்று நண்பர்களைக் கேட்டார். அதற்கான விடை யாருக்கும் தெரியவில்லை.

திடீரென அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. உலகில் மிகப் பெரியது எது? பெரும் சாதனைகளைச் செய்தவர் யார்? போன்ற அரிய விஷயங்களை எல்லாம் தொகுத்து ஒரு நூலை வெளியிட்டால் என்ன என்று சிந்தித்தார். அதன் பயனாக உருவானதுதான் 'கின்னஸ்' சாதனைப் புத்தகம்.

முதலில் அது மக்களைக் கவருமா? என்று சந்தேகம் எழுந்ததனால் முதல் அச்சாகிய பிரதிகளை இலவசமாக வெளியிட்டார் பீவர். ஆனால் அதைப் படித்தவர்கள் அது ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம் எனக் கருதினார்கள்.

எனவே அடுத்த பதிப்புக்களை விற்பனைக்கு அனுப்பினார் பீவர். அன்று ஆரம்பித்த பணி இன்று வரைத் தொடர்கிறது. இன்று உலகில் அதிகமாக விற்பனை செய்யப்படும் புத்தகங்களில் 'கின்னஸ்' சாதனைப் புத்தகமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏன் தெரியுமா?



பாடசாலைகளில் ABCD என்றுதானே சொல்லித் தருகிறார்கள். ஆனால் தட்டச்சு (ரைப் ரைட்டர்) இயந்திரத்தில் இப்படி ABCD என்ற வரிசையில் இல்லாமல் ASDFG என்று குழம்பி இருக்கிறதே என்ற சந்தேகம் உங்களுக்கு இருக்கிறதா?

தட்டச்சு இயந்திரங்களைப் புழக்கத்திற்கு விடுவதற்கு முன் ABCD என்ற வரிசையில் தான் எழுத்துக்களை அமைக்க நினைத்தார்கள். ஆனால் ஆங்கில வார்த்தைகளில் அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய எழுத்துக்களை விரல்கள் சுலபமாகத் தொடும் வகையில் அமைத்தால்தான் வேகமாக ரைப் பண்ண முடியும் என்பதால்தான் ASDFG என்ற வரிசையில் அமைத்துள்ளார்கள்.

இந்த வரிசையில் அமைந்த தட்டச்சு இயந்திரத்தை வடிவமைத்தவர் யார் தெரியுமா? ஷோல்ஸ் என்பவர்.

## விடுகதைகளும் விடைகளும்

1. கறுப்புப் பாறைக்கு வெளுத்த வேர். அது என்ன?
2. சலசலவென சத்தம் மட்டும் போடுவான், பேசமாட்டான். அவன் யார்?
3. கால் படாத இடத்தில், கரு இல்லாத முட்டை. அது என்ன?
4. அடர்ந்த காட்டின் நடுவே ஒரு வழிப் பாதை. அது என்ன?
5. வரிக்குதிரை ஓடியது வாய்ப்பாட்டு பாடியது. அது என்ன?
6. மட்டையுண்டு கட்டையில்லை, பூவுண்டு மணமில்லை. அது என்ன?
7. ஒரு சாண் குச்சிக்குள் ஒளிந்திருக்கிறான் கறுப்பு மனிதன். அவன் யார்?
8. நாலு கால் உண்டு, நடுவிலே உடல் இல்லை. அது என்ன?
9. ஓடையிலே மீன்பிடிக்கும் ஒற்றைக்கால் நாராயணன். அவன் யார்?
10. கிணற்றில் விழுந்த வெள்ளித்தட்டை வெளியே எடுக்க முடியவில்லை. அது என்ன?

**விடைகள்**

1. யானைத் தந்தம் 2. அருவி
3. காளான் 4. தலைவகிடு
5. இசைத்தட்டு 6. வாழை 7. பென்சில்
8. கட்டில் 9. கொக்கு 10. நிலா

தொகுப்பு: ஏ. அகல்யா.

## அல்பகா



தென் அமெரிக்காக் கண்டத்தில் உள்ள பொலிவியா நாட்டிலும் பெரு நாட்டிலும் காணப்படும் மிருகம் அல்பகா. இந்த மிருகம் ஒட்டக இனத்தைச் சேர்ந்தது. ஆனால் ஒட்டகத்தை விட உயரத்தில் மிகவும் குள்ளமாக இருக்கும். ஒட்டகம் போல் முதுகில் திமிலும் கிடையாது. இதன் உரோமத்தில் இருந்து கம்பளி தயாரிக்கப்படுகிறது.

## அஸ்ட்ரநட்

விண்வெளியில் ஆராய்ச்சி செய்பவர் அல்லது ரொக்கெட்டில் பயணம் செய்பவர் 'அஸ்ட்ரநட்' (விண்வெளிவீரர்) என அழைக்கப்படுகின்றனர்.




'அஸ்ட்ரநட்' என்பது கிரேக்கச் சொல்லாகும். இதன் பொருள் 'நட்சத்திரங்களுக்கு மத்தியில் பயணம் செய்யக் கூடியவர்' என்பதாகும்.

ரஷ்யாவில் இவர்கள் 'கஸ்மாநட்' என அழைக்கப்படுகின்றனர்.

## புதிய தொடர் 11

**எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி 'சஸ்பென்ஸ்' கலந்து எழுதிய விறு விறு நாவல்.**




# இன்னொரு முறை

"ஏங்க இந்நேரத்துல?" மனைவி கேட்கும்போது... நின்றார்.

"மானங்கெட்ட பசங்க. குடித்தனம் பண்ற பொம்பளையை அசிங்கம் பண்றாங்க."

கார் கிளம்பிற்று.

ஹிந்திப்பாட்டு. நாதஸ்வரம். பி.பி.எஸ். ஒரு முஸ்லிம் வீட்டுக் கல்யாணத்தில் பேண்ட்வாத்தியம். நூறு கடைகளுக்கு இரண்டு கடைகள்தான் திறந்திருந்தன. ஒரு குல்ஃபி ஐஸ் வண்டியில் டேப் ரெக்கார்டர் போயிற்று. செல்வா வண்டியை மடக்கினான். விசாரித்தான். அக்னி நட்சத்திரம் கேஸட்டே இல்லை. "இனிமேல் ஓடுகிற வண்டியில் டேப் போட்டால் எலும்பு முறித்து விடுவேன்!" என்று எச்சரித்து அனுப்பினான். 'சரியாய் தேடுகிறோமோ? ஒற்றை ஆளாய் நகரில் பதினைந்து நிமிடம் முன்பு ஓடிய பாட்டு வைத்து ஆள் தேடுவது சரியா? புத்தி சாலித்தனமா?'

**நா**ற்பது நிமிடங்கள் கழித்து பப்ளிக் பூத்தில் அலுப்புடன் கந்தசாமி எண்கள் சுழற்ற, எங்கேஜ்ட் டோன் வந்தது. காத்திருந்து மறுபடி சுழற்ற, மணி அடித்தது.

"செல்வராஜ் ஸ்பீக்கிங்."

"ஐயா, வணக்கம். நான் பெரியவரு செகரட்டரி பேசறேன். உங்களை உடனே வால் டாக்ஸ் ரோடு வரச் சொன்னாங்க."

"என்ன?"

"தெரியலை. உடனே வரச் சொன்னாங்க."

கார் திரும்பி சென்ட்ரல் ஸ்டேஷன் பாதை நோக்கிப் போயிற்று. பாலம் ஏறி வளைந்து வால்டாக்ஸ் ரோடு திரும்ப ஜெனரல் ஆஸ்பத்திரி.

எதிரே சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கம் கந்தசாமியின் கார் நின்றிருந்தது. பின்னே போய் நிறுத்தினான். இறங்கினான்.

"செல்வராஜ், இந்த டீக்கடைல அந்தப்பாட்டு கொஞ்சம் முன்னாடி போட்டாங்களாம்."

"யார் சொன்னது?"

"என் ஆள். என் லாரி எட்டு ஓடுதே. இங்க இப்பதான் நிறுத்தினானாம். என்ன செய்யணும்னான்?"

ஒரு லுங்கி ஆள் அருகே ஓடி வந்தான்.

"உட்கார்ந்து கேட்டேங்க."

"ஃபோன் எங்க இருக்கு?"

"அந்தப் ஃபார்மஸில இருக்கு."

"தாடிக்காரன் யாராவது ஃபோன் பண்ணாங்களா கேளு."

கேட்டான்.

"ரெண்டுபேர் ஃபோன் பண்ணாங்க. வந்து டீ சாப்பிட்டாங்க."

"எங்க இப்போ?"

"போயிட்டாங்களே."

"எந்தப் பக்கம்?"

"தெரியலையே."

'வால்டாக்ஸ் ரோடில் நிறைய ஓட்டல்கள் உண்டு. சந்துகளில் எல்லாம் லாட்ஜுகள் உண்டு. எதைத் தேட?'

"செல்வா, சுத்தி புண்ணியமில்லை. உள்ள உட்காரு. இந்த இடம்னு உள்ள பட்சி சொல்லுது. மறுபடி ஃபோன் பண்ண வரலாம். உட்காரு. டேய்! மோட்டார் சைக்கிள் வச்சிருக்கிறவன் யாரு? ரெண்டு பேர் ரோடு முழுக்க சுத்திக்கிட்டிருங்க. தாடிக்காரன், சந்தேகப்படற மாதிரி இருந்தா வந்து சொல்லுங்க."

மோட்டார் சைக்கிள் இரண்டு மேலும் கீழும் அலைந்து கொண்டிருந்தன.

"அப்பா, என்ன இங்கே தகராறா?" மாருதியிலிருந்து அவர் பையன் இறங்கினான். செல்வராஜைக் கண்டதும் மிரண்டான்.

"உன்னைத்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன். வா. உள்ளே வா. இவரு வூடு தெரியுமில்ல?"

"தெரியும்."

"நம்ம வூட்டுக்குப்போய் உங்க அம்மாவையும் தங்கச்சியையும் எழுப்பு. இவரு வூட்டுக்குக் கூட்டிக்கிட்டுப்போ. இவர் சம்சாரத்தை இங்க கூட்டிக்கிட்டு வா. செல்வராஜ், ஒரு லெட்டர் கொடு."

'அமுதா உடனே வா' என்று எழுதினான்.

"எதுக்கு உங்க வீட்ல சிரமம்?"

"இவனா போய் கூப்பிட்டா நல்லா இருக்காதுல்ல. அதான் நீ போய் அம்மாவோட இவங்க வூட்டம்மாவையும் அழைச்சிட்டு வா. செல்வராஜ் நீ போய் வீட்டுக்கு ஃபோன் பண்ணு. சென்ட்ரல் உள்ள டெலிஃபோன் இருக்கும்."

செல்வா அமுதாவுடன் டெலிஃபோனில் தொடர்பு கொண்டான்.

அமுதா தூங்கி வழியும் பையனுடன் மாருதி காரில் வால்டாக்ஸ் ரோடு வந்தாள்.

"தங்கச்சிய எழுப்ப முடியலைப்பா. அம்மாதான் வந்திருக்காங்க." தடித்த மூதாட்டி மெல்ல மாருதி விட்டு இறங்கி அவர் அருகே வந்தாள்.

"இவர் வூட்டு பொம்பளைய மிரட்டறாங்க. ஆள் புழங்கற இடம் மாட்டிடுச்சு. ஆள் அடையாளம் காட்டணுமில்ல. அதான். உட்கார்!"

பையன் அம்பாஸிடரில் தூங்க, கிழவி பெரியவரின் காண்டஸாவில் தூங்கினாள். பெரியவர் கல்லாய் உட்கார்ந்திருந்தார். அமுதாவும் செல்வாவும் அம்பாஸிடரில் முன் சீட்டில் அமர்ந்திருந்தார்கள். இது பலனளிக்குமா? வெட்டி வேலையா? விடியும் நேரம் நாலு மணி. பால் வண்டிகள் தொடர் பயணமாக வந்தன.

டீக்கடையில் மறுபடி பாட்டு போட்டார்கள்.

"ராஜா ராஜாதி ராஜன் இந்த ராஜா."

இசை எகிறி குதித்தது. ஐந்து மணிக்கு டீக்கடையில் ஆட்கள் அதிகமானார்கள். சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து முழு கம்பளி போர்த்தி தலை மூடி இரண்டு ஆட்கள் டீ குடிக்க வந்தார்கள்.

டீ கடையிலிருந்து ஆள் பெரியவர் அருகே வந்தான்.

"இரண்டு பேரும் தாடிக்காரங்க சார்."

"அமுதா பார்."

"தெரியலீங்க."

"நல்லா பார்." வாய் கொப்பளிக்க தண்ணீர் டம்ளருடன் ஒருவன் திரும்ப, அமுதா சிலிர்த்தாள்.

"கிட்ட போய் பார்க்கலாமா?"

பெரியவர் காண்டஸாவிலிருந்து இறங்கி அம்பாஸிடருக்கு வந்தார்.


"போய் பாரும்மா. நீ மட்டும் போ. டேய்! எல்லாரையும் பிரிச்சு நிக்க வை. ஓடினா மடக்கச் சொல்லு. கொஞ்சம் இரும்மா. ஆள் தயாராகட்டும்."

தயாரானார்கள். அவர் ஆட்கள் எல்லோரும் துண்டை கழுத்தில் பிடரியில் போட்டுக் கொண்டார்கள். தயார் என்று அர்த்தம்.

"போம்மா. போய் ஒரு கப் டீ கேளு. தலைய போத்திக்க. கூச்சல் போடாதே. நிதானமா இரு. பதற்றப்படாத!"

அமுதா தெரு கடந்தாள். தலையைப் போர்த்திக் கொண்டாள். 'ஒரு கப் டீ கொடுங்க' என்று கேட்டாள். அவர்கள் தான். திரும்பி அம்பாஸிடர் கார் பார்த்தாள். ஆமென்று லேசாய் தலையாட்டினாள். தலையாட்டும் அமுதாவை இருவரும் பார்த்தார்கள். டீ டம்ளரைக் கீழே போட்டு சென்ட்ரல் ஸ்டேஷன் நோக்கி இருவரும் ஓட...

செல்வா பேயாய் ஓடினான். முதலில் ஓடினவன் கால் இடறி இரண்டாமவன் முகத்தில் குத்தினான். புரண்டு நிமிர்வதற்குள் பெரியவர் ஆட்கள் அழுத்திக் கொள்ள, பெரியவர் அசையாது நின்றார். கிழவியை எழுப்பி அம்பாஸிடருக்கு அனுப்பினார். இரண்டாவது ஆளைக் கை காட்டினார். அவனை காண்டஸாவுக்கு கூட்டி வந்தார்கள். பின் ஸீட்டுக்குக் கீழே போட்டு உள்ளே நாலு ஆட்கள் உட்கார்ந்து காலில் அழுத்திக் கொண்டார்கள்.



எழுத்துச் சித்தர் பாலகுமாரன்

முதல் ஆளை செல்வா சுவரோடு அழுத்தினான். உடம்பு முழுவதும் தடவினான்.

"எங்க இருக்கிற சொல்!" மறுபடி அழுத்தினான்.

கூட்டம் சேர, பெரியவர் ஆட்கள் விரட்டினார்கள். "சொல். எங்க தங்கியிருக்கிறாய்?" மறுபடி அடித்தான். சென்ட்ரலுக்குள் தள்ளிக் கொண்டு போனான்.

"சார், இங்க ரிடையரிங் ரூம்ல இருக்காங்க நான் பார்த்தேன்." ஆர்.பி.எஃப் பொலிஸ்காரன் செல்வாவை மேலே கூட்டிக் கொண்டு போனான். பொலிஸ்காரன் அடையாளம் காட்ட, பூட்டிய கதவு எட்டி உதைத்து திறந்தான்.

"சார் நீங்க யாரு?"

"ஸி.பி.ஐ. சுப்பிரன்ட்டெண்ட் ஆஃப் பொலிஸ்."

ஆர்.பி.எஃப் சல்யூட் அடித்தது.

"ஸ்டேஷனுக்கு தகவல் சொல்லட்டுமா?"

"வேணாம். நிறைய ஆள் இருக்கு. பதுங்கிடும். சும்மா இரு." ஆர்.பி.எஃப்.பும் பெரியவர் ஆளும் அவனை அழுத்திக் கொள்ள, உருவிய பிஸ்டலுடன் உள்ளே போனான்.

இரண்டு லெதர் சூட்கேஸ். குப்புற தரையில் அடித்து உடைக்க மூடி திறந்து, கடா, கத்தி, டர்பன் துணி, சீப்பு, தாயத்து, துணிமணிகள். கடைசியில்-கடைசியில் நெகடிவ் ரோலாக விழுந்தது. பிரித்துப் பார்க்க பதினேழு படங்கள், மற்றது வெள்ளையான போட்டோ பிரிண்ட் பேப்பர் ஸல்யூஷன். டார்க் ரூம் தேடி வாடகைக்கு எடுத்து இவர்களே கழுவி பிரிண்ட் போட்டிருக்கிறார்கள். சென்னையில். காசு கொடுத்தால் டாக் ரூம் கிடைக்கும்.

பெரிய காபினட் ஃபோட்டோ ஆறு உறையிலிடப்பட்டிருந்தது. பாதி வெளியே எடுக்க, நிர்வாணமான அமுதா. உள்ளே சொருகினான். நெகட்டிவை பையில் போட்டுக் கொண்டான்.

"இப்போது விலை பேசு. ஏன் இது?"

"நான் புரட்சி இயக்கம் சேர்ந்தவன். உன்னை மடக்க பஞ்சாபிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறோம்."

"உனக்கும் அந்தக் கோச்சுக்கும் என்ன தொடர்பு?"

"ஏதுமில்லை. உன் மனைவியை உன் வீட்டிலேயே மடக்க தீர்மானித்தோம். ஹொட்டல் அறைக்குள் நுழைந்தபோது பயன்படுத்திக் கொண்டோம்."

செல்வா திரும்பி அடுத்த பெட்டி உதைத்தான். துணிகள். குரு நானக் படம். படுக்கை பிரித்து சேர்த்தான். இரண்டு கைதுப்பாக்கிகள் கிடந்தன. அறைகளில் அரை பாட்டில்களாக பிராந்தி பாட்டில்கள் இரண்டு இருந்தன. ப்ளாஸ்டிக் கவர் இருந்தது. கை குட்டை உதவியால் இரண்டு துப்பாக்கிகளையும் எடுத்து ப்ளாஸ்டிக் கவரில் போட்டான்.

ஆர்.பி.எஃப். ஆளை நேரே போய் பொலிஸ் ஸ்டேஷனில் தகவல் தரச் சொன்னான். பெரியவரின் ஆள் ஒருவன் உள்ளே வர அடுத்தவனை அழைத்து வரச் சொன்னான். ப்ளாஸ்டிக் கவர் எடுத்துக் கொண்டான். இந்த ஆளை நெட்டித் தள்ளி கீழே வந்தான். முதல் ட்ரெயின் மெல்ல உள்ளே வந்தது. கூட்டம் தரையிறங்கிற்று.

"ஓடுங்கள், ஓடி உயிர் பிழைத்துக் கொள்ளுங்கள்!" இருவரையும் விடுவித்தான்.

திடுக்கிட்டார்கள். மெல்ல பின் வாங்கினார்கள். எதிரே வரும் ட்ரெயின் கூட்டம் நோக்கி ஓடினார்கள்.

செல்வா துப்பாக்கி உயர்த்தினான். ஒருவன் பின் தலைக்கு குறி வைத்தான். ட்ரிகர் அழுத்தினான். பதினைந்தடி தூரத்தில் உள்ளவன் பின் தலை மீது நச்சென்று ரவை தைத்தது. இரண்டாவது ஆள் ஓடியபடி பயத்தில் திரும்ப அவன் நெற்றிக்குக் குறி வைத்து மறுபடி டிரிகர் அழுத்தினான். இடது கண்ணை துளைத்துக் கொண்டு ரவை பின் மண்டை வழியே வந்தது. ரயிலில் இறங்கிய கூட்டம் வெடிச்சத்தம் கேட்டுப் பயந்து அலறி அலை மோதிற்று. ப்ளாஸ்டிக் பையிலிருந்து துப்பாக்கி எடுத்து அவர்கள் அருகே போட்டான்.

பெரியவர் ஆட்களை 'போய் விடுங்கள்' என்று சைகை செய்தார். ஆர்.பி.எஃப். தடதடக்க உள்ளே நுழைந்தது. பெரியவர் ஆட்கள் காணாமல் போனார்கள்.

"ஏன் அவர்களை சுட்டுக் கொன்றாய் செல்வராஜ், விளக்கம் சொல்!"

"ஐயா, காலையில் என் நண்பர் ஒருவரை எதிர்பார்த்து சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போன நான் சந்தேகப்படும்படி நடமாடிய இருவரைக் காண நேர்ந்தது. பொது மக்கள் உதவியுடன் மடக்கி விசாரிக்க, அவர்கள் தப்பிக்க முயற்சி செய்தார்கள். துப்பாக்கி காட்டினார்கள். பயணிகளை பயமுறுத்தும் விதத்தில் கொடிய ஆயுதங்களோடு ஓடிய அவர்கள் பொது ஜனங்களுக்கு இடையூறு செய்யு முன் சுட நேர்ந்தது. ஆர்.பி.எஃப் உதவிக்கு வர தாமதமானதால் இந்நிலைமை ஏற்பட்டது."

மனசுக்குள் விசாரணை டைப் செய்யப்பட்டது. ஆர்.பி.எஃப் அதிகாரியிடம் பிணங்கள், அவர்களுடைய பொருட்கள் ஒப்படைத்து விட்டு காருக்குத் திரும்பினான்.

பெரியவர் ஆட்கள் கண்ணில் படவில்லை.

பையன் டீ குடித்துக் கொண்டிருந்தான். அமுதா காரிலிருந்து தலை நீட்டினாள். உள்ளே பெரியவர் மட்டும் தலையில் துண்டு கட்டி உட்கார்ந்திருந்தார்.

"சுட்டுட்டீங்களா?"

"ம்ம்."

"ஃபோட்டோ நெகடிவ்?"

"எடுத்துட்டேன்."

"பெரியவர் பார்த்தாரா.?"

"எது?"

"ஃபோட்டோ."

"என்ன போட்டோ தம்பி?" பெரியவர் விழி விரித்து செல்வாவைப் பார்த்தார். கண்களால் எச்சரித்தார்.

"ஒன்னுமில்லீங்க."

"மருமக ஏதோ ஃபோட்டோன்னுதே."

"நம்ம மெட்ராஸ் ஏரியல் வியூங்க."

**(தொடர்ந்து வரும்)**

---

**புதிய பகுதி**

# உற்சாக மாத்திரை

**இயக்குநர் கே. பாக்கியராஜ்**

**சு**தந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது நிகழ்ந்த ஒரு சம்பவம். அப்போது ஹிட்லர் உயிரோடு இருந்தார். இந்தியாவில் நேத்தாஜி போன்ற தலைவர்களும் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.


அந்தக் காலக்கட்டத்தில் ஹிட்லர் எழுதிய ஒரு புத்தகம் உலகளவில் சர்ச்சைக்குள்ளாகியது. ஹிட்லர் தன் புத்தகத்தில் 'இந்தியர்கள் கோழைகள்' என்றொரு வார்த்தையை தன் புத்தகத்தில் சேர்த்திருந்தார்.

இது அன்றைய பரபரப்பான ஒரு சூழ்நிலையில், சில முக்கிய தேச பக்தர்கள் மனதில் ஒரு வேகத்தை உண்டாக்கியது. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் நேத்தாஜி. அவர் ஹிட்லரை சந்திக்க வாய்ப்புக் கேட்டு, உடனடியாக ஜெர்மனிக்குப் போனார். அங்கே ஹிட்லரை சந்தித்தார்.

நேத்தாஜியைப் பற்றி நன்கு தெரிந்திருந்த ஹிட்லர், அவர் ஒரு வேளை இந்தியாவின் சுதந்திரத்திற்காக தன்னுடைய இராணுவ உதவியைத்தான் கேட்டு வந்திருப்பார் என்ற உணர்வில் சிறிது நேரம் அந்தக் கோணத்திலேயே பேசிக் கொண்டிருந்துவிட்டு,

"எதற்காக இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள்? உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?" என்று விசாரித்தார்.

"உங்கள் புத்தகத்தில் இந்தியர்களைப் பற்றி எழுதியிருந்த வார்த்தைகளை நீங்கள் மாற்றியமைக்க வேண்டும்." என்றார் நேத்தாஜி. ஹிட்லர் திடுக்கிட்டார். அப்படி ஒரு வார்த்தையை அவர் நேத்தாஜியிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.



"நான் தவறாக எழுதவில்லையே! இந்தியர்களுடைய மனப்பான்மை புரிந்ததால்தான் நான் எழுதினேன்."

"இந்தியர்கள் கோழைகள் என்று எப்படி முடிவுக்கு வந்தீர்கள்?" என்று கேட்டார் நேத்தாஜி.

"இங்கிலீஷ்காரர்கள் இரண்டாயிரம் பேர்... ஆனால், அவர்கள் நாற்பது கோடி இந்தியர்களை அடக்கி ஆள்கிறார்கள். இந்தியர்கள் கோழையாக இருப்பதால்தானே அது சாத்தியமாயிற்று..?" என்றார் ஹிட்லர்.

(அந்தக் காலத்தில் இந்தியாவின் ஜனத்தொகை நாற்பது கோடிதான்)

நேத்தாஜி நிதானமாக கூறினார். "உங்கள் கணிப்பு தவறு. இரண்டாயிரம் ஆங்கிலேயர் வெறுமனே வந்து இந்தியர்களை அடக்கி ஆளவில்லை. அவர்கள் நவீன ஆயுதங்களை எடுத்து வந்து அதன் பலத்தோடு அமைதியான எங்கள் மக்களை மிரட்டி ஜெயித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆயுதங்கள்தான் இந்தியர்களை கட்டிப் போட்டிருக்கிறதே தவிர, கோழைத்தனமல்ல.. இந்த எதார்த்த உண்மையை புரிந்து கொள்ளாமல் நீங்கள் எங்களை விமர்சித்திருக்கக்கூடாது." என்றார் நேதாஜி.

ஹிட்லர் சிந்தித்தார். அவருக்கு நேத்தாஜியின் வாதத்தில் உள்ள நியாயம் புரிந்தது. ஏனென்றால், மிகச் சிறிய நாடான ஜெர்மனியை வைத்துக் கொண்டு உலகத்தின் பெருவாரியான நேசநாடுகளையே மிரட்டிக்கொண்டிருந்தவர் ஹிட்லர். அதற்கு அவர்களுடைய ஆயுத பலம்தான் காரணம். கூடவே மன உறுதியென்ற மகத்தான ஆயுதம். அந்த மன உறுதிக்கு அடிப்படையாக இருந்தது ஆயுத பலம்தான்.

நேத்தாஜி பார்த்தபோது, 'இந்தியர்களை கோழை என்றுதான் சொல்வது தவறென்றே ஹிட்லருக்குப் புரிந்தது. ஆயுதம் இல்லாமலேயே இந்த மனிதர் உலகமே அஞ்சிக் கொண்டிருக்கும் சர்வாதிகாரியான தன்னை சந்திக்க வந்து, துணிச்சலாக தன்னை எதிர்த்துப் பேசுகிறாரே!' என்று அவருக்குத் தோன்றியது. உடனே நேத்தாஜியிடம் கைகுலுக்கிவிட்டு, "உடனடியாக அந்த வரிகளை நீக்கிவிடுகிறேன்," என்றார்.

ஆயுத பலமென்பது ஒரு தேசத்தை பாதுகாப்பதற்கு பீரங்கிகளாகவும், அணுகுண்டுகளாகவும் இருக்கலாம். ஆனால், ஒரு தனி மனிதனையோ, ஒரு சமூகத்தையோ காப்பதற்கு அந்த ஆயுதம் பல்வேறு உருவம் கொண்டதாக இருக்கும்.

அது ஆரோக்கியமான மனபலமாக இருக்கலாம். அறிவு பலமாக இருக்கலாம். கல்வி பலமாக இருக்கலாம். மனதில் உறுதியான நம்பிக்கை பலமாக இருக்கலாம். தீமையைக் கண்டு மோதி அகற்றிவிடும் நியாய சிந்தனையாகவும் இருக்கலாம்.

இப்படி ஏதோ ஒன்று நமக்குள் அடிப்படை பலமாக இருந்தால், எதிரியை மிகச்சுலபமாக வெல்ல முடியும்.

சமுதாயத்தில் இந்த அடிப்படை ஆயுதம் என்ற பலமில்லாதவர்கள் எவரும் எதையும் சாதித்ததாக சரித்திரம் இல்லை. ■




**18**

## பட்டுக்கோட்டை பிரபாகர்

"என்ன யோசனை? சொல்லுங்கள்?" என்றாள் துர்க்கா ஆர்வமாக.

ஈஸ்வர் தன் வெற்றிலைப் பெட்டியிலிருந்து ஒரு பீடா எடுத்துப் போட்டுக்கொண்டு, கண்களை மூடி, வாயையும் மனதையும் கசக்கிக்கொண்டிருந்தார்.

பொறுமையில்லாத துர்க்கா, "நீங்க என்ன யோசனை செய்தாலும் சரி. அந்த சந்திரசேகர் நம்ம மதுமிதாவைக் கல்யாணம் பண்ணிக்கக்கூடாது. வெறுத்து ஒதுக்கணும். இவ அவமானப்பட்டு நிக்கணும். அம்மாதான் கதின்னு என்கிட்ட சரண்டர் ஆகணும்!" என்றாள்.

ஈஸ்வர் பீடா தூளை விழுங்கிவிட்டு சக்கையை வாஷ் பேசினில் துப்பி, மேல்



துண்டால் வாயைத் துடைத்தபடி வந்தார்.

"துர்க்கா என் நோக்கமும் அதேதான். நம்ம பொண்ணு சைடுல நயமா, இதமா பேசி இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியாது. வேர்லயே ஆசிட் ஊத்தற மாதிரி மாப்பிள்ளை மனசையே கலைச்சிட்டமுன்னா, அப்புறம் கல்யாணம் எப்படி நடக்கும்?"

"அந்தப் பையனை இவ மயக்கி வெச்சிருப்பாளே. பொதுவாவே நடிகைன்னா லட்சம் பேர் ஏங்கிப் போயிடறாங்க. இவ கல்யாணமும் செய்துக்கறேன்னு சொல்றப்ப ரொம்ப அடிமை மாதிரில்ல கெடப்பான். அவன் மனசை என்ன சொல்லிக் கலைப்பீங்க?"

"அவன் கிட்ட நேரடியா மூவ் பண்ணக் கூடாது துர்க்கா."

"வேற எப்படி?"

"ஒரு அட்டகாசமான பிளான் வெச்சிருக்கேன் துர்க்கா."

"என்ன?"

"அதை ஒர்க்-அவுட் பண்றதுக்குக் கொஞ்சம் செலவாகும்."

"எவ்வளவாகும்?"

"நாப்பது, அம்பது ஆகலாம்"

"பிளான் என்னன்னு சொல்லுங்க."

தன் மனதில் இருந்த திட்டத்தை பதினைந்து நிமிடம் பொறுமையாக விவரித்து முடித்தார் ஈஸ்வர்.

"நிஜமாவே நல்ல பிளான்தான். ஆனா..." என்றாள் துர்க்கா.

"ஆனா?"

"இதிலே இன்னொருத்தனை நம்ப வேண்டியிருக்கே..."

"வேற வழியில்லையே..."

"அந்தாள் விசுவாசமானவனா இருக்கணும்."

"காசு கொடுத்தா விசுவாசம் காட்டுவான் யாரும்."

"கடைசி வரைக்கும் சாதிப்பானா?"

"தைரியமான ஆளைத்தானே பிடிப்பேன் நான்."

"பொலிஸ்ல மதுமிதா கம்ப்ளைண்ட் கொடுத்தான்னா?"

"கொடுக்கட்டுமே என்ன ஆகும்?"

"பொலிஸ் நாலு போடு போட்டு விசாரிச்சா, பயந்து போய் இந்த மாதிரி துர்க்காவும், ஈஸ்வரும்தான் இப்படி நடிக்கச் சொன்னாங்கன்னு சொல்லிட்டா?"

"அந்தளவுக்கு விட்டுடுவமா? பொலிஸ் இதில் தலையிடற மாதரித் தெரிஞ்சா அவனைக் கப்சிப்புன்னு தலைமறைவாகச் சொல்லிடலாம். ஒரு குளத்துல கல் வீசினா என்னாகும்? அலை பரவும். நமக்கு வேண்டியது அந்த அலைதான். அதை உருவாக்கிட்டு அடியில காணாமற் போற கல்லைப்பத்திக் கவலைப்படத் தேவையில்லை."

"சரி, யாரைப் பயன்படுத்தப் போறீங்க இதில?"

"நம்மகிட்ட படத்தில நடிக்க சான்ஸ் கேட்டு ரொம்ப நாளா ஒரு தெலுங்குப் பையன் வந்திட்டிருக்கானே, கதிரவன்னு. அவனைத்தான் யூஸ் பண்ணப்போறேன்."

"சரி. பண்ணிடுங்க. லேட் பண்ணாதீங்க. மதுமிதா ஆஸ்பத்திரில இருக்கறப்பவே இந்தக் காதலை உடைச்சிடணும்."

"நம்ம புரொடக்ஷன் மேனேஜர் செல்லப்பாகிட்ட கதிரவனோட அட்ரஸ் வாங்கி வெச்சிட்டேன். இப்ப அவனைத்தான் பார்க்கப் போறேன். விபரமா பேசிடறேன். அட்வான்சா இருபதாயிரம் தூக்கிப் போட்டா அசந்துடுவான் அவன்," என்றார் ஈஸ்வர்.

"தர்றேன்!"

இடுப்பில் செருகின வெள்ளி சாவிக்கொத்துடன் சென்று பீரோ திறந்து இருபதாயிரத்துடன் வந்தாள் துர்க்கா.

ஜிப்பா பாக்கெட்டில் போட்டுக்கொண்டு கார்ச்சாவியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார் ஈஸ்வர்.

● ● ●

"உட்காருங்க, சாரி சார்." என்றான் சந்திரசேகர் சுழல் நாற்காலியை வலது பக்கமாகத் திருப்பிக் கொண்டு.

"சொல்லுங்க தம்பி." என்றார் அவர் அமர்ந்தபடி.

"எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணும்."

"என்ன செய்யணும்?"

"தாலி வாங்கிறதுக்கு என்னோட கூட வரணும். பெரியவங்க உங்க ஆசீர்வாதம் என் கல்யாணத்தில கண்டிப்பா வேணும்."

சாரி அமைதியாகத் தன் பேனாவைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்தார்.

"நீங்க தீர்மானத்திலேர்ந்து மாறவே இல்லையா தம்பி?"

"இல்லை சார். இன்னொரு விஷயத்துக்கு இன்னும்கூட நீங்க ஆச்சரியப்படுவீங்க. மதுமிதா ஒரு சின்ன கார் விபத்துல சிக்கி இப்ப ஆஸ்பத்திரியில இருக்கா. அது தெரியுமா?"

"பேப்பர்ல நியூஸ் படிச்சேன்."

"அந்த ஆஸ்பத்திரில அவளோட ஸ்பெஷல் வார்டுல வெச்சிதான் இந்தக் கல்யாணம் நடக்கப்போகுது. அய்யர் கிடையாது. அக்னி கிடையாது. ரெண்டு ரெண்டு பேரை சாட்சியா வெச்சிக்கிட்டு நான் அவளுக்குத் தாலிகட்டப்போறேன்."

"கல்யாணங்கிறது ரொம்ப விளையாட்டாப் போச்சா தம்பி?"

"கேளுங்க. போட்டோ எடுத்துடறோம். வீடியோ பண்ணிடறோம். ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்ல கல்யாணத்தைப் பதிவு பண்ணிடறோம். அவ ஹாஸ்பிடல்லேர்ந்து டிஸ்சார்ஜ் ஆனதும் பிரஸ்மீட் வெச்சி அறிவிப்பு கொடுத்து மறுவாரம் கிராண்டா ஒரு ரிசப்ஷன் நடத்திடப்போறோம்."

"எதுவும் நல்லால்லை."

"என்ன நல்லால்லை?"

"ஒரு நடிகையைக் கல்யாணம் பண்ணிக்கிறதே முதல்ல எனக்குப் பிடிக்கலை."

"நான் நடிகையைக் கல்யாணம் பண்ணிக்கலை சார். மதுமிதாங்கிற பொண்ணை. அவளுக்கு நடிப்பு தொழிலா இருக்கு. கல்யாணத்துக்கப்புறம் அவ நடிக்கப் போறதுமில்லை."

"சரி. இது உங்க பர்சனல் விஷயம். அப்படியே தீர்மானிச்சாலும் அதை எதுக்கு ஆஸ்பத்திரில ரகசியமா நடத்தணும்?"

"அவ சைடுல எதிர்ப்பு இருக்கு. அவளோட அம்மா இந்தக் கல்யாணத்தை ஒத்துக்க மாட்டாங்க."

"ஏன்?"

"அவங்களுக்கு பணம் மேல அவ்வளவு வெறி. சொந்தப்படம் எடுத்திட்டிருக்காங்க. ஏகப்பட்ட எதிர்காலத் திட்டங்கள் வெச்சிருக்காங்க. அதுக்கெல்லாம் மதுமிதா தொடர்ந்து நடிச்சி சம்பாரிச்சி கொட்டிக்கிட்டே இருந்தாகணும்."

"ஒரு அம்மாவுக்கு தன்பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஆசை இருக்காதா?"

"சில அம்மாக்களுக்கு இருக்காது. இந்த அம்மாவுக்கு இல்லை. அப்புறம் எங்க கல்யாணத்துக்கு ரெண்டே பேர் சாட்சின்னு சொன்னேனே, அந்த ரெண்டு பேர்ல ஒண்ணு நீங்க. இன்னொருத்தர் நடிகர் சுபாஷ்!"

"தம்பி, இந்தத் திருட்டுக் கல்யாணத்தில என்னை இழுக்காதீங்க. நான் சாஸ்திரம், சம்பிரதாயம் இதுல எல்லாம் ஊறினவன்."

"எனக்கு வேற யார் சார் இருக்கா?"

"ஏன் ரொஸாரியோ சார்கிட்ட தகவல் சொல்லி வரச் சொல்லலாமே..."

"அவர்கிட்ட கல்யாணம் முடிஞ்சதும்தான் தகவல் சொல்லலான்னு இருக்கேன். சாரி சார், உங்க ஆசீர்வாதம் வேணும் சார்."

"அது எப்பவும் உண்டு தம்பி. திருட்டுக் கல்யாணத்துக்கு துணையாக் கூப்பிடறீங்களே, ரெண்டாவது, எனக்கு இஷ்டமில்லாத கல்யாணம்."

சந்திரசேகர் சிரித்தான். சற்றே யோசித்தான்.

"உங்களுக்குக் கல்யாணப் பெண்ணைப் பிடிக்கலை அப்படித்தானே?"

"ஆமாம்."

"ஒரு விஷயம் சொல்லட்டுமா? கல்யாணத்துக்கு அப்புறம் ஒரு நல்ல பத்திரிகை ஆரம்பிச்சு நடத்தறதுக்கு என் அனுமதி கேட்டா சார்! இதை வெச்சி அவகுணத்தை உங்களால யூகிக்க முடியலையா?"

"எனக்கு எல்லாமே நடிப்பாப்படுது. உங்க பின்னணி தெரிஞ்சி உங்களுக்குத் தகுந்த மாதிரி அந்தப்பொண்ணு பேசி உங்களை மயக்கி வெச்சிருக்கான்றது என் கருத்து. தெரிஞ்சே புதை மணல்ல காலை வைக்கிறேன்னு சொல்றீங்க நீங்க"

"ரைட்டு! சாரி சார், அவ நீங்க நினைக்கிற மாதிரி இல்லைன்னு உங்களுக்குப் புரியவைக்கிறேன். அவளுக்குள்ளே இருக்கிற ஒரு நல்ல மனுஷியை உங்களுக்கு அடையாளம் காட்டறேன். என் செலக்ஷன்ல தப்பில்லைன்னு நீங்க மனசார உணர்ந்தா என் கல்யாணத்துல சாட்சியா இருப்பீங்களா?"

இந்தக் கேள்வியில் சற்றே திணறிய சாரி, "சரி, தம்பி" என்றார்.

"எப்படி எனக்கு நம்பிக்கையூட்டப் போறீங்க?"

"ஒரு நாடகம் நடத்தலாமா?"

"நாடகமா?"

"ஆமாம். லேசா ஒரு ஐடியா வந்திருக்கு. அதை கரெக்டா யோசிச்சிட்டு சொல்றேன். அந்த நாடகத்துக்கப்புறம் மதுமிதா எப்படிப்பட்டவள்னு நீங்களே புரிஞ்சிப்பீங்க." என்றான் சந்திரசேகர்.

□●□

காரை அந்தச் சந்து முனையில் ஓரங்கட்டி நிறுத்திவிட்டு இறங்கினார் ஈஸ்வர். ஓரமாக வெற்றிலை எச்சிலைத் துப்பினார். ஜிப்பாவில் இருந்து கதிரவனின் விலாசம் எழுதின சீட்டை எடுத்துக்கொண்டார்.

ஒரு வீட்டின் வாசலில் சைக்கிளை நிறுத்திவிட்டு தபால் கொடுத்துக் கொண்டிருந்த தபால்காரரைக் கண்டதும் அவரிடம் காட்டி விபரம் கேட்டார்.

"இந்தத் தெரு கடைசியிலதான் நூத்தி ஏழு வரும். உள்ளே மாடிலதான் 74 வரும்னும் நினைக்கிறேன்."

"தேங்ஸ் சார்"

காலனியில் பெண்கள் தண்ணீர் அடித்துக் குடங்களில் நிரப்பிக் கொண்டிருந்தார்கள். ஒரு வீட்டிலிருந்து டி.வி. வசனங்கள் வந்தன. ஒரு வீட்டிலிருந்து சாம்பார் வாசனை.

மாடியில் 74ம் அறையின் கதவில் சினிமா ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருக்க, தட்டினார். கதவு திறந்த சட்டையணியாத லுங்கி கட்டிய கதிரவன் பாதி பீடியை மிதித்து விட்டு, "சார்! நீங்களா சார்? உள்ளே வாங்க சார். நீங்க போய் என்னைத் தேடி... ஸாரி சார். உருப்படியா ஒரு நாற்காலி கூட இல்லை. இந்தப் பெட்டி மேல உட்காருங்க சார். இருங்க!" பரப்பாக ஒரு துண்டை எடுத்துப்பெட்டி மேல் விரித்தான்.

"நான் வரலைப்பா இங்கே. அதிர்ஷ்டம்தான் உன்னைத் தேடி வந்திருக்கு."

"என்ன சார் சொல்றீங்க?"

"நடிக்க சான்ஸ் கேட்டு நடையா நடந்தியே... ஹீரோ சான்ஸ் தர்றேன் கதிரவா."

"ஹீரோவா?" நெஞ்சைப் பிடித்துக் கொண்டான்.

"ஆமாம். மதுமிதாவுக்கு புருஷனா நீ நடிக்கப் போறே" என்றார்.

(தொடரும்)

> "உடைகளைக் கழற்றி நடித்தால்தான் கவர்ச்சி என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். கண்களினால் கூட கவர்ச்சி காட்ட முடியும்."
>
> -நடிகை அஞ்சு அரவிந்த்.
>
> "கவர்ச்சிதான் எனக்கு கை கொடுத்தது. அதன் முக்கியத்துவம் எனக்குத் தெரியும். வித்தியாசமாகச் செய்ய ஆசைதான். ஆனால் கிளாமரை முழுமையாகக் கைவிடுவதில் அர்த்தமில்லை."
>
> -நடிகை ரோஜா.
>
> *1. ஜூன், 97 'சினிமா எக்ஸ்பிரஸ்' பேட்டிகளிலிருந்து...*

---

## நில்-கவனி-முன்னேறு

தற்கொலை பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் சர்வ சாதாரணமாக வந்து கொண்டிருக்கின்றன.

துன்பங்களைத் தாங்க முடியாமல் இந்த முடிவுக்கு வருகிறவர்கள் பலர்.

தற்கொலை பற்றி முடிவு செய்ய எவ்வளவு துணிச்சல் வேண்டும்?

அந்தத் துணிச்சலை மூலதனமாகக் கொண்டு வாழ்வதற்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது?

சகிப்புத் தன்மை என்பது எல்லாருக்கும் வந்து விடுவதில்லை.

"ஐயோ! என்னால் தாங்க முடியவில்லையே!" என்ற அலறல் ஒவ்வோர் உள்ளத்திலும் கேட்கிறது. சிரித்துக்கொண்டே அவற்றைச் சகித்துக் கொள்ளும் பழக்கம் சிலருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது.

காலையில் கண் விழித்ததிலிருந்து, இரவு படுக்கைக்குப் போகும் வரை துன்பங்களையே சந்திப்பவர்கள் உண்டு. இதில் சகிப்புத் தன்மையை எப்படி வரவழைப்பது?

மனம் மரத்துப் போய்விட வேண்டும்: உணர்ச்சிகளைக் கொன்றுவிட வேண்டும்: எந்த அடியையும் தாங்கும் உள்ளத்தைப் பெற்றுவிட வேண்டும்.

நாம் விரும்பிப் பிறக்காதது போலவே, நடக்கும் காரியங்களும் நாம் விரும்பி நடப்பவையல்ல.

கோடானு கோடி மக்களுக்கு நடுவிலே- இல்லை கோடானு கோடி குணங்களுக்கு நடுவிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

'எல்லாம் நிறைந்ததுதான் உலகம்' என்று கண்டு கொண்டுவிட்டால், சகிப்புத் தன்மை வந்துவிடும்.

'ஒன்று நடந்துதான் தீரும் என்றால், அதிலே கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது' என்றான் மராட்டிய ஆசிரியன் காட்கரி.

இதனைத்தான் 'விதி' என்று இந்து மதம் சொல்கிறது.

எனது தாயார் மரணப்படுக்கையில் இருந்தபோது சென்னையின் மிகப் பெரிய லேடி டாக்டர் வந்து பார்த்தார். அப்போது மாலை மணி ஆறு.

என்னை அவர் தனியாகக் கூப்பிட்டு, "இரவு பன்னிரண்டு மணிக்கு உயிர் போய் விடும்," என்றார்.

அப்போது என் தாயார் நன்றாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.


ஆறு மணி நேரம் நான் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போது என் நிலை எப்படி இருந்திருக்கும்?

நடந்தே தீரப்போகிற ஒன்றுக்காக நாம் ஏன் அழ வேண்டும்?

ஏமாற்றம், தோல்வி, நடுக்கம், எரிச்சலூட்டும் சூழ்நிலை; இரக்கமற்ற மனிதர்கள் இவற்றுக்கு நடுவே ஒரு மனிதன் வாழ முயற்சி செய்கிறான். வாழ்ந்தே ஆக வேண்டும் என்று தீர்மானிக்கிறான். வாழ்ந்து விடுவோம் என்று துணிகிறான். அவனுக்குச் சகிப்புத் தன்மை வந்துவிடுகிறது.

பிறக்கும்போது வாழ்க்கைக்கென்று ஒரு நோக்கமில்லை; பிறந்த பிற்பாடு அமைகின்ற சூழ்நிலை ஒரு நோக்கத்தை தோற்றுவித்து விடுகிறது. இதற்கு முக்கிய தேவை சகிப்புத் தன்மை.



**கவியரசு கண்ணதாசன்**

-இப்பொழுதெல்லாம் சகிப்புத் தன்மையை வரவழைப்பதற்கு மாத்திரைகளே வந்துவிட்டன.

ஒரே மாதிரி வாழ்வில் எரிச்சலடைந்து, மேல் நாட்டு மனிதர்கள் சீரழிந்த வாழ்க்கையைத் தொடங்கி விட்டார்கள். ஆனால் வாழ்க்கைக்கு அது வழியாகாது.

நிரந்தரமானது துன்பம்; வந்துபோவது இன்பம்; இதுதான் வாழ்க்கை என்பதைத் தெளிவாகக் கண்டு கொண்டுவிட வேண்டும்.

தைரியத்திலும், நம்பிக்கையிலும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

எனக்கு ஏற்பட்ட சித்திரவதைகள் கொஞ்சமல்ல.

இரக்க குணத்தா லேயே அழிந்தவன் நான்.

சகித்துக் கொள்ளப் பழகினேன்; இன்னும் பழகிக் கொண்டுதான் இருக்கிறேன்!

அழுவதால் பிரச்சனை தீருமென்றால், நான் அழத் தயார். ஆனால் ஆறுதலுக்காகப் பல நேரங்களில் அழுவதுண்டு. முடிவில் ஒரு நம்பிக்கையை வரவழைத்துக் கொள்வேன்.

எவ்வளவு பெரிய தத்துவங்களைப் பேசுகிறவனுக்கும், நம்பிக்கையும் அவநம்பிக்கையும் மாறி மாறி வருகின்றன.

அவநம்பிக்கையைக் குறைப்பது அல்லது போக்கடிப்பது சகிப்புத் தன்மையே.

சகிப்புத் தன்மையின் மூலம் அனுபவங்கள் சேகரிக்கப்படுகின்றன.

அளவு கடந்து துன்பங்களை அனுபவித்தவன் தன் வாழ்க்கை வரலாற்றை உள்ளது உள்ளபடி எழுதினால் உலகமே பயங்கரமாகக் காட்சி அளிக்கும்.

மேல் கிளையிலே நாகம்; கீழே வேங்கை; நடுக் கிளையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதுதான் வாழ்க்கை.

கை வலிக்கும். சகித்துக்கொள்ளுங்கள். நேரம் ஆக ஆக வேங்கை விடை பெற்றுக்கொள்ளும்.

சகிப்புத் தன்மையின் இறுதி மகிழ்ச்சிகரமான வெற்றியாக இருக்கும்.

காட்கரியின் பொன் மொழியை மீண்டும் நினைவு படுத்துகிறேன்.

"ஒன்று நடந்துதான் தீரும் என்றால் அதில் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது?" ■

# அப்பாவுக்கு அஞ்சலி



**களுவாஞ்சிக்குடி யோகன்**
**அவுஸ்திரேலியா**

> "அவனை வெளிநாடு அனுப்ப விமான நிலையத்துக்கு வந்திருந்தார். அன்று அவர் சந்தோசமாக இல்லை."

சுவிற்ஸர்லாந்தில் மாரி காலம் ஆரம்பித்திருந்தது. மழைக்குப் பதிலாக பனிகளும், பனிக்கட்டிகளும் கொட்டிச் சிதறிய வண்ணமிருந்தது.

தாவரங்களெல்லாம் இலைகளை யுதிர்த்தி எலும்புக்கூடாய் சிலுத்து நின்றன. அந்த மரங்களின் மேல் கொட்டிக் கிடந்த பனித்துகள்கள் மரங்களுக்கு ஆடை கட்டி அழகூட்டிக் கொண்டிருந்தன.

காலை மணி பத்தைக் கடந்துவிட்ட தென்றாலும் வெளிச்சம் மருவி மாலை ஏழு மணிபோல் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது.

சேகர் அப்பொழுதுதான் எழுந்திருந்தான். எழுந்தவுடன் குளியலறைக்குள் நுழைய எத்தனித்தபோது தபால்காரனின் வருகை தடபுடலாகக் கேட்டது. குளியலறைக்குச் செல்லாமல் வெளியே சென்று தபால் பெட்டிக்குள் கிடந்த கடிதத்தை எடுத்துக் கொண்டான்.

நாட்டிலிருந்து அவனின் தங்கைதான் அனுப்பியிருந்தாள். அந்தக் கடிதத்தைக் கண்டபோது அவனது உள்ளம் குதூகலிக்கத் தொடங்கியது. அதற்கு விசேட காரணமும் இருந்தது.

சென்ற முறை தங்கை அனுப்பிய கடிதத்தில், "அடுத்த கடிதத்தில் உனக்குப் பேசிய பெண்ணின் விபரங்களையும், புகைப் படத்தையும் அனுப்பி வைக்கிறேன் அண்ணா!" என்று அறிவித்திருந்தாள். கல்யாணச் செய்திக்கே இவ்வளவு குதூகலமென்றால் கல்யாணம் செய்து கொண்டால் எப்படி இருக்கும், என்று அவன் எண்ணிக் கொண்டான். அந்த எண்ணம் மௌனமாகச் சிரிப்பை வரவழைத்தது. அந்தச் சிரிப்பினூடே கடிதத்தைப் பிரித்தான் சேகர்.

*'அன்பார்ந்த சின்னண்ணாவிற்கு,*

*இக் கடிதத்தை வாசிக்கமுன் மனதைக் கல்லாக்கிக் கொள்ளவும், அப்பாவிற்கு கொஞ்சம் சுகமில்லாமல் வந்தது. நாங்கள் ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தோம். மூன்றாம் நாள் குணமாகியிருந்தவர் திடீரெனக் காலமாகிப்போனார். அவரும் அம்மாவிடம் போய்ச் சேர்ந்து கொண்டார். நீர் ஒன்றுக்கும் கவலைப்படக் கூடாது. எல்லாம் அவன் செயல்..'*

இப்படியே கடிதம் தொடர்ந்து கொண்டிருந்தது.

திருமணச் செய்தியை எதிர்பார்த்தவனுக்கு மரணச் செய்தி கொண்டு வந்திருந்தது கடிதம்.

அவனால் தொடர்ந்து அதை வாசிக்க முடியவில்லை.

உடலெல்லாம் ஒருவித உதறல் எழுந்து, 'அப்பா, அப்பா' என்று கதறவேண்டும் போல் துடித்தது.

இருந்தும் அந்தத்துடிப்பை அவன் அடக்க முயன்றான்.

"ஆண்பிள்ளை அழக்கூடாது!" இது அவனுக்கு அவனது அப்பா இட்ட கட்டளை. அந்த அப்பா அடிக்கடி சொல்லிக்கொள்வார்.

"தம்பி, வாழ்க்கையில் ஆண்பிள்ளை கண்ணீர் சிந்தக்கூடாது!

அப்படியான சந்தர்ப்பங்கள் வருவதற்கு நிறையச் சாத்தியங்கள் உண்டுதான், அந்த நேரங்களில் சந்தோஷமான நினைவுகளை மனதில் விதைத்து விடவேண்டும், அல்லது அந்த நிகழ்விற்கு கூடுதல் தாக்கமான சம்பவங்களை உள்ளத்தில் நிலைநிறுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்!"

"இப்படியாக அவன் அழநேரும் காலங்களில் அந்த அழுகைக்கு வடிகால் அமைத்து மன உறுதியை நிலைகொள்ளப் பழக்கியிருக்கிறார் அப்பா. இப்பொழுது அந்த அப்பாவே போய்விட்டாரே என்று எண்ணும் பொழுது அவனின் நெஞ்சம் குமுறுகிறது.

நாட்டில் இன்று போர் என்ற கொடிய வியாதியினால் எத்தனை இளைஞர்களும், யுவதிகளும் அழிந்துகொண்டு போகின்றார்கள்!

'அப்பா வயதானவர்தான்! உண்டு களித்து வாழ்ந்து அனுபவித்தவர்தான்!' என்று அவனது மனம் சமாதானமடைய முனைகின்றது.

இருந்தும் நெஞ்சினில் நிறைந்த அந்தத் தந்தையாரின் திருமுகந்தான் அவனது கண்முன் தோன்றித் தோன்றி மறைகின்றது.

எண்பத்தொன்பதின் நடுப்பகுதியில்தான் அந்தத் திருமுகத்தை அவன் கடைசியாகப் பார்த்தான்.

அவனை வெளிநாடு அனுப்ப விமான நிலையம் வந்திருந்தார் அவர்.

அன்று அவர் சந்தோஷமாக இருக்கவில்லை. அவரது உற்சாகமெல்லாம் எங்கேயோ மறைந்து போயிருந்தது. அவன் விடைபெறப்போகும் நேரத்தில்..

"தம்பி..!" என்று இழுத்தார் அவர். அவன் எதுவுமே பேசாமல் திரும்பிப் பார்த்தான்.

"இடையில் எனக்கு ஏதாவது நிகழ்ந்தால் நீ வந்து பார்ப்பாயா?" என்று கேட்டார். அப்போது அந்தக் கேள்வியின் உட்பொருள் அவனுக்குப் புரியவில்லை. புரிந்தாலும் அதை கிரகித்துப் பார்க்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. இப்போது அவனின் நெஞ்சில் ஒரு நெருடல். 'அப்பாவுடன் நிதானமாக உரையாடியிருக்கலாமே!' என்ற தவிப்பு அவனைத் தாக்குகிறது.

அந்த வேதனையுடன் "அப்பா, அப்பா" என்று அவனது உதடு முணுமுணுக்கிறது. அவன் அவனது அப்பாவுடன் சேர்ந்து வாழ்ந்த காலங்கள் அதிகம். இருந்தும் அவரை அவனால் புரிந்துகொள்ள முடியவேயில்லை. புரிந்து கொள்ளக்கூடிய வயதும் அவனுக்கு இருந்ததில்லை.

'அவர் வேறொரு தமிழ் மாவட்டத்தில் பிறந்து வளர்ந்தவராம். வேலையின் நிமித்தம் இங்கு வந்தபோது தாயைப்பார்த்து விரும்பி மணம் செய்து கொண்டாராம். இதை அவனது அம்மாதான் அவனுக்குச் சொல்லியிருக்கிறாள்.

அவன் எட்டாந்தரத்தில் பயிலும் நேரம் ஒருநாள் அப்பா அவரது சொந்த ஊருக்குப் போய் வந்தார். போய்வந்த களைப்புத்தீர உறங்கிக் கொண்டிருந்தார் அவர். சாப்பாட்டு வேளை, "அப்பாவை எழுப்பி வா!" என்று அவனுக்கு அம்மா சொன்னாள்.

அவன் போய் அப்பாவை எழுப்ப முயன்றான். அவர் உறங்கிக்கொண்டிருந்தார். அவரின் கண்களில் தேங்கியிருந்த கண்ணீர் கன்னத்தில் வடிந்து காய்ந்து கொண்டிருந்தது.

"ஆண்கள் அழக்கூடாது," என்று படித்துப் படித்துச் சொல்லும் அப்பாவின் கண்ணீரை கண்டதும் அவன் வெலவெலத்துப் போனான். தாயிடம் ஓடிப்போய் விஷயத்தைச் சொன்னான். "இந்த மனுஷனுக்கு வேலையில்லை. சொந்தம் வேணும் சொந்தம் வேணுமென்று இவர் ஒவ்வொரு தடவையும் போய்வருவதுதான் மிச்சம்," என்று அம்மா அலுத்துக்கொண்டாள்.

"என்ன அம்மா?" என்று கேட்டான் சேகர்.

"இந்த மாவட்டத்தில் வந்து என்னை மணந்துகொண்டது அப்பாவின் சொந்தங்களுக்குப் பிடிக்கவில்லையாம், அதனால் அப்பாவை அந்தச் சொந்தங்கள் ஒதுக்கி வைத்து விட்டார்கள்."

அன்றுதான் அம்மா அவனுக்கு இதைத் தெரியப்படுத்தினாள்.

*'அந்தப் பழமைவாதிகள் இப்படி அப்பாவை சேர்த்துக்கொள்ளாமல் ஒதுக்கி வைத்து என்ன சாதனையைச் செய்துவிட்டார்கள்? இன்று அந்த உயிர் இந்த உலகை விட்டே மறைந்துவிட்டதே! இனி யாரால்தான் அந்த முகத்தைப் பார்த்துவிடமுடியும்? ஒரு வார்த்தை பேசிவிட முடியும்?'* சேகரின் கையிலிருந்த கடிதம் கண்ணீரால் நனைந்து கொண்டிருந்தது. மிகுதியை வாசிக்க அவன் முனைந்து கொண்டிருந்தான்.

*"இறக்கும் தறுவாயில் கூட அப்பா உன்னைத்தான் பார்க்க ஆசைப்பட்டுக் கேட்டபடியிருந்தார். நீர் கடைசியாக அவருக்கு வாங்கி அனுப்பியிருந்த 'பெற்சீற்றில்'தான் தன்னைக் கிடத்தவேணும் என்றும் சொல்லியிருந்தார். அதன்படி நீர் அனுப்பிய 'பெற்சீற்றில்'தான் அவரைக் கிடத்தி அடக்கம் செய்தோம்!"*

மறுபடியும், மறுபடியும் இந்த வரிகளை அவன் வாசிக்கின்றான். குமுறிவரும் அழுகையை அடக்கிக்கொள்ள முடியவேயில்லை.

"அப்பா...!" என்று சத்தம் போட்டுக் கதறத் தொடங்கினான் சேகர். அறைக்குள் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்த 'றூம்மேற்' டயஸ் ஓடிவந்து "என்னடா? என்னடா?" என்று விசாரிக்க ஆரம்பித்தான்.

---

# நாடகம்

**ரூபராணி**

கதவு தட்டும் ஓசை கேட்டுத் திடுக்கிட்ட தங்கா தன் கணவனைக் கலவரத்துடன் பார்த்தாள். அவள் கணவன் பிரபு மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தான். மணி எட்டு. 'யாராயிருக்கலாம்?' அவன் நெற்றியில் கேள்வி சுருங்கியது. எழும்பியவனைத் தங்கா திகிலுடன் தடுத்தாள்.

மீண்டும் கதவு படபடத்தது. அதில் அவசரம் தெரிந்தது. பிரபு சரேலென்று எழுந்து கதவைத் திறந்தான்.

கையில் சூட்கேசுடன் நின்றவள் சூரியா.

"சூரியா நீயா...?" தங்கா அலறினாள்.

"என்னடி இரவில- இந்த நேரத்தில...?" கணப்பொழுதில் தங்காவுக்கும் பிரபுவுக்கும் விஷயம் புரிந்துவிட்டது. வழமையான பிரச்சனைதான். கணவனுடன் தகராறு பண்ணி விட்டு வீட்டை விட்டுக் கிளம்பி வந்துவிட்டாளென்று இருவரும் கருதினர்.

"சூரியா, உள்ளேவா." தங்கா தன் தோழியை வரவேற்றாள். தங்கா தன் கணவனின் காதில் ஏதோ கிசுகிசுத்தாள். அவன் மாடிப்படியேறிப் போய் விட்டான். "சூரியா! நீ முதலில, உடைகளை மாற்றிக்கொண்டு சாப்பிட வா!"

"எனக்குப் பசி இல்லை. நீ சாப்பிடு." சோபாவில் உட்கார்ந்திருந்த சூரியாவை தங்கா இழுத்துக்கொண்டு உட்காரவைத்தாள். சாப்பிட்டுக் கொண்டே இருவரும் காப்பி விலையில் இருந்து காஷ்மீர்ச் சேலைவரை அலசினார்கள். முடிவில் சூரியாவைத் தங்கா திசை திருப்பினாள். சூரியா கையை அலம்பி விட்டு மறுபடியும் சோபாவில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்தாள்.

"ஏய்... உனக்கென்ன ஆச்சு இந்த நேரத்தில் சூட்கேசுடன்...?"

தங்காவைப் பாதியில் இடை மறித்தாள் சூரியா.

"நான் என்ன உன்னைப்போல சுதந்திரப் பறவையா? என் புருஷன்ர கட்டுப்பாடு சுத்தமாய் எனக்குப் பிடிக்கல. நீ குடுத்து வச்சவ. அம்மா வீட்டுக்குப் போகத்தான் முதல்ல நினச்சன்... பிறகு உன்னப் பார்த்திட்டு காலைல புறப்படலாமெண்டு பிளான மாத்திட்டன்." சொல்லிவிட்டு சூரியா விசும்பினாள்.

"சரிசரி நீ எதையும் மனசில போட்டு அலட்டிக்காமத்தூங்கு. நாளைக் காலைல பார்த்துக்கலாம்." குட்நைட் சொல்லிய தங்கா சூரியாவை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்ற கவலையுடன் மாடிக்குப் போய்விட்டாள்.

சூரியா சோபாவில் மல்லாந்து படுத்துக் கண்களுடன் போராடினாள். தூக்கமவள் கண்களைத் தழுவமறுத்துவிட்டது. நினைவுகள் அவளை வீட்டை நோக்கி ஓட்டியது. அங்கு நடந்த வாக்குவாதம் அவள் மனசில் நிழலாடியது.

"என்னங்க, ஒரு குட் நியூஸ்... ஜெனிவாவில நடக்கிற லேடீஸ் யூனியன் கான்ஃபறன்சுகள்ள கலந்துக்க என்ன அனுப்பிறதா தீர்மானிச்சிருக்கிறாங்க."



"அவங்க தீர்மானிச்சாப்போதுமா? நான் தீர்மானிக்க வேணுமே! உன் பொண்ணு தீர்மானிக்க வேணுமே!"

"ஒரு மாசந்தானே கண் மூடி முழிக்கப் பறந்திடும். வேலைக்காரி இருக்கிறா எல்லாம் கவனிச்சிக்குவா."

"நீ எனக்கு மனைவியா இல்லாட்டாலும் ஒரு தாயா நடந்துக்க. வயசுக்கு வந்த பொண்ண விட்டிட்டு ஜெனிவா? 'சறிற்றி பிக்ன்ஸ் அற்ஹோம்' வீட்டுக் கடமைகள அம்போன்னு போட்டிட்டு, யூனியன் அது இதுன்னு ஊருக்கும் பேருக்கும் அலையிற பொம்பிளைகள எனக்குக் கட்டோடு பிடிக்காது. நீ போறத நான் அனுமதிக்கமாட்டன்!"

"சே நீங்களும் ஒரு புருஷனா? சுத்தக் 'கன்றி புறுட்டா'யிருக்கிறீங்களே! ஒரு பொண்ணு மனைவி எண்டு கழுத்தை நீட்டிற்றா- அவ அடிமையா?"

"ஏய் சித்திரா! இங்க வாயேன். உன்ர அம்மா சொல்றதக் கேட்டியா? ஜெனிவா போறாளாம்!"

"நீங்களும் அம்மாவும் எதுக்கு சண்டை போடறீங்க? அவங்க போறதால என்ன குறைஞ்சிடப் போகுது? அம்மாவுக்குத் தினம் கூட்டம், பாட்டி, விசிற் எண்டு ஏதேதோ இருக்குமே. அம்மா இருந்தாலும் ஒண்டுதான், இல்லாட்டியும் ஒண்டுதானப்பா."

எண்ணங்களை விவாத மேடையாக்கிக் கொண்ட சூரியாவுக்குச் சித்திராவின் வெறுப்பைத் தாங்க முடியாமல் விம்மினாள். திடீரென மாடியில் கேட்ட கூச்சலும் அலறலும் சூரியாவின் நினைவுகளைச் சிதறடித்தன. அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். எங்கும் இருள் அப்பிக் கிடந்தது. திகிலுடன் எழுந்து மாடிப்படியருகே நின்று காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

"நீ ஒரு பெண்ணா, பேயா?"

'நிச்சயமா அது பிரபுவின் கூச்சல்தான், சூரியாவின் இதயம் படபடத்தது.'

"என்னைக் கேளாம எதுவுமே வாங்கப் படாது; கடைக்குப் போகக் கூடாது, என்று எத்தனை முறை சொன்னேன்! உன் மர மண்டையில ஏறுதா?"

"என் இஷ்டம்! நா விரும்பினதச் செய்வன்!"

"செய்வியா? செய்டி பாப்பம்!"

'பளார்!' சத்தம்

தங்காவின் அழுகுரல்...

"ஏய்! கேட்டுக்க இதுக்குமேல அம்மா வீடு அக்கா வீடு எண்டு போனா நடக்கிறதே வேற. நீ எங்க போற வாற எண்டு சொல்ல ராமதாஸ் இருக்கிறாண்டி. என்னக் கொலகாரனா மாத்திடாத!"

பொருட்கள் 'தடால் தடால்' என்று விழுந்து புரண்டன. சூரியா அதிர்ச்சியில் ஆடிப் போனாள். மெதுவாக நடந்து வந்து உட்கார்ந்தவளின் மூளை சுறுசுறுப்பாக இயங்கியது. சூட்கேசைத் திறந்து டயறியில் எழுதினாள்.

'தங்கா, மின்னுவதெல்லாம் பொன் என்று எண்ணியது என் தப்புடி. மாடியில் உன் புருஷன் நடத்திய தர்பாரை என் காதால் கேட்டேன். அது என் கண்களைத் திறந்திட்டுது. உன் புருஷனவிட என் அவர் ஆயிரம் மடங்கு மேல். நான் போகிறேன்.'

எழுதிய ஒற்றையைக் கிழித்து மேசை மேல் வைத்துவிட்டு நேரத்தைப் பார்த்தாள். மணி, ஐந்து முப்பது. யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தன் வீடு நோக்கிப் புறப்பட்டு விட்டாள்.

பிரபுவும் தங்காவும் சரியாக ஆறு மணிக்கு மாடியில் இருந்து இறங்கிவந்து சூரியாவைத் தேடினார்கள். அவள் அங்கு இல்லை. மேசையிலிருந்த கடிதத்தைப் படித்து இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு கலகலவென்று சிரித்தார்கள். சூரியாவுக்காக அவர்கள் நடத்தியது நாடகம் என்று யாருக்குத் தெரியும்!

---

# அவனும் கிரிக்கெட்டும்

**கிண்ணியா அமீரலி**

"இது ரெண்டுக்கும் 'அடி' போடணும்..."

"ம்.. நல்லாவே கிழிஞ்சு தொங்குது சேர்.."

"எவ்வளவு எடுப்பே...?"

"இருநூத்தி அம்பது ரூபா.."

"என்னது.. இதுக்கு அடி போடுறதுக்கு இருநூத்தி அம்பதா..? என்ன அநியாயம்டா இது.. புதுசே வாங்கிடலாம்.."

"வாங்குங்க.."

"கொஞ்சம் குறை தம்பி.."

"கொறச்சித்தான் சொன்னேன்.. நீங்க எங்கே போய் 'அடி' போட்டாலும் இதே கணக்குத்தான்..."

"ம்... சரி, எப்ப எடுக்கலாம்...."

"நாளைக்குக் காலையில வாங்க சேர்..."

★★★

"ரூபனுக்கு மருந்தெடுக்கணும்..."

"பத்து மணி போல வாறன்.."

"கௌரியக்கா சீட்டுக்காசு கேட்டுவருவா...?"

"குடுப்போம்..."

"பகலைக்குக் கறி வாங்கணும்..."

"வாங்குவோம்..."

"இன்னிக்கும் 'களு' அய்யாவோட சேர்ந்து 'கள்'ளுக் குடிக்கப் போயிடாதீங்க.."

"போதும் நிப்பாட்டு.!"

"மருந்தெடுக்கப் போகணும்... மறந்திடாதீங்க.."

"ம்..."

"அவன் சப்பாத்தை இன்னிக்காவது எடுக்க வருவானா...?"

"ம்.. வரணும்..."

★★★

"என்ன பிலீப்.. நீங்க என்ன சொல்றீங்க.. எது வெல்லும்?"

"இலங்கைதான்.."

"இல்ல... பாகிஸ்தான்.."

"இல்ல... இலங்கை.."

"இல்ல... பாகிஸ்தான்தான்..."

"பார்ப்போமா...?"

"பார்ப்போம்..."

"என்ன பந்தயம்?"

"ஆயிரம் ரூபாய்.."

"அது வேணாம்..."

"அப்போ...?"

"சப்பாத்து..."

"என்னது.. சப்பாத்தா...?"

"ஆமா.. சப்பாத்துத்தான்.. இலங்கை வெற்றி பெற்றால் எனக்கு நீ புதுச் சப்பாத்து வாங்கித் தரணும். பாகிஸ்தான் வெற்றி பெற்றால் நான் உனக்கு வாங்கித் தருவேன்..."

"தரலேன்னா...?"

"சப்பாத்தக் கழட்டி அடி..."

"சரி, அப்புறம் மாறக் கூடாது..."

"சரி..."

•••

"என்ன ரமேஷ்.. என்ன யோசனை...?"

"இந்தச் சப்பாத்துத் தந்தவனை இன்னும் காணோம் கணேஷ்.... பொடியனுக்கு வேற சொகமில்ல.... ஆஸ்பத்திரிக்கும் போகணும்.. ஆள் வரமாட்டான் போல..."

"தெரிஞ்சவனா..?"



ஆமா.. "பள்ளிமுல்ல'யில இருக்கிறாரு.. ஊர் ஹட்டன். தெரிஞ்ச மனுஷன்தான்..."

"அந்தக் கறுத்த.. கட்ட... தடியன்..."

"ம்..ம்.. அவர்தான் ஆள்...."

"ஹி... ஹி... அவரா?"

"ஏன்டா சிரிக்கிறே?"

"அவர் வரமாட்டாருடா... அவருக்கு இனி இந்தப் பிஞ்சுபோன சப்பாத்துத் தேவைப் படாதுடா..."

"என்னடா கணேஷு... நீ இப்படிச் சொல்றே....?"

"ஆமாண்டா... அவரும் எங்க மச்சானும் சரியான கிரிக்கெட் பைத்தியம்டா.. ரெண்டு பேரும் சப்பாத்துக்குப் பந்தயம் பிடிச்சாங்களாம்.. இலங்கை வெற்றி பெற்றால் சப்பாத்து வாங்கித் தருவதா எங்க மச்சான் சொன்னாராம்...."

"சே!"

"என்னடா?"

"பாகிஸ்தான் வெல்லாமப் போயிடுச்சே...!"

---

# பகை எனும் உறவு

**தமிழகக் கவிஞர்**



**அப்துல் ரகுமான்**

ஆண்-பெண் உறவு விசித்திரமானது.
ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் துணையாகவும் இருக்கின்றனர். பகையாகவும் இருக்கின்றனர்.

காதல் என்பது வரமாகவும் இருக்கிறது.
சாபமாகவும் இருக்கிறது.

காதலில் அடைவதும் இருக்கிறது.
இழப்பதும் இருக்கிறது.

காதலில் ஆணும் பெண்ணும் தங்கள் சுதந்திரத்தை இழக்கின்றனர்.

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நேசிக்கின்றனர். ஆனால், அந்த நேசத்திற்கு அடியில் வெறுப்பும் மறைந்திருக்கிறது.

இது ஆதி காலத்திலிருந்து ஆண்-பெண் உறவினால் நிகழ்ந்த சம்பவங்களின் விளைவு.

உடலுறவைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தால் ஆணும் பெண்ணும் நேசிக்கின்றனரா அல்லது ஒருவரை ஒருவர் தண்டிக்கின்றனரா என்ற சந்தேகம் வருகிறது.

உண்மையில் உடலுறவில் இந்த இரண்டும் இருக்கிறது.

காலம் காலமாக ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் இழைத்த கொடுமைகள் ஒவ்வொருவர் மனத்தடியிலும் ஒளிந்திருக்கின்றன.
அதனால்தான் இந்த வெறுப்பு.

காதலரின் ஊடலுக்கும், கணவன்-மனைவி சண்டைக்கும் இதுதான் காரணம்.

உறவிருக்கும் இடத்தில்தான் பகை ஏற்படும். யார் என்றே தெரியாத அந்நியர் மேல் பகை உண்டாவதில்லை.

பகை என்பதே உறவில் ஏற்படும் உரசலில் எழுகின்ற தீப்பொறிதான்.

எனவே பகையும் ஓர் உறவுதான்.

என்னதான் பகை என்றாலும் ஆணும் பெண்ணும் ஒருவர் இல்லாமல் மற்றவர் வாழவும் முடிவதில்லை.

காலிப் கூறுகிறார்:

*என்னுடன் உறவை*
*முறித்துக் கொள்ளாதே!*
*நேசிக்க முடியாவிட்டால்*
*பகை என்ற*
*சம்பந்தமாவது இருக்கட்டும்!*

# இலக்கிய நயம்

# மலரிலும் மெல்லியது

அணைத்தான் மெல்ல
அணைத்தான்!

பூந்தோட்டம் வாடாமல்
பூந்தேகம் நோகாமல்
வாஞ்சையுடன் அணைத்தான்.

அனுபவம் புதிது-அதனால்
ஆரம்பத் தயக்கம்!

அனுபவம் புதிது- அதனால்
அறிவதில் துடிப்பு!

அனுபவம் புதிது- அதனால்
அவசர நடுக்கம்!

அனுபவம் புதிது- அதனால்
சரசத்தில் தயக்கம்!

அனுபவம் புதிது- அதனால்
தொட்டதும் சிலிர்ப்பு!

அனுபவம் புதிது- அதனால்
தொடத் தொட அச்சம்

அனுபவம் புதிது- அதனால்
தொடங்கிட சுணக்கம்!

அனுபவம் புதிது- அதனால்
உதடுகள் துடிக்கும்!

அனுபவம் புதிது- அதனால்
இமைகளும் நடுங்கும்!

ஒடுங்கிய இடையினில்
ஓங்கிய இரு மார்புகள்
முரசுகள் போல் அதிரும்.
வா போருக்கு வா போருக்கு
என அவை அழைக்கும்!

கூந்தலில் சூடிய
வாசனை மலர்களும்
மோகத்தை ஊட்டி
தாகத்தைக் கூட்டும்!

"சுந்தரக் கிளியே!
சுந்தரக் கிளியே!
சொக்க வைத்திடும் கிளியே!
தக்கத் தக திமி தக்கத் தக திமி
நடனமாடிடும் மயிலே!
பக்கத்தில் வா இனி
முத்தத்தில் தோய் கிளி
சொர்க்கத்தை தா இனி
சுந்தரக் கிளியே!"
அவன் இதயம் பாடும்.

நெஞ்சக முரசுகள்
முழங்குது முழங்குது
கொஞ்சிட வந்தவன்
நெஞ்சம் அஞ்சும்!

"எரிகிறதே
இரு விழிகளில் மோகத்தீ!
வழிகிறதே
இரு இதழ்களில் மோகத்தேன்!"
அவன் இதயம் ஏங்கும்.

"விளக்கு இல்லையெனில்
விழிகள் போதுமடி
எரியுமே!
போதை இல்லையெனில்
இதழ்கள் போதுமடி
பருகுவேன்!

தயங்கி நாம் தொடங்கி
விடியும் வரை
மயங்கிச் சாயலாம்!

உச்சி முதல் தொடங்கி
உள்ளங்கால் வரைக்கும்
உணர்ந்து கலந்து
நாம் ஒருவர் ஆகலாம்!"

நினைத்தான்
வெளியே சொல்லாமல்!
அணைத்தான்
வேகத்தைக் காட்டாமல்!

முகத்தை
இரு கைகளில் ஏந்தினான்!

நிலவு
இமைகளைச் சாத்தியது!

மூக்கில்
உதட்டால் உரசினான்!

முத்துக் குடம்
மெல்ல முணுமுணுத்தது!

நெற்றியின் மையத்தில்
உதட்டால் ஒற்றினான்.
ஒத்தடச் சூட்டில்
சித்திரம் சிலிர்த்தது!

கன்னத்தை
ஏந்திய கர விரல்கள்
காதுமடல் வருட
கிண்ண இதழ் துடித்தது!

முகம் முழுக்க
வாசம் பார்த்த உதடுகளை
மோகம் கொண்ட இதழ்கள்
போதும் வா என்னிடம்
என்று அழைத்தன!

சொல்லவா முடியும்?
அதுதான்
துடி துடித்தன!

நிலவில் இறங்கிய
முதல் மனிதன் போல
முதன் முதலாக
இதழில் இறங்கினான்!

இமைகள் படபடக்க
திறந்து திறந்து
அவள் மூடினாள்!
இமைகள் திறக்கையிலே



வைர மின்னலென
ஒளி வீசினாள்!

"பச்சைக் குழந்தையடி
நீ எனக்கு
பச்சைக் குழந்தையடி!"

கன்னத்தோடு கன்னம் சேர
கைகளாலே இடை பிடித்தான்!

சின்ன இடை வழுக்கும்
தொட்ட இடம் சிவக்கும்!

மெல்ல மார் சேர
மூச்சுப் பட படக்கும்!
கைகள் படை எடுக்க
இதயம் தட தடக்கும்!

முதலில் விழி பாயும்
பின்னர் கை பாயும்
முதலில் தயக்கம் வரும்
பின்னர் மயக்கம் வரும்!

கூந்தல் தனைக் கோதி
காந்தள் விரல் நீவி
மூங்கில் தோள் வருடி
முன்னிரண்டு எழில் தேடி
மூழ்கிக் கிடக்கையிலே
மூச்சிரண்டும் அனலாகும்!

தடுப்பாள் பலமிருக்காது.
மறுப்பாள் உரமிருக்காது!

"மீட்டாத வீணை
சுரம் தருமோ?
பட்டை தீட்டாத வைரம்
ஒளி தருமோ?
கைபடாத மேனி
சுகம் தருமோ?"



கேள்வி அவன் தர
கள்ளி
பதில் தர மாட்டாள்!

மௌனத்தின் பொருள்
அவன் அறியாததா?

மலரின் மௌனம்
வண்டுக்கான
வரவேற்புத்தானே!

வந்தாடு வண்டே
வந்தாடு!
பந்தாடு என்னை
பந்தாடு!

பரிமாறவும்
பசியாறவும்
பிரியமான மலரை
உரிமையாக்கு!

புரிந்தது மௌனம்
மலரிடை புகுந்தது
வண்டு!

நனைய நனைய
மகரந்தம்!
கனியக் கனிய
பேரின்பம்!

இன்று புதிதாய்
பிறந்தோம்!
இன்று புதுமை
அடைந்தோம்!

கூடிய ஈருயிர்
குதூகலிக்க,
கூடிய மேனிகள்
சாந்தி பெறும்!



மனம் எங்கும்
உவகை ஊறும்!

"காமம் என்பது
மலரினை விடவும்
மெல்லியது!
அதன் பக்குவம்
அறிந்தவர் மட்டும்
பயன் பெறுவர்!
பேரின்ப நயத்தை
பெற்றிடுவர்!"
என்றார் வள்ளுவர்
உண்மை அது!

தருவது ரதீகன்

"மலரினும் மெல்லிது காமம்
-சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார்"
அதிகாரம்: 129. குறள்: 1289

---

# சிந்தியா பதில்கள்

**★ "அரசியல் தீர்வை கண்டே தீருவோம்!" என்று ஜனாதிபதி உரத்த தொனியில் கூறியுள்ளாரே?**

எம்.எச்.சும்சுதீன், மாத்தளை.

ஜனாதிபதியின் விவேகத்திற்கு ஒரு சபாஷ்! உலகம் நம்மைப் பார்த்துக் கூற நினைப்பதை எல்லாம், நாமே முந்திக் கொண்டு கூறிவிட்டால், புத்தி சொல்ல நினைப்போரும் வாயைத் திறக்க முடியாமல் போய்விடும்.

**★ அப்பாவிகள் என்று யாரை அழைக்கலாம்?**

செல்வி சி.சித்ரா, மட்டக்களப்பு.

ரெட்டைமாடி பஸ்கள் நம்நாட்டில் பரவலாக ஓடிக்கொண்டிருந்த நேரம் அது.

பயணி ஒருவர் சாரதிக்கு பக்கத்து ஆசனத்தில் அமர்ந்திருந்து வளவளவென்று பேசிக்கொண்டிருந்தார்.

சாரதிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அதனைக் காட்டிக் கொள்ளாமல்; "நீங்கள் மேலே போய் அமர்ந்துகொண்டு பார்த்தால் இயற்கைக் காட்சிகள் அழகாகத் தெரியும்" என்று கூறி மேலே அனுப்பினார்.

பயணி போன வேகத்தில் திரும்பி வந்தார்.

சாரதி எரிச்சலோடு, "ஏன் திரும்பி வந்துவிட்டீர்கள்?" என்று கேட்டார்.

பயணி சொன்ன பதில்:

"ஐயோ! அது ஆபத்தான இடம். மேலே பஸ்ஸில் சாரதியே இல்லை!"

**★ ரஜினியின் அடுத்த படம் எப்போது?**

எச்.இல்யாஸ், கல்முனை.

'ராமகிருஷ்ணா' என்று பெயர் சூட்டப்படலாமாம். இசை தேவா. இயக்கம்: விக்ரமன். ரஜினியின் நண்பராக அமிதாப் பச்சன் கௌரவ வேடத்தில் தோன்றக்கூடுமாம். மீனாவும், சிம்ரானும் ஜோடிகளாம். இப்போதைக்கு அறிந்த தகவல்கள் இம்புட்டுத்தான்!

**★ கடன் வாங்கும்போது சிரித்துவிட்டு, கடனைத் திருப்பிக்கேட்டால் முறைக்கிறார்களே?**

எம்.உருத்திரகுமார், பதுளை.

ஒருத்தன் தன் நண்பனுக்கு கடன் கொடுத்தான். நண்பன் அதனை பல நாட்களாகியும் திருப்பிக் கொடுக்கவில்லை.

கடன் கொடுத்தவன் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். அவன் இவனிடம் வாங்கியது போலவே இன்னும் பல பேரிடம் கடன் வாங்கினது தெரியவந்தது. நேராக அவனிடம் போனான்.

"மரியாதையாக என்னுடைய பணத்தைத் திருப்பிக்கொடுத்துவிடு. இல்லையென்றால் உனக்கு கடன் தந்த மற்றவர்களிடம் போய், 'அவன் எனக்கு தர வேண்டிய பணத்தை தந்துவிட்டான்,' என்று சொல்வேன். பின்னர் ஏனையோர் வந்து உன் உயிரை எடுத்து விடுவார்கள்!" என்றான்.

அவன் கைக்கு பணம் வந்து சேர்ந்தது.

**★ காதலித்துவிட்டு கடைசியாக, "எங்கிருந்தாலும் வாழ்க!" என்று சொல்பவர்கள் பற்றி?**

சி.விஸ்வலிங்கன், திருமலை.

சமீபத்தில் படித்த ஒரு சின்னக் கவிதை:

"அன்பே!
நீயின்றி
வாழச் சொல்லாதே.
சாகச் சொல்!"

**★ இந்தியாவில் கூட்டரசாங்கம்தான் மறுபடியும் பதவிக்கு வரும் என்கிறார்களே?**

க.ஸ்ரீதர், நுவரெலியா.

ஆம். ஆனால் காங்கிரஸ் கூட்டாச்சி வருமா என்பதுதான் சந்தேகம்! "ராமர் கோயில் கட்டியே தீருவோம்!" "இரண்டு பிள்ளைகளுக்கு மேல் உள்ளவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது!" போன்ற பாரதிய ஜனதாவின் அதிரடிப் பிரசாரங்கள் அக்கட்சிக்கே வாக்குச் சேதாரமாக முடியலாம். மறுபுறம் சமீபத்திய குண்டு வெடிப்புக்கள் அந்த சேதாரத்தை சீர்செய்துவிடக்கூடும்.

**★ 'நாம் இருவர், நமக்கு இருவர்' படத்தில் மீனாவின் நடிப்பு எப்படி?**

வி.மல்லிகா, கொழும்பு-09.

நடிப்பை எங்கே காட்டுகிறார், மகேஸ்வரிக்கு போட்டியாக கவர்ச்சித் துடிப்பை அல்லவா காட்டுகிறார். அந்த ஆரம்ப அறிமுகக் காட்சி இருக்கிறதே... அப்பப்பா... கவர்ச்சிக்கடலில் துள்ளும் மீன்.

**★ யாழ் மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளை கைப்பற்றிய கட்சிகளின் அடுத்த கட்டப் பணி என்ன?**

பி.ராஜசேகரன், யாழ்ப்பாணம்.

அடுத்து வரும் தேர்தல்களில் பெரிய பதவிகள் என்ற பெரிய மீனைப் பிடிக்கும் வரை, இந்தச் சின்ன மீன்களைப் போட்டுக் கொண்டே இருப்பது.

**★ அடுத்தவர் துன்பத்தில் இன்பம் காண்போர் எப்படிப் பட்டவர்கள்?**

பா.விஜயன், கைதடி.

ஒரு சட்ட நிறுவன வரவேற்பாளர் தொலைபேசி அழைப்பு மணியைக்கேட்டு அதனை எடுத்தாள்.

"திரு. ஸ்மித் இருக்கிறாரா?" என்று கேட்டது குரல்.

"மன்னிக்கவேண்டும், அவர் நேற்றிரவுதான் மரணமானார்!" என்றாள் வரவேற்பாளர்.

"திரு.ஸ்மித் இருக்கிறாரா?" மறுபடியும் கேட்டது குரல்.

"நான் சொல்வது உங்களுக்குப் புரியவில்லைப் போல் இருக்கிறது. திரு.ஸ்மித் நேற்றிரவுதான் மரணமடைந்தார்!"

"திரு.ஸ்மித் இருக்கிறாரா?"

"நான் சொல்வது உங்களுக்கு விளங்கவில்லையா? ஸ்மித் இறந்துவிட்டார்" என்றாள் எரிச்சலுடன்.

"விளங்குகிறது. ஆனால் அதனை அடிக்கடி கேட்க ஆசையாக இருந்தது."



'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் பிரபுதேவா-மீனா

**★ தலைநகரில் தங்கு விடுதிகளில் இருந்த தமிழர்களுக்கு நேர்ந்த கதி?**

எஸ்.வீரபத்ரன், கொழும்பு-11.

1958, 77, 83 கலவரங்களில் காடையர்கள் தாக்க, காக்கி உடையினர் பார்த்துக் கொண்டு நின்றனர். இப்போது காக்கி உடையினரே நேரடியாக நின்று தமிழர்களை வெளியேற்ற ஆரம்பித்திருக்கின்றனர். முன்னேற்றம்தான்!

**★ பிரபாகரன்கள் தோன்றுவதற்கு முன்னைய ஆட்சியினர்தான் காரணம் என்று ஜனாதிபதி கூறிவருகிறாரே?**

ஆர்.புஸ்பநாதன், மட்டக்களப்பு.

தோன்றிய பிரபாகரன்கள் தொடர்ந்து போரிட யார் காரணம்?!

**★ தமிழ்நாட்டிலும் குண்டுகள் வெடிக்கத் தொடங்கிவிட்டதே?**

எம்.பாக்கியசோதி, முந்தல்.

அன்று மசூதியை இடித்தவர்களும், மதவெறியைத் தூண்டியவர்களும் தண்டிக்கப்பட்டிருந்தால், இன்று குண்டு வெடிப்புக்களைக் கண்டித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை!

**★ தம்பலகாமம் படுகொலை விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதே?**

எஸ்.கணேஷ், திருமலை.

அங்கு பலியானவர்கள் பயங்கரவாதிகள் என்றுதான் முதலில் அரச தொலைக்காட்சி அறிவித்தது! அமுக்கத்தான் பார்த்தனர். முடியாது என்று தெரிந்த பின்னர்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், இது நிரந்தர நடவடிக்கையாக இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? கொழும்பு ஏரிகளில் தமிழர் பிணம் மிதக்கக் காரணமானவர்களையும் கையும் மெய்யுமாகத்தானே பிடித்தனர்? பெரிதாக விளம்பரமும் செய்தனர். இன்று அவர்கள் சுதந்திரப் பறவைகள். எனவே முடிவு தெரியும்வரை இப்படியான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க 'முரசு' தயாரில்லை.

**★ கொம்பனித் தெரு குண்டுவெடிப்பை இளவரசர் சாள்ஸ் கண்டித்திருக்கிறாரே?**

கே.ராகவன், சிலாபம்.

கொம்பனித் தெரு சம்பவம் படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான போரில் ஒரு பகுதியே தவிர, சாதாரண மக்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. விபரம் புரியாமல் சாள்ஸ் கண்டித்திருக்கிறார். நிற்க, அதற்கு முன்னர் தம்பலகாமத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட சம்பவமும், கொழும்பில் விடுதிகளில் இருந்த தமிழர்கள் வீதியில் இறக்கப்பட்ட சம்பவமும் சாள்ஸ் போன்ற மனிதாபிமானிகளுக்கு(?!) ஏன் தெரிவதில்லை?!

---

ஸ்போர்ட்ஸ்

## அஸார் மன்னிப்பு!



பீகார் மாநிலத்தில் உள்ள ஜம்ஷெட்பூரில் இம்மாதம் 6ம் திகதி ஹைதராபாத்-பீகார் அணிகளுக்கிடையே ரஞ்சிக்கோப்பை லீக் போட்டி ஒன்று நடைபெற்றது. இப்போட்டியில் ஹைதராபாத் அணி சார்பாக இந்திய அணி கப்டன் அஸாருதீன் கலந்து கொண்டார்.


இப்போட்டியின்போது அஸாருதீனின் தொப்பியை கிரிக்கெட் இரசிகர் ஒருவர் ஆர்வ மிகுதியால் திருடிவிட்டார். இருப்பினும் அது ஒரு மணி நேரத்திற்குள் அஸாருதீனிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. ஆனால் அஸாருதீன், "பீகார் மக்கள் அனைவரும் திருடர்கள். திருட்டு அவர்களது பிறவிக் குணம்!" என்று ஆத்திரத்தில் கூறிவிட்டார்.

இதைக் கண்டித்து சட்டத்தரணி ஒருவர் அஸார்மீது வழக்குத் தொடர்ந்துள்ளார். வழக்கை விசாரித்த நீதிபதி அஸாருதீனை கடந்த 12ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி சம்மன் அனுப்பினார். ஆனால் அஸாருதீன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதனால் மார்ச் 4ம் திகதிக்கு வழக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே அஸாருதீன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"நான் பீகார் மக்கள் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளேன். அவர்களிடம் இருந்து நான் தொடர்ந்து நல்லாதரவிற்கு எப்போதும் நன்றியுடையவனாக இருப்பேன்.

அவர்களின் உணர்வுகளை எந்த வகையிலாவது புண்படுத்தி இருந்தால் அதற்காக எனது மனப்பூர்வமான மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன்."



## கப்டனுக்கு வந்தகோபம்

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் தென்னாபிரிக்கா-அவுஸ்திரேலியா ஆகிய இரு அணிகளுக்கிடையே சமீபத்தில் மூன்றாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் மார்க் வோவ் பேட்டிங் செய்து கொண்டிருந்தபோது மட்டையால் ஸ்டம்ப் மீது அடித்துவிட்டார்.

இதனால் அவர் ஹிட் விக்கெட் முறையில் அவுட்டானதாக தென்னாபிரிக்க வீரர்கள் அம்பயரிடம் முறையிட்டனர். இது மூன்றாவது அம்பயரின் முடிவுக்கு விடப்பட்டது. மூன்றாவது அம்பயரின் தீர்ப்பின்படி மார்க் வோவ் அவுட்டில்லை என அறிவிக்கப்பட்டார். இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. நடுவரின் தீர்ப்பால் ஆத்திரத்தில் இருந்த தென்னாபிரிக்க அணியின் கப்டன் ஹன்ஸி குரோன்ஞ், ஸ்டம்பை எடுத்து அம்பயரின் அறை யன்னல்மீது கோபத்துடன் வீசி எறிந்தார். இது பெரிய பிரச்சனையாக்கப்பட்டது.

இது தொடர்பாக குரோன்ஞ் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாக இருந்தது. ஆனால் தனது நடவடிக்கைக்கு குரோன்ஞ், அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைவரிடம் கடிதம் மூலமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். இதனால் குரோன்ஞ்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்று கூறப்படுகிறது.

## அரவிந்தவுக்கு பாராட்டு



இலங்கை அணியின் உதவிக்கப்டனும் சிறந்த துடுப்பாட்ட வீரருமான அரவிந்த டி சில்வா, தன்னுடைய அணியின் மேன்மைக்கே முதலிடமளிக்க முன்வந்தமையினால், தனக்குக் கிடைக்க வேண்டிய 15வது சதத்தைத் தட்டிக்கழித்தார்.

மொஹாலியில் நடைபெற்ற போட்டியின் போது 98 ஓட்டங்களை எடுத்திருந்தவேளை, தொடர்ந்து விளையாட போதுமான வெளிச்சம் இல்லை என்று மற்றவர்கள் கூறியபோது, எதுவிதமான மறுப்பும் சொல்லாமல் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

சிறிது நேரத்தில் ஒளி ஓரளவு பிரகாசமானதும் மீண்டும் விளையாட வந்தார். சதத்தையும் பெற்றார். 'ஆக இரண்டு ஓட்டங்கள்தானே- சிலநிமிடங்கள்தானே' என்று அடம்பிடிக்காமல் பெரிய மனதுடன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டார். "அவருடைய இப்பெருந்தன்மை வருங்கால இளம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு ஒரு சிறந்த முன் உதாரணமாகும்." இவ்வாறு பாராட்டியுள்ளது இந்திய விளையாட்டு சஞ்சிகை ஒன்று.

# இராமாயணம் அங்கம் 122

இராமபிரான் அயோத்தி மாநகரின் அரியணையிலமர்ந்து அரச பரிபாலனத்தை ஏற்கப் போகிறார் என்ற செய்தி அகிலமெங்கும் பரவியது. தேவலோக வாசிகளும் இச் செய்தி அறிந்து பரவசமடைந்தனர்.

அயோத்தி மாநகரெங்கும் விழாக்கோலம் பூண்டது. கோசலநாட்டு மக்கள் அனைவரும் குதூகலமடைந்தனர். அந்நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக அயோத்தி மாநகரை வந்தடைந்த வண்ணமிருந்தனர்.

*தால் அழகு மிளிர சுற்றப்பட்ட பீடத்தை சிறப்புமிக்க பளிங்கு மாடத்தில் வைத்தனர். அப்பீடத்தின் மீது பலதரப்பட்ட அணிமணிகள் பூணப்பெற்ற, திரண்ட தோள்களையுடைய வீரனான இராமபிரான், இலக்குமி தேவியின் அம்சமான சீதாப்பிராட்டியாருடன் அமர்ந்தார்.*

அரியணை ஏறி அமர்வதற்கு முன்னர் இராமபிரான் நீராடுவதற்காக சீதாப்பிராட்டியாருடன் வந்தமர்ந்த பீடத்தின் சிறப்பை கம்பர் பெருமான் மேற்கண்டவாறு படம் பிடித்துக் காட்டுகிறார்.

★★★

## அரியணை அமர்தல்

கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமான், இராமபிரானின் திருமுடிசூட்டும் வைபவத்தை மிக எளிய நடையில் ஆழமான கருத்துக்களை புதைத்து அருமையான செய்யுளாக்கித் தருகிறார்.

**அரியணை அனுமன் தாங்க,**
**அங்கதன் உடைவாள் ஏந்த,**
**பரதன் வெண்குடை கவிக்க,**
**இருவரும் கவரி பற்ற**
**விரை செறி கமலத்தாள் சேர்**
**வெண்ணையூர்ச் சடையன் தங்கள்**
**மரபுளோர் கொடுக்க வாங்கி**
**வசிட்டனே புனைந்தான் மௌலி**

*(யுத்த காண்டம்)*

**பொருள்:**

***அனுமன் அரியணையைத் தாங்கி நிற்கவும், அங்கதன் உடைவாளைத் தாங்கிப் பிடித்து நிற்கவும், வெண்கொற்றைக் குடையை பரதன் பிடித்து நிற்கவும், இலக்குவனும் சத்துருக்கனும் வெண் சாமரையை வீசவும், திருமகளாகிய இலக்குமிதேவி வீற்றிருக்கும் செந்தாமரைகள் நிறைந்து காணப்படும் திருவெண்ணை நல்லூரைச் சேர்ந்த சடையப்பவள்ளலின் மூதாதையோரில் ஒருவர் முடியினை எடுத்துக் கொடுக்க, வசிட்ட மாமுனிவர், இராமபிரானின் சிரசிலே முடியைச் சூட்டினார்.***

★★★


இராம காவியத்தின் உச்சக் கட்டம் இராமபிரான் அயோத்தியின் அரியணையில் ஏறி அமர்ந்து மகுடம் புனையும் காட்சிதான். இந்த மிக முக்கியமான கட்டத்தை, தமது ஆற்றலால் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டும் கவிஞர் பெருமான், தன்னை வளர்த்து சான்றோனாக்கிய திருவெண்ணை நல்லூரைச் சேர்ந்த சடையப்ப வள்ளலாரைப் பக்குவமாகக் கொண்டுவந்து அறிமுகப் படுத்துகிறார்.

கம்பராமாயணத்தில் ஆங்காங்கே சடையப்பவள்ளலாரை அழைத்துவந்து எமக்கு அறிமுகம் செய்யும் புலவர் பெரும்,காவியத்தின் உச்சக்கட்டத்திலும் அந்த வள்ளலாரை அழைத்து வந்து விடுகிறார்.

தமிழ்கூறும் நல்லுலகில் தனியான தோரிடத்தை இன்று கம்பர் பெருமான்பெற்று சிரஞ்சிவியாக வாழ்வதற்கு வழி வகுத்துத் தந்தவர் சடையப்பர். அத்தகைய பரோபகாரியை-தனது காவியத்தைப் படிப்பவர் அனைவரும் நினைவுகூரத்தக்க நிலைக்கு உயர்த்தி- தனது நன்றியறிதலைச் செலுத்தி விட்டார். இத்தகைய செய் நன்றி மறவாத மனப்பாங்கு கவிஞர் பெருமானிடம் இருந்தமையினால்தான் கவிஞரும் என்றும் எல்லோராலும் போற்றிப் புகழத்தக்க நிலையினைப் பெற்றார் என்று கூறுவது மிகையாகாது.

★★★

# பட்டாபிஷேகப் பெருவிழா



இரவோடிரவாக மகுடாபிஷேகம் காணப்புறப்பட்டு வரும் மக்களை இடையிடையே மறித்து அவர்களுக்கு விருந்து படைத்து அனுப்புவோர், வீதியோரங்களில் கொட்டகைகளை அமைத்து காத்து நின்றனர். பல காதை தூரம் நடந்து வருவோரின் களைப்பை நீக்க ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல்கள் வைத்திருந்தனர். அவ்விடங்களில் வெறும் தண்ணீர் மட்டுமல்ல, இளநீர், மோர், பழரசம் ஆகிய பானங்களையும் அளித்து உபசரித்தனர்.

வீதிகளிலெல்லாம் மக்கள் கூட்டம் பெருகியமையினால் அவர்கள் இருளில் இடம் தெரியாமல் தடுமாறாதிருக்க ஆங்காங்கே நெய் விளக்குகள், எண்ணெய் விளக்குகள், பாளைப் பந்தங்கள் ஆகியன ஏற்றப்பட்டு எங்கும் பகல் போல் ஒளி பெருக்கியது.

அன்று பொழுது புலர்வதற்கு முன்னரே மக்கள், மகுடாபிஷேக வைபவம் இடம்பெறும் மண்டபத்தில் வந்து மொய்த்துவிட்டனர். பிறநாட்டு மன்னர்களும் அரசப் பிரதிநிதிகளும் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கேற்ற மண்டபம் தனிக்களையுடன் காட்சி தந்தது. அமைச்சர் சுமந்திரரும் ஏனைய அரச அதிகாரிகளும் மன்னர்களை வரவேற்று அவரவர்களுக்குரிய இடங்களில் அமரச் செய்தனர்.

தவசிரேட்டர்கள், முனிவர்கள், அந்தணர்கள் மற்றும் சான்றோரை வரவேற்று உபசரிக்கும் பொறுப்பினை வசிட்டமா முனிவரின் பிரதம சீடர்கள் ஏற்றுக்கொண்டனர். விபீடணர், சுக்கிரீவன், அங்கதன் போன்றாருக்கும் இருக்கைகள் ஏற்பாடாகியிருந்தன. ஆனால் இவர்களில் எவரும் ஆசனங்களில் இருக்க மறுத்து, தங்கள் சொந்த இல்லத்தின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து, பணிவிடைகள் செய்வது போன்று பலதரப்பட்ட வேலைகளையும் செய்து கொண்டிருந்தனர்.

## நீராட்டு

இராமபிரான், சீதாப்பிராட்டியார் ஆகிய இருவரும் நீராடுவதற்குரிய இடத்தைப் போய்ச்சேர்ந்தனர். அங்கே விழாவுக்கு வருகை தந்த வெவ்வேறு நாட்டு மன்னர்களும் தத்தமது நாடுகளில் பெறப்பட்ட புனித நீரை பொற்கலசங்களில் சேகரித்து, யானைகளில் ஏற்றிக்கொண்டு வந்து சேர்த்திருந்தனர். ஆஞ்சநேயர் கொண்டு வந்த தீர்த்தக் கலசங்களும் வரிசைக் கிரமமாக வைக்கப் பட்டிருந்தன.

**மாணிக்கப் பலகை தைத்து**
**வைரத் திண் கால்கள் சேர்த்தி**
**ஆணிப் பொன் சுற்றி முற்றி**
**அழகுறச் சமைத்த பீடம்**
**ஏணூற்ற பளிங்கு மாடத்து**
**இட்டனர், அதனின் மீது**
**பூணுற்ற திரள் தோள்வீரன்**
**திருவொடும் பொலிந்தான் மன்னோ.**

*(யுத்த காண்டம்)*

**பொருள்:**

***மாணிக்கப் பரல்களால் அமைக்கப்பட்ட பலகையை திடமான வயிரத்தினாலான கால்களைப் பொருத்தி, மாற்றுக்குறையாத தங்கத்*** (தொடர்ச்சி மேலே)

## இராஜகுமாரன்

முறைப்படி வேதங்களை முற்றாக உணர்ந்தவரான முனிபுங்கவர் வசிட்டர், ஆரம்பக் கிரியைகளைத் தொடக்கி வைத்தார். அந்தணர்களும் வேதியர்களும் முனிவர்களும் மந்திரங்களை ஒரே தொனியில் ஓதலாயினர். மங்கலப் பாடல்களை மங்கையர் குழாம் ஒருபுறம் நின்று பாடலாயினர். சங்குகள் முழங்கின. இன்னிசைக் கருவிகள் மற்றொரு புறம் இசைக்கப்பட்டன. அத்தனை ஒலிகளும் ஒன்றாக இணைந்து வான் முட்டி எதிரொலித்தன.

சரயு நதியிலிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தத்தினால் வசிட்ட மாமுனிவர் இராமபிரானையும் பிராட்டியாரையும் நீராட்டினார். இதனைத் தொடர்ந்து தேவர்கள், தங்கள் தோற்றத்தை வேறொருவரும் கண்டுகொள்ளாதவாறு நீராட்டினர். கங்கை நதித் தீர்த்தமும் கடல்களிலிருந்து பெறப்பட்ட தீர்த்தங்களும் இருவரின் சிரசுகளில் சொரியப் பட்டன. முனிவர்கள் தமது கைகளால் நீராட்டியதைத் தொடர்ந்து கதிரவன் புதல்வனான சுக்கிரீவன் நீராட்டினார்.

இலங்கையிலுள்ள புனிதஸ்தலங்களிலும் புண்ணிய நீர்நிலைகளிலுமிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தங்களை இலங்கை வேந்தன் விபீடணர் இராமபிரானுக்கும் பிராட்டியாருக்கும் சொரிந்தார். ஆஞ்சநேயர் தமது பங்குக்கு ஏழு கடல்களுக்கப் பால் பெறப்பட்ட புண்ணிய சுனையிலிருந்து கொணர்ந்த தீர்த்தத்தை சொரிந்து இருவர் தாள்களிலும் வீழ்ந்து வணங்கி எழுந்தார்.

புனித நீராட்டுச் சடங்குகள் முடிந்ததும் இராமபிரானும் சீதாப்பிராட்டியாரும் அரியணையில் ஏறி அமர்ந்தனர்.

## பரதனுக்குப் பட்டம்

இராமபிரான் தன்னுடைய மகுடாபிஷேகம் முடிந்ததும், தனக்குப் பின் அயோத்தி மாநகரின் ஆட்சிப்பொறுப்பை ஏற்க ஏற்ற வாரிசான- தன் தம்பி பரதனை அழைத்து, இளவரசனுக்குரிய மகுடத்தைச் சூட்டினார். அத்துடன் செங்கோலையும் பரதன் கையில் கொடுத்து, பரிபாலனத்தில் தன்னுடன் இணைந்து பங்கேற்குமாறு பணித்தார்.

**விரதநூல் முனிவன் சொன்ன**
**விதி நெறி வழாமை நோக்கி**
**வரதனும் இளைஞற்கு ஆங்கண்**
**மாமணி மகுடம் சூட்டி**
**பரதனைத் தனது செங்கோல்**
**நடாவுறப் பணித்து நாளும்**
**கரை தெரிவிலாது போகக்**
**களிப்பினுள் இருந்தான் மன்னோ.**

**பொருள்:**

***வேத நூல்களை முறைப்படி கற்ற வசிட்ட மாமுனிவர் அவ்வேதங்கள் கூறிய முறைப்படி செய்யவேண்டியவற்றைச் செய்து முடித்தார். இராமபிரான், தனக்குப் பின் அரசாட்சி செய்வதற்கான இளவரசனுக்குரிய மகுடத்தை பரதனுக்குச் சூட்டி, செங்கோல் செலுத்துமாறு பணித்துவிட்டு, கரைகாண முடியாத இன்ப வாழ்வில் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்திருந்தார்.***

**(அடுத்த இதழில் நிறைவு பெறும்)**

### இராமாயணப் போட்டி: 120

**சரியானவிடை:- அறிவாற்றலுள்ளவர், தேகபலம் உள்ளவர், புகழ் பூத்தவர், தைரியசாலி, அஞ்சாதவர், நோயற்றவர், சோம்பலற்றவர், வாக்குச் சாதுரியமுடையவர்.**

1. செல்வி டுஷானி, டில்லிக்கூல்ட்றி த.வி.,லிண்டுல.
2. ஆர்.எஸ். செல்வநாயகம், கிளாஸ்கோ தோட்டம், அக்ரபத்தனை.
3. 5. கா. சதீஸ், ஆர்.டி.ஏ. விடுதி, பூங்கா வீதி, வவுனியா.
4. டெறிக் நிஷாந்த், சென் ஜோசப் கல்லூரி, கொழும்பு-10.
5. தி. சசிகரன், 465/6 ஏ, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

**போட்டி இல. 122** கேள்வி:- **இராமபிரானுக்கு முடிசூட்டியவர் யார்?**

பெப்ரவரி 28 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல. 122, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# அதிபரும் – இளவரசரும்

*பி.கிளின்ரன்:* ஹலோ சாள்ஸ், ஸ்ரீலங்கா சுற்றுப்பயணம் எப்படி?

*சாள்ஸ்:* சுற்றுப்பயணமல்ல, சூட்டுப்பயணம் என்றுதான் சொல்லவேண்டும். ஒரு வாரம் முழுசாகத் தங்கியிருந்தால், ஒரு நீக்ரோவாகத்தான் திரும்பிவந்திருப்பேன்.

*பி.கி:* **நிறுத்தும்! நிறுத்தும்! நிற வெறிப் பேச்சு வேண்டாம். யாராவது ஒட்டுக் கேட்டால் என் பதவிக்கே வேட்டு வைத்துவிடுவார்கள்.**

*சாள்ஸ்:* அந்தப் பயம் எனக்கில்லை ஐசே.

*பி.கி:* **ஆமாம், ஆமாம், உமது பதவிக்கு என்ன எலெக்ஷனா வரப்போகிறது, நாட்டில் இருந்து கலெக்ஷன்தான் உமது கஜானாவுக்கு வரும்.**

*சா:* வயிறு எரியாதீர் கிளின்ஸ்.

*பி.கி:* **அது என்ன கிளின்ஸ்.**

*சா:* எனக்குப் பிடித்தமானவர்களின் பெயர்களை மடக்கிச் சுருக்கி செல்லமாகக் கூப்பிடுவதுதான் எனக்குப் பிடிக்கும்.

*பி.கி:* **இடுப்பு முறிந்ததோடு குதிரையேற்றத்துக்கு குட்பை சொல்லிவிட்டீராக்கும்.**

*சா:* சேச்சே... எல்லாக் குதிரையுமா சண்டித்தனம் பண்ணுகிறது? சில குதிரைகள் மட்டும்தான் அடங்காமல் திமிறுகின்றன. யூ.நோ..

*பி.கி:* **ஐ.நோ. ஐ.நோ. எனக்குப் புரிகிறது. பொறுத்த நேரத்தில் தள்ளிவிழுத்திவிடும் குதிரைகளிடம் எப்போதும் ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்.**

*சா:* யா! நன்றாய் சொன்னீர்கள்!

*பி.கி:* **நான் எங்கே சொன்னேன்?**

*சா:* வேறு யார் சொன்னது, ஷேக்ஸ்பியரா?

*பி.கி:* **சும்மாயிரும் ஐசே, சிரிக்கிற 'மூட்'டிலா இருக்கிறேன்? நான் சொல்லவில்லை. என் அனுபவம் சொல்கிறது என்றேன்.**

*சா:* என்ன 'மூட்' சரியில்லை என்கிறீர்? மூட்டுக்கு என்னாச்சு? பாட்ஸ் பாட்ஸாக கழற்றி வைத்து விட்டார்களா? பொல்லாத சிறுக்கிகள்!

*பி.கி:* **கிண்டலா, வாய்க்கு மெள்ளக் கிடைத்த சுண்டலா?**

*சா:* உம்மோடு கிண்டல் பண்ண முடியுமா? அணுக்குண்டே உமது விரல் நுனியில் தானே இருக்கிறது.

*பி.கி:* **சும்மாபோம் ஐ.சே.. அதைவிடப் பயங்கரமான குண்டுகள் எல்லாம் வெளியே இருக்கின்றன. ஒவ்வொன்றாக காலடியில் உருண்டுவந்து கிடந்து மிரட்டுகின்றன.**

*சா:* ஆபத்தான குண்டுகளோடு விளையாடினால் இப்படித்தான்.

*பி.கி:* **இதிலே அரசியல் விளையாடுகிறது.**

*சா:* அழகிகளின் ரூபத்தில் விளையாடுகிறது என்று சொல்லும்.

*பி.கி:* **கரெக்ட்! நேற்றுவரை என் கோட் பொக்கற்றில் இருந்தவர்கள், இன்று கோட்டுப் படிக்கட்டில் நிற்கிறார்கள்!**

*சா:* இதனைத்தான் விதி என்கிறார்கள்.

*பி.கி:* **தன் பதிக்காக வாதிடுகிறாளே என் பிரிய சகி கிலாரி. அவள் மதி வெல்லும் விதியை!**



*சா:* உமக்குப் பின்னர் ஜனாதிபதியாகும் ஆசையில் உமக்காக வக்காலத்து வாங்கித் தொலைக்க வேண்டி இருக்கிறதாக்கும்.

*பி.கி:* **உமக்கென்ன கொடுத்துவைத்த ஆளப்பா!**

*சா:* ஏன் ஐசே எரிகிறீர்?

*பி.கி:* **உமது முன்னாள் மனைவி தவிர வேறு யாரும் இந்நாள்வரை புகாரே கூறவில்லை, உம் பெயரும் கெடவில்லை.** (பெருமூச்சுவிடுகிறார்)

*சா:* ஏற்கனவே நாறிக்கெட்ட பேர்தானே, புதிதாகப் புகார் கூறி கெடுக்க என்ன இருக்கிறது என்று நினைத்துவிட்டார்கள் போலிருக்கிறது.

*பி.கி:* **எதற்கும் கவனமாக இரும்!** (பாடுகிறார்)
**பெண்களை நம்பாதே-கண்களே**
**பெண்களை நம்பாதே!**

*சா:* ஆண்களை மட்டும் நம்பலாமாக்கும் அப்படியானால் உறவு இருந்தது என்ற உண்மையை சொல்லித் தொலைக்க வேண்டியதுதானே என்று நான் கூற மாட்டேன். ஏன் தெரியுமா?

*பி.கி:* **ஏன் ஐசே!**

*சா:* பாம்பின் கால் பாம்பறியும்! இனம் இனத்தோடு சேரும். ஹாஹாஹா.

# வேலும் கோலும்



பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியைப் பிடித்து, கலைஞரது நட்பை நாடினால், கலைஞர் என்ன கூறுவார்?

**பாரதிய ஜனதா தீண்டத்தகாத கட்சியல்ல, ஆனால் தீண்டத்தகாதாரோடு கூட்டுச் சேர்ந்த கட்சி. இப்போது அந்த கூட்டைக் குலைத்துவிட்டு நம் நட்பை நாடி வந்திருக்கிறார்கள்.**

**வந்தாரை வாழவைக்கும் தமிழகம் வாஜ்பேயியையும் பிரதமராய் ஆளவைக்கும் என்பதை நிரூபிக்க வேளை வந்துவிட்டது. இந்த வேளை நமக்கொரு வேலையைத் தந்திருக்கிறது. அந்த வேலைதான் அன்னாரை பதவியில் அமர்த்துகின்ற வேலை. இந்த வேலை எம் கையில் வேலையும் தந்திருக்கிறது! அந்த வேல்தான் ஜெயலலிதா என்ற ஊழல் கூடாரத்தை ஊடறுக்கப்போகிறது! அந்த வேல் ஒரு கையில் இருக்க, மறுகையில் நாம் ஏந்தியிருப்பது ஒரு கோல்! அதுதான் செங்கோல்!**

# எலக்ஷன் டூயட்

*ஜெயா:* (பாடிக்கொண்டிருக்கிறார்)
பால் பழங்கள் தேவையென்றால்
வெளியில் சொல்லலாம்-வண்ணப்
பட்டுச் சேலை நகைகள் கேட்டு
வாங்கிக் கொள்ளலாம்
பதவி ஒன்று தேவையென்று
கூறமுடியுமா? இந்த
ஆசை தன்னை பிறர்க்குச் சொல்லி
தீர்க்க முடியுமா?

*சசி:* (பதிலுக்கு பாடுகிறார்)
**காசிருந்தும், கட்சியிருந்தும்**
**ஆட்சி இல்லையே-இந்த**
**நிலைமை சொல்ல உலகில் எந்த**
**மொழியும் இல்லையே**

*ஜெயா:* வருந்தாதே சசி வருந்தாதே.
(உற்சாகமாகப் பாடுகிறார்)
இலஞ்சம் உண்டு ஊழல் உண்டு
ஓடு ராணி
ஆட்சி வரும் காத்திருந்து
ஆடு ராணி!
நெஞ்சு வலி வந்தது
போதும் ராணி-இனி
நெஞ்சுயர்த்தி கோட்டுக்கு
ஓடு ராணி!

*சசி:*
**வெல்ல நினைத்தால்**
**வெல்லலாம்**
**வழியா இல்லை பொலிக்டிக்ஸில்!**
**லஞ்சக் கடலும் சோலையாகும்**
**ஆசையிருந்தால் நீந்திவா!**

*ஜெயா:* கண்ணில் தெரியும் வண்ணப்பதவி
கையில் கிடைத்தால் அள்ளலாம்
கருத்தில் வளரும் கறக்கும் எண்ணம்
கனிந்து சொத்தாய் பெருகலாம்
லால்ல லாலா லால்ல லாலா...லா




காதிலை பூ கந்தசாமி


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105. காலி வீதி வெள்ளவத்தை கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# நாம் நால்வர்





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# இளம் மேதை

↓ எத்தனையோ சாதனைகளை நம் தமிழ் பேசும் மாணவர்களும் படைத்திருப்பர். இனப்பிரச்சனையும், ஒடுக்குமுறையும் கெடுத்துவிட்டதே!

படத்தில் இருக்கிறார் பாருங்கள் பையன், ஆள் ஒரு வின்னன்.

இந்த நூற்றாண்டிலேயே மிக இளவயதில் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் பட்டம் பெற்ற மேதை இவர்தான்.

பெயர் கனேஷ் சிற்றம்பலம். இலங்கையில் இருந்து இலண்டன் சென்று குடியேறிய குடும்பத்தில் உதித்தவர்.

இங்கிலாந்தில் பிரசித்தி பெற்ற சுரே பல்கலைக் கழகத்தில் 1992ம் ஆண்டு ஜூலை மாதத்தில் இவர் கணக்கியல் பட்டதாரியானபோது வயது எத்தனை தெரியுமா? ஆக, 13 வயதும் 5 மாதமும் முடிந்திருந்தது.

தனது ஒன்பதாவது வயதில் உயர்தரப் பிரிவில் (A/L) கணக்கியல் 'ஏ'பிரிவில் சித்தியடைந்த சாதனையும் இவருக்கு உண்டு. உலக சாதனை படைத்த இளமேதை. நமக்கெல்லாம் பெருமை!



↑ ஒரே அச்சில் வார்க்கப்பட்டதுபோல இருக்கி றார்கள் அல்லவா. நான்கு பேரும் சகோதரர்கள். நான்கு பேருமே 80 வயதைக் கடந்துவிட்டவர் கள். ஆனாலும் இளமையாகத் தெரிகிறார் கள். காரணம், இசை. பிறரையும் மகிழ்வூட்டி தாங்களும் மகிழ்ந்து கச்சேரிகளை நடத்தி வரு கின்றனர்.

கடந்த 70 ஆண்டுகளாக இசைத்துறையில் ஈடுபட்டுள்ளனர். உலகில் மிக நீண்டகாலம் இசைத்துறையில் ஈடுபட்டுள்ள சகோதரர்கள் என்ற உலக சாதனையைப் படைத்துள்ளனர். 'த சிங்கில் வெபோர்ஸ்' என்ற இந்த நான்கு சோதரர்களின் வயது: ராங்ஃ 84, கிளைரன் 85, போல் 86, ஹென்றி 91. ஹென்றி செஞ்சரி போடுவார் போலிருக்கிறது. இசை ஆயுளுக்கும் உறுதி.

# ஆடி ஆடி




→ ஆடிக்கொண்டு பாடுகிறவர்களைப் பார்த்திருப்பீர்கள் ஆடிக்கொண்டு ஓடுகிறவரை யும் பாருங்கள். இது சுவாரசியமான ஓட்டம். ஆனால் சுலபமான ஓட்டமல்ல. இந்த ஓட்டத்தின் விதிகளை முதலில் பாருங்கள் கஷ்டம் புரியும். பாதத்தின் முன்பாகங்களால் மட்டும் தரையில் தட்டித்தட்டி நடனமாடியபடியே ஓடவேண்டும். பின்பாதங்கள் எக்காரணம் கொண்டும் தரை யில் படக்கூடாது; பட்டால் அவுட்.

தீவிரப்பயிற்சியின் காரணமாக இடைவிடாமல் தொடர்ந்து ஆறுமணி 12 நிமிடம் 53 நொடிகள் வரை ஆடிக்கொண்டே ஓடிமுடித்திருக்கிறார். ஓடிமுடித்த தூரம் 37.367 கிலோ மீட்டர் (23 மைல் 385 யார்)

இந்த ஆட்ட ஓட்ட உலகசாதனை வீரரின் பெயர் டேவிட் மீனன், அமெரிக்காவைச் சேர்ந்தவர். இவரால் 1996 ஜூன் 30ம் திகதி இந்த சாதனை ஆட்ட ஓட்டம் நிகழ்த்தப்பட்டது.

# வர்ண விஷம்



↑ அட நீலத் தவளை! அநேகமாக நீலநிறத் தவளைகளைக் கண்டிருக்க மாட்டீர்கள். தெற்கு மற்றும் மத்திய அமெரிக்காவில் காணப்படும் டெண்ட்ரா பேற்ஸ் மற்றும் பில்லோபேற்ஸ் என்ற இருவகைத் தவளைகளும் மிகக் கொடியவிஷம் கொண்ட பிராணிகள். இவற்றின் உடலைத் தீண்டுவதே அபாயமானது. படத்தில் காணப்படும் 'பில்லோபேற்ஸ்' என்ற நீலநிறத் தவளைகள் மிகக் கொடியவை. இவற்றை ஆராயும் விஞ்ஞானிகள், தங்கள் கைகளில் ஒன்றுக்கு மேல் ஒன்றாகக் கையுறைகளைப் போட்ட பின்னரே இவற்றை தொட்டு ஆராய்வார்களாம்.

அதனைத் தொடுவானேன் அவதிப்படுவானேன் என்று கேட்கலாம். என்ன செய்வது ஆராய்ச்சி செய்தால்தானே இந்த உண்மைகளைக் கண்டறிய முடிகிறது.

# பரத நாட்டிய அரங்கேற்றம்



யாழ் கொழுவுத்துறை அற்புதமலர் பேரம்பலம்-கிளாறம்மா தம்பதியினரின் புதல்வி செல்வி வனிதாவும், யாழ்/உரும்பிராய் செல்லையா-நடேஸ்வரி தம்பதியினரின் புதல்வி செல்வி விக்னேஸ்வரியும் இணைந்து வழங்கிய பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 10.01.98 அன்று கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கோலாகலமாக நடந்தேறியது.

இவர்கள் நடன ஆசிரியை (கலைமன்றம் யாழ் கிளை) செல்வி லலிதாஞ்சனா கனகேந்திரம் அவர்களின் மாணவிகளாவர்.

பல்கலையும் பயின்று பேரும்புகழும் பெறுக வென இவர்களைப் பெற்றோர், உறவினர் கள், நண்பர்கள் வாழ்த்துகின்றார்கள்.

# உலகைக் கலக்கும் இசைப் புயல்கள்



→ அவர்கள் ஆடினால் காண்போருக்கும் ஆடத்தோன்றுகிறது. அவர்கள் அசைந்தால் பலர் உள்ளங்கள் அசைகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளாக பிரிட்டனி லும், ஏனைய பல நாடுகளிலும் இசைப் புயல் களாக வீசிக் கொண்டிருக்கின்றனர். ஐந்து அழகிகள். அபோர அழகிகள்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நீங்கள் பார்த்திருக்கலாம். கடல் எனத் திரண்ட ரசிகர் வெள்ளத்தில் இவர்கள் மிதந்து கொண்டு இசை நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருப்பார்கள். வெறி பிடித்த ரசிகர் பட்டாளம் 'ஸ்பைஸ் கேள்ஸ்' என்று கிறக்கமாய் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும்.

'த ஸ்பைஸ் கேள்ஸ்' என்பதுதான் இவர களது இசைக்குழுவின் பெயர். இவர்கள் ஆடிப் பாடி வெளியிட்டுள்ள வீடியோ ஆல்பங்கள்தான் கடந்த மூன்று ஆண்டுகளாக உலகில் அதிகள வில் விற்பனையாகி உலக சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றன. பல இலட்சம் டொலர் களை குவித்துக் கொண்டிருக்கின்றன.

மெலானி ஜெனிஸ்பிரவுன், மெலானி ஜெனின் சிஸ்ரோம், எம்மாலி பன்டன், ஜெரால்டின் என்ரெல் ஹாலிவெல் மற்றும் விக்டோரியா அடம்ஸ் என்பவைதான் ஐந்து அழகிகளினதும் அசால் பெயர்கள். ஸ்பைஸ் கேள்ஸ் வெளியிட்ட முதல் மூன்று வீடியோ ஆல்பங்களும் விற்பனை யில் 10 இலட்சம் பிரதிகளைத் தாண்டிச் சாதனை படைத்தன. பிரித்தானியாவில் வெளியாகிய ஆல்பங்களில் அமெரிக்காவில் முதல் இடம் பிடித்ததும் இவர்களுடைய ஆல்பம்தான்.

இவர்களுடைய நாலு ஆல்பங்கள் உலகில் முதல் தரமானவை என்ற தகுதியைப் பெற்றன. உலகில் பெண் இசைக் கலைஞர்களால் வெளி யிடப்பட்டு அதிக அளவில் விற்பனையான முதல் ஆல்பமும் இவர்களுடையதுதான். 'ஸ்பைஸ்' என்ற அந்த ஆல்பம் விற்பனையில் 18 இலட்சம் பிரதிகளைத் தாண்டியது.

ஸ்பைஸ் கேள்ஸ் என்றால் நறு மணமான பெண்கள் என்று அர்த்தம். வெள்ளையழகிகள் மத்தியில் இருக்கும் கறுப்பு முத்தான அழகியின் நாக்கில் ஒரு துளை இருக்கிறது. அதில் குண்டு மணிபோல் ஏதையோ பொருத்தி வைத்திருக் கிறார். அதுதான் அவரது புகழ்வாய்ந்த அடையாளம். பாடும்போது நாக்கை நீட்டிக் காண்பித்துக் கொண்டிருப்பார்.



இலங்கையிலிருந்து கொழும்பு ... பதிப்பகத்தாரால் 15, ... அச்சகத்தில் ... அச்சிட்டு வெளியிடப்படுகிறது.